பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 04 செவ்வாய்க்கிழமை (16.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 082

# மர்மப் பொருள் வெடித்ததில் மாணவர்கள் இருவர் பலி!

## கொழும்புத்துறையில் நேற்று நடந்தது இக்கோரம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 16

நேற்றுப் பிற்பகல் பாடசாலை விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பத்து வயதுச் சிறுவர்கள் இருவர், வீதியோரத்தில் வளவு ஒன்றுக்குள் கிடந்த மர்மப் பொருள் ஒன்றை எடுத்து வந்து வீதியில் குத்தி விளையாடினர். அப்போது அது திடீரென வெடித்ததில் அவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே பலியானார்கள். அதே வீதியால் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டி ருந்த மேலும் ஆறு பாடசாலைச் சிறார்கள் காயமடைந்தனர்.

இக்கோரச் சம்பவம் கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. (23ஆம் பக்கம் பார்க்க)





கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மர்மப்பொருள் வெடிப்புச் சம்பவத்தில் குண்டுச் சிதறல்களால் துளைக்கப்பட்ட இரு மாணவர்களின் சடலங்களையும் அந்த மாணவர்களின் உறவினர்கள் ஆஸ்பத்திரியில் கதறி அழுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: உமா, நேசன், தமிழினியன், நந்தன்)*

## ஜி.எஸ்.பி (+) சலுகை 6மாதங்களில் நிறுத்தப்படும்

பிரஸ்செல்ஸ்,பெப்.16

இலங்கைக்கு வழங்கிவரும் ஜி.எஸ்.பி (+) வர்த்தக வரிச்சலுகையை நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று அறிவித்தது.

மனித உரிமை நிலை மோசமாக இருப்பதை கண்டறிந்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்திருக்கின்றது.

இலங்கைக்கு வருடம் தோறும் 100 மில்லியன் யூரோ வருமானமாக கிடைப்பதற்கு வகை செய்த இந்த உதவியை அடுத்த ஆறு மாதத்தில் நிறுத்த முடிவு செய்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்ததாக 'ரொய்ட்டர்' செய்தி ஏஜென்சி தெரிவித்தது.

ஐரோப்பிய ஒன்றியம் இனங்கண்டுள்ள மனித உரிமை மீறல் விடயங்களை அடுத்த ஆறு மாத காலத்தில் அரசு சீராக்கினால் உதவியை வழங்குவது பற்றி மீள் பரிசீலனை செய்ய முடியும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் ஹரலுக்குச் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-1)

## தேர்தல் களத்தில் சனத் ஜயசூரியா?

கொழும்பு,பெப். 16

இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவரும் அதிரடித் துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூர்ய எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அழைப்பினை ஏற்று அவர் மாத்தறை மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் களமிறங்கவுள்ளார் எனத் தகவல்கள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தையே பொதுத் தேர்தலுக்கும் அரசு முன்வைப்பு

### 'மஹிந்த சிந்தனை-2' தொடர்ந்தும் மக்கள் முன்

கொழும்பு,பெப். 16

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக அரசு புதிதாகத் தேர்தல் விஞ்ஞாபனம் எதையும் வெளியிடாது என்றும் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக வெளியிட்ட 'மஹிந்த சிந்தனை - 2' தேர்தல் விஞ்ஞாபனமே நாடாளுமன்றத் தேர்தலுக்கும் பொருந்தும் என்றும் அரசு நேற்று அறிவித்தது.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறி அரசியல் செய்யும் அரச வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றி பெற்றாலும் கூட அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் எவற்றையும் வழங்குவதில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அரசு சார்பில்

(23ஆம் பக்கம் பார்க்க)

## கட்சித் தலைவர்களுக்கான பாதுகாப்பு ரத்து

கொழும்பு,பெப். 16

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர், செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவின் பாதுகாப்பு நேற்றைய தினம் முதல் விலக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி போன்ற முக்கிய கட்சிகளினதும் ஏனைய கட்சிகளினதும் தலை வர் மற்றும் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா விரைவில் இராணுவ நீதிமன்றின் முன்

கொழும்பு,பெப். 16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெகுவிரைவில் இராணுவ நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்வார் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சரத் பொன்சேகாவின் மனைவி தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள போதிலும், இராணுவம்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகள் முன்னணியின் அலுவலகத்தை ஞாயிறன்று இரவு துருவியது பொலிஸ்!

கொழும்பு,பெப். 16

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆதரவான தேசிய பிக்குகள் முன்னணியின் அலுவலகத்தை சோதனையிடுவதற்குப் பொலிஸார் மேற்கொண்ட முயற்சியை பௌத்த மதகுருமார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கொட்டாஞ்சேனையில் உள்ள பௌத்த விகாரையில் பிக்குகள் முன்னணியின் அலுவலகத்தையே ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிஸார் சோதனையிட முயன்றுள்ளனர்.

தமது அலுவலகத்தை சோதனையிடுவதற்கான அனுமதியைப் பெற்றிராத நிலையிலும் பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனத் தேசிய பிக்குகள் முன்னணி குறிப்பிட்டுள்ளது.

''கொட்டாஞ்சேனை அலுவலகத்தில்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் மருமகனை கைதுசெய்யப் பிடிவிறாந்து

### கோட்டே நீதிமன்றம் பிறப்பித்தது

கொழும்பு,பெப்.16

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்னவைக் கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஹய்கோப் நிறுவனத்துடனான ஆயுத கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான விசாரணைகளுக்கென புலனாய்வுத்துறைப் பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதன்போது சந்தேக நபரான தனுன திலகரட்னவின் வங்கிக் கணக்கை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது எனத் தெரிவித்த புலனாய்வுத்துறைப் பொலிஸார், அவரது தாயாரது வங்கி பாதுகாப்பு வைப்பகத்தில் இருந்து 7 கோடி 50 லட்சம் ரூபா மீட்கப்பட்டுள்ளது எனவும் நீதிமன்றில் தெரிவித்தனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் சம்பந்தியினுடைய வங்கிப் பெட்டகத்தில் ரூ. 5 கோடி?

கொழும்பு,பெப்.16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மருமகன் தனுனாவின் தாயாரின் பாதுகாப்புப் பெட்டகத்தில் பெருமளவு பணமிருந்தமையைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.


இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தனுனா திலகரட்ணவின் தாயார் அசோகா திலகரட்ணவின் முன்னிலையில் நேற்று பாதுகாப்புப் பெட்டகங்களைத் திறந்தவேளை

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.ஐ.ரி நிறுவனத்தின் யாழ்.வளாக ஆரம்ப விழா நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை:
ஐ.ஐ.ரி நிறுவனத்தின் பீடாதிபதி பேராசிரியர் அல்பிரட் பெரேரா, அதன் நிர்வாக பணிப்பாளரும், இலங்கை வங்கியின் தலைவருமான டாக்டர் காமினி விக்கிரமசிங்க, யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும், டாக்டர் காமினி விக்கிரமசிங்க, யாழ்.ஆயர் ஆகியோர் உரையாற்றுவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.
பாடசாலைகளுக்கான தொழில்நுட்பக்கல்வி கற்பித்தல் தொடர்பான உடன்படிக்கை ஒன்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு. ஜெறோ செல்வநாயகம், டாக்டர் காமினி விக்கிரமசிங்க ஆகியோர் கைச்சாத்திடுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.
(படங்கள்: கரன்)

## எல்லே போட்டி

யாழ்ப்பாணம், பெப்.16

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகளில் ஆண்களுக்கான எல்லே போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## இலட்சார்ச்சனை

சுழிபுரம், பெப்.16

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய இலட்சார்ச்சனை நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இலச்சார்ச்சனை பூர்த்தியை தொடர்ந்து சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரைக்கு சுவாமி எழுந்தருளி தீர்த்தம் நடைபெறும். கடலில் மாசி மகத் தீர்த்தம் ஆடுவதற்காக பக்தர்கள் திரளாகக்கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-28)

## மரண அறிவித்தல்



### நாகமணி உலகநாதன்

(சிமெந்துக்கூட்டுத்தாபன முன்னாள் நேரக்கணிப்பாளர்)

மதவடி ஒழுங்கை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிட மாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும், தற்போது உரும்பிராயில் வசித்தவருமாகிய நாகமணி உலகநாதன் நேற்று (2010.02.15) திங்கட்கிழமை பிற்பகல் 4மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி-ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், தம்பிராசா, காலஞ்சென்ற செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற இராசையா மற்றும் இரத்தினம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், உதயகுமாரி (ஆசிரியை, மட்.பட்டிருப்பு ம.ம.வித்தியாசாலை-தேசிய பாடசாலை), கிருசாந்தி (கனடா), உஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆதவன் (அவுஸ்திரேலியா), ஜெயசிங்கம் (கனடா), குமாரராஜா (குமரன்-உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லோஷனன், விகாஸ், நிஷா, பகுஷன்ராஜ், சதுஷாயி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு. (94910) குமரன் (மருமகன்).


## முகவர்கள் தேவை

**Two stars: டபிள் ஸ்ரார் ஓடு**

**50 ஆண்டுகளாக முன்னணியில் இருக்கும் முதலாம் நம்பர் ஓடு**

குடாநாட்டில் தற்போதைய முகவர்கள் :
- திருவருள் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்.
- முத்துக்குமரன் இரும்பு வாணிபம், சாவகச்சேரி.
- மருதம், நெல்லியடி.
- கலா வியாபார நிலையம், திருநெல்வேலி
- சுந்தரமூர்த்தி ஓடு வியாபாரம், ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி. யாழ்.

**பின்வரும் இடங்களுக்கு புதிய முகவர்கள் தேவை**

★ நெல்லியடி ★கிளிநொச்சி ★வேலணை ★வவுனியா
★கொடிகாமம் ★கைதடி ★காரைநகர் ★முல்லைத்தீவு
★ பளை ★பருத்தித்துறை ★தெல்லிப்பழை ★அனுராதபுரம்
★ பரந்தன் ★யாழ்ப்பாணம் ★மன்னார் ★திருகோணமலை

Proprictor : *St.Ritas Tile Factory, Angampitiya, Waikkai.*

யாழ்.தொடர்பு: கே.கனகலிங்கம்
திருச்செல்வம் வீதி, பலாலி றோட், கோண்டாவில்.
தொ.பே: 0776023002, 0777219351
(94901)

## சாரதி தேவை

பிரபல கொம்பனிப் பொருள்களை விற்பனை செய்யும் உள்ளூர் வாகனச் சாரதி தேவை
* வயதானவர்கள் விரும்பத்தக்கது.
(C/564923)


## தவறிவிட்டது

புதிய மோட்டார் சைக்கிளின் பின்பக்க நம்பர் தகடு (NP. VI. 3651 ) அச்சுவேலியில் இருந்து வாதரவத்தை ஊடாக மட்டுவிலுக்குச் செல்லும்போது வீதியில் தவறி வீழ்ந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : சு. செல்வநாயகம்
நாவற்காடு, அச்சுவேலி.
தொ.பே : 0779669563

## மரண அறிவித்தல்கள்



### செல்வி கார்த்திகேசு கமலாதேவி

(ஆங்கில ஆசிரியை)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கமலாதேவி நேற்று (15.02.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலேசியா பென்சனியர் பழனித்தம்பி கார்த்திகேசு -செல்வராணி தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி விமலா தேவி, வெற்றிவேலு, திருமதி சுசிலாதேவி மகோட்கடமூர்த்தி, வாமதேவன், திருமதி உஷாதேவி திருவிளங்கம், திருமதி தேவகி சிறீகாந்தா, பரமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி குமாரதாஸ் வாசுகி, திருமதி அகிலன் வசுமதி ஆகியோரின் சின்னம்மாவும், குமாரதாஸ், அகிலன் ஆகியோரின் மாமியாரும், திருமதி வாமதேவன் சற்குணவதியின் மச்சாளும், செல்வி வாமதேவன் சிந்துஜாவின் அத்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

122/10, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (94912)
தகவல்: கா.வாமதேவன் (சகோதரன்).

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக சேவையாற்றி ஓய்வு பெற்ற

**திருமதி W.தவமணி செல்வரட்ணம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலை.
(94907)


## கோலாகலமான மங்கள விழா

Greenwich Businees School

**யாழ்.கிளை திறப்பு விழா**

19, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
சுபநேரம்: பி.ப 2.30
இன்று (16.02.2010)
செவ்வாய்க்கிழமை.

எமது மாணவர்களின் வெளிநாட்டுக் கல்வியை உறுதி செய்வோம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
(94909)


### திருமதி இராசையா நாகேஸ்வரி



நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி இராசையா நாகேஸ்வரி நேற்று 15.02.2010 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-பொன்னாச்சி தம்பதிகளின் மகளும், கந்தையா இராசையாவின் (அமரர்) அன்பு மனைவியும் நடராசாவின் (கனடா) அன்புச் சகோதரியும், புனிதவதி (லண்டன்), புஸ்பவதி (பிரான்ஸ்), பாலசுப் பிரமணியம் (அமரர்), விமலாவதி (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், துரைராஜ சிங்கம் (பிரான்ஸ்), இராசரத்தினம்(பிரான்ஸ்), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திக் - பிரசன்னா (லண்டன்), நிருமலகாந் - பிரதீபா (பிரான்ஸ்) நிவானி (பிரான்ஸ்), நிரூபியா (பிரான்ஸ்), நிரூபன்(பிரான்ஸ்), நிமால் (பிரான்ஸ்), அஜித் (பிரான்ஸ்), அஸ்வினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், வைஷ்ணவி (பிரான்ஸ்) கார்த்திகா (லண்டன்), அக்சயா (லண்டன்), அமலிதா (லண்டன்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பிரான்ஸில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கந்தசாமி கோவிலடி, நீர்வேலி தெற்கு. (94906)
பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் (பிரான்ஸ்)


## எங்கள் நிறுவனத்தில் இப்பொழுது விற்பனையில்...




**இந்தியாவிலிருந்து நேரடியாக தருவிக்கப்பட்ட ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்**

**எம்மிடம் வாடிக்கையாளராகப் பதிவு செய்த வாடிக்கையாளருக்கு விசேட விலைக்கழிவில் பொருட்கள் வழங்கப்படுகின்றது.**

குறிப்பு : பதிவு செய்தவர்கள் தங்களுக்கான வாடிக்கையாளர் அட்டைகளை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**CEAT** ரயர் மற்றும் **FEVICOl** தயாரிப்புக்களின் யாழ் மாவட்ட ஏகவிநியோகத்தர்கள்

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
சந்தை முன்பாக, மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கலைஞரின் குடுமி சும்மா ஆடாது!

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மீண்டும் ஒரு தடவை சத்தமிட்டு இவ்விடயத்தில் தமது இருப்பை வெளிப்படுத்தியிருக்கின்றார் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்க இலங்கை அரசு தவறுமானால் அதை தி.மு.க. வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா இராது என மிரட்டல் விட்டிருக்கின்றார் அவர்.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒரு விவகாரம்தான். இனிமேல் இதையும் விட மேலும் தீவிரமாக அவர் எகிறிக் குதிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான கொடூர யுத்தம் கட்டவிழ்ந்து, பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகக் கொன்றொழிக்கப்பட்ட போதே அதைத் தடுக்க வக்கற்றவராக இருந்துகொண்டு பல்வேறு அரசியல் திருகுதாள நாடகங்களை வெற்றிகரமாக அரங்கேற்றிய பெரும் கலைஞர் அவர்.

தமிழகத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூண்டோடு இராஜிநாமாச் செய்வர் என்ற மிரட்டல் நாடகத்தோடு தொடங்கி, மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம், புதுடில்லி அரசை எச்சரிக்கும் விதத்தில் அனைத்துக் கட்சிக் குழுவினருடனும் புதுடில்லி படையெடுப்பு (விஜயம்), உப்புச்சப்பற்ற வகையில் தமிழக சட்டசபையில் பிரயோசனமற்ற தீர்மானங்கள், 'ஐயகோ! தமிழினம் அழிகின்றதே!' - என்னும் சாரப்பட அழுது வடியும் அறிக்கைகள் என்று தொடர்ந்து, கடைசியாக சுமார் நான்கு மணி நேரம் நடத்திய சாகும்வரையான(?) உண்ணாவிரதப் போராட்டம் வரை இந்த நாடகங்களின் வரிசை நீண்டது.

இறுதியாக, ஈழத் தமிழருக்கான தமது சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை சில மணி நேரம் கூட நீடிக்கமுடியாத அவர் ஈழத்தில் யுத்தநிறுத்தம் வந்துவிட்டதாக அறிவித்துவிட்டு தமது உண்ணாவிரதக் கதையை முடித்துக் கொண்டமைதான் மிக மோசமான ஈழத் துரோக நடவடிக்கையாகும்.

அவரது அந்த யுத்த நிறுத்தப் பிரகடனம் பற்றிய அறிவிப்பின் பின்னர்தான் வன்னியில் மக்கள் பேரழிவு மிக உச்சத்தை எட்டியது. அந்த அழிவுகள் பற்றிய சர்வதேசத்தின் கவனத்தைத் திசை திருப்பி, தவறாக வழி நடத்தும் விதத்தில் கருணாநிதியின் அந்த அறிவிப்பு அமைந்தது. தமது அரசியல் சுயலாபச் செயற்பாட்டுக்காக, ஈழத் தமிழர்கள் மீது தொடுக்கப்பட்டிருந்த கொடூர யுத்தம் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை அந்த இக்கட்டான சமயத்தில் இவ்வாறு தவறான திசைக்குத் திருப்பிவிட்டு - 'யுத்தம் நின்றுவிட்டது, தமிழர்கள் அழிவு தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது' என்ற தவறான கருத்தியலை சர்வதேசத்துக்கும் ஏற்படுத்தி - வரலாற்றுத் துரோகமிழைத்தவர் கருணாநிதி என்பதை உலகத் தமிழினம் மறக்காது.

கடந்த மே மாதத்தில் நடந்த இந்தியப் பொதுத் தேர்தலுக்கு முன்னர், மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு, தனது பெரும்பான்மைக்கு தி.மு.க. போன்ற தோழமைக் கட்சிகளின் தயவில் தங்கியிருந்தது. அந்தச் சமயத்தில் கூட ஈழத் தமிழினத்துக்காக மத்திய அரசைக் கொண்டு ஆக்கபூர்வமாக எதையுமே செய்ய வைப்பதற்கு லாயக்கற்றவராகவே கருணாநிதி இருந்தார். அச்சமயம் இலங்கையில் நடந்த யுத்தம் தொடர்பில் ஈழத் தமிழருக்கு ஆதரவாகச் செயற்பட வைக்க அல்ல - குறைந்தபட்சம் ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படாமல் மத்திய அரசைத் தடுக்கக் கூட அவரால் இயலாமல் போயிற்று.

இப்போது - கடந்த மே மாதத்துடன் - இந்திய அரசியல் நிலைமை இன்னும் மாறிவிட்டது.

புதுடில்லியில் ஆளும் காங்கிரஸ் கட்சி, தனது கூட்டணிக் கட்சியான தி.மு.க. போன்றவற்றின் உதவியோ, தயவோ இன்றியே தனித்து - தன் சொந்தக் காலில் - உறுதியாக ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொண்டுவிட்டது.

ஆனால், மறுபுறமாகத் தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் பெரும்பான்மைப்பலம் இல்லாத தி.மு.க. அரசோ, தனது ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்குத் தொடர்ந்தும் காங்கிரஸ் கட்சியின் தயவில் - ஆதரவில் - தங்கிநிற்க வேண்டிய கட்டாயம்.

இந்த நிலையால் ஈழத் தமிழர் விடயத்தில் கலைஞர் கருணாநிதியின் கூத்தெல்லாம் வெறுமனே இலங்கை அரசுக்கு எதிராக மட்டுமே இருக்கமுடியும். மத்தியில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் அரசுடன் முட்டுப்படாமல் தான் அவர் எதையும் செய்யமுடியும்.

சரி. இவ்வளவு நீண்ட மௌனத்துக்குப் பின்னர் மீண்டும் இப்போது ஏன் கொழும்பு அரசு மீது காட்டமாகப் பாய முயன்றிருக்கின்றார் கலைஞர்? சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள். அதே கதைதான் இங்கும்!

தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவுக்கும் காங்கிரஸுக்கும் இடையே நல்லுறவு மீண்டும் அரும்ப - மலர - தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டால் மறுபுறத்தில் தமது தி.மு.க. அரசியல் நடத்துவதற்குப் பொருத்தமான கோஷங்கள் - அரசியல் சர்ச்சைகள் - அக்கட்சிக்குத் தேவை. அத்தகைய ஒன்று ஈழத் தமிழர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்கும் விவகாரம். அதனால் முற்கூட்டியே களத்தைத் தயார் படுத்துகின்றார் பழுத்த அரசியல் நடிகரான கலைஞர் கருணாநிதி. அவ்வளவுதான்!

## வலி.வடக்கில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில்

# உடனடியாக மீளக்குடியமர விரும்புபவர்கள் வியாழனுக்கு முன் பதிவு செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம்,பெப்.16

வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள 11கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் உடனடியாகக் குடியமர விரும்புபவர்களை தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் பதிவுகளை உடன்மேற்கொள்ளுமாறு வலி.வடக்கு மீள்குடியேற்ற புனவர்வாழ்வுக்குழு கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.வடக்கில் அண்மைக்காலத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, இளவாலை கிழக்கு, பன்னாலை, பளை-வீமன்காமம் முதலான 11 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் உடனடியாகச் சென்று குடியேற விரும்புவோர் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்பு இப்பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கான ஒழுங்குகளைத் தெல்லிப்பழை பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இக்குழு கூடிய கூட்டத்தில் மீளக்குடியேறுவதில் உள்ள இடர்பாடுகளையும் இப்பகுதிகளிலுள்ள பொருள்கள் நாளாந்தம் சூறையாடப்படுவதையும் மக்கள் எடுத்துக் கூறினர்.

இந்நிலையில் மீளக்குடியமர் வதற்கான ஒழுங்குகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதென்றும் களவுகளைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் விழிப்புக்குழுக்கள் அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஏனைய உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமான மகஜர் ஒன்றை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிப்பது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (ஒ-1)

## ஐ.ஐ.ரி நிறுவனத்தின் யாழ்.வளாக ஆரம்பவிழா நேற்று

# சர்வதேச பல்கலைக்கழகங்களின் பட்டங்களை யாழ்.இளைஞர், யுவதிகளும் பெற நல்ல வாய்ப்பு

## தவறவிடாதீர்கள் என்கிறார் யாழ்.ஆயர்



யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்ப்பாண இளைஞர், யுவதிகள் தமது கல்வி அறிவை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு இப்போது நல்லதொரு சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றது. அதனை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை.

ஐ.ஐ.ரி நிறுவனத்தின் யாழ். வளாக ஆரம்ப விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.ஐ.ரி நிறுவனத்தின் யாழ்.வளாக ஆரம்ப விழா நேற்று மாலை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சென். மாட்டீன் வர்த்தகக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆயர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு இன்று ஒரு பொன்னான நாள். உலகில் முன்னணியில் திகழும் சர்வதேச பல்கலைக்கழகங்களின் பட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு மிகச்சிறந்ததொரு சந்தர்ப்பம் இப்போது கிடைத்துள்ளது. இதனையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்.மக்கள் கல்வித்துறையில் நன்கு பெயர் பெற்றவர்கள். அவ்வாறானவர்களுக்கு இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை வரவேற்புக்குரியது. இளைஞர், யுவதிகள் இந்த வாய்ப்பைத் தவறவிடாமல் சரியாகப் பயன்படுத்தி தமது தொழில்நுட்ப அறிவை நன்கு வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஐ.ஐ.ரி நிறுவனம் முழுமையான பங்களிப்பை வழங்கும் என நான் கருதுகின்றேன் - என்றார்.

ஐ.ஐ.ரி நிறுவனத்தின் பீடாதிபதி பேராசிரியர் அல்பிறட் பெரேரா தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப விழாவில் ஐ.ஐ.ரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் இலங்கை வங்கியின் தலைவருமான டாக்டர் காமினி விக்கிரமசிங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் ஐ.ஐ.ரி நிறுவனத்தின் செயற்பாட்டு முகாமையாளர் துசிதகல்பகே, யாழ்.வளாக இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ்.மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் வங்கிகளின் முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஏனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-50)

# 4 வருடங்கள் தடுப்புக் காவலில் இருந்த குருநகர் இளைஞன் பிணையில் விடுவிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 4 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த குருநகர் இளைஞனை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அனுமதித்தார்.

குருநகரைச் சேர்ந்த நல்லசீலன் ஜீவகுமார் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி வேம்படிச் சந்தியில் வைத்து இரண்டு கிரேனட்டுகளுடன் கைதுசெய்யப்பட்டார் என நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் மீண்டும் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இளைஞன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு. றெமிடியஸ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞனை பிணையில் விடுவிக்க அனுமதிக்குமாறு வாதாடினார்.

அரச சட்டவாதி எஸ். சூசைதாஸன் பிணை வழக்குவதறங்கு, றெமிடியஸின் வாதங்களை ஏற்று இளைஞனை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதி வழங்கினார். (ஒ-1)

# வெலிக்கடைச் சிறையில் கைதிகள் கூரை மீது ஏறி எதிர்ப்புத் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.16

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர் வெலிக்கடைச் சிறைச்சாலைக் கூரையின் மீதேறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிணை வழங்குவதில் நிலவுகின்ற தாமதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து 15 சந்தேகநபர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என சிறைச்சாலை ஆணையாளர் கெனட் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தச் சந்தேகநபர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள குழுவினர் அல்லர் எனவும் அவர் தெரிவித்தார்.

வெலிக்கடை இருமாடி சிறைச்சாலைக் கட்டடத்தில் 'எல்' மண்டபத்தின் கூரை மீதேறியே இந்தச் சந்தேகநபர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.(ஒ-சி)

## நாளை

| | |
|---|---|
| மாசி 05 | 17.02.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | திருதியை |
| | பி.ப. 1.44 வரை |
| நட்சத்திரம்: | உத்தராட்டாதி |
| | பி.இ. 1.31 வரை |
| [illegible]: | 05.03-06.33 வரை |
| ராகுகாலம்: | 12.33-02.03 வரை |

# மூலதனச் சந்தை: இணுவில் கல்லூரியில் நாளை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.16

இலங்கையின் மூலதனச் சந்தை தொடர்பான கருத்தரங்கு நாளை புதன்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

ஜி.சீ.ஈ உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் கலைப்பாடத்தில் பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், கற்கும் மாணவர்களுக்கும் காலை 8.30 முதல் பி.ப. 12.30 மணி வரையும் ஜி.சீ.ஈ சாதாரண தர வகுப்பில் வணிகக் கல்வியும் கணக்கீடும், முயற்சியாண்மை ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள், கற்கும் மாணவர்களுக்கு பிற்பகல் 12.45 முதல் 1.45 மணி வரையும் கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ஒ-1)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.16

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப.1.30மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் ந.ஜெயகுமாரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்து கொள்வார். (ஒ-207)

* * *

சுன்னாகம், பெப்.16

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சு. ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு பிரதேச செயலக கணக்காளர் ம.சிவகுமாரும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் ச.தனபாலசிங்கமும் கலந்து கொள்வர். (ஒ-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா கட்டளையிட்டால் மறுநிமிடமே தமிழக அரசை எதிர்த்துப் போராடத் தயார்!

## தமிழக காங். தலைவர் தங்கபாலு உறுதி

சென்னை,பெப்.16

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி கட்டளையிட்டால், தமிழக அரசை எதிர்த்துப் போராடத் தயங்க மாட்டோம் - என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வீ.தங்கபாலு தெரிவித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் மாநிலத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியின் 70ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, தீவிரவாத எதிர்ப்புக் கருத்தரங்கம் சென்னை காமராஜர் அரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

நான் இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது பல போராட்டங்களை நடத்தியவன்தான். பலமுறை சிறைக்கும் சென்றுள்ளேன். ஆனால், இன்று கூட்டணி ஆட்சி முறை என்பது கட்டாயம் ஆகியுள்ளது. இந்தச் சூழலில் இந்தியாவை காங்கிரஸ் கட்சி ஆள வேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டில் நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது.

கட்சித் தலைவர் சோனியா காந்தியின் கட்டளை எதுவோ, அதை ஏற்று செயல்படுவதுதான் நம் கடமை. ஒருவேளை, தமிழ்நாடு அரசை எதிர்த்துப் போராடுமாறு சோனியா காந்தி கட்டளையிட்டால், சட்டப்பேரவையில் இந்த அரசுக்கு எதிராக காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் குரல் நிச்சயம் ஒலிக்கும். தமிழ்நாடு முழுவதும் நம் கட்சித் தொண்டர்கள் இந்த அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடுவார்கள். போராட்டத்தைக் கண்டு நாம் யாரும் தயங்கவில்லை - என்றார்.



அந்நிகழ்ச்சியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம்பேசியவை வருமாறு -

தமிழகத்தில் கடந்த 42 ஆண்டுகளாக நம்முடன் கூட்டணி அமைத்த திராவிடக் கட்சிகள்தான் ஆட்சியில் அமர்கின்றன.

ஒரு அரசியல் கட்சிக்குப் பிரசாரமும், போராட்டமும்தான் முக்கிய அடையாளங்கள். ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை நம்மிடம் பிரசாரமும் இல்லை, போராட்டமும் இல்லை.

கூட்டணி என்ற காரணத்துக்காக இங்கு நடைபெறும் ஆட்சியை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்தக் கூட நாம் தயங்குகிறோம்.

நம்மால் ஆட்சியிலும் பங்குபெற முடியவில்லை. ஆட்சியை விமர்சனமும் செய்ய முடியவில்லை. இந்த அரசுக்கு எதிராக சட்டப்பேரவையில் நம் கட்சி எம்.எல்.ஏ.க்கள் ஒருநாள் கூடப் பேசியதில்லை.

மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராட்டம் நடத்த வேண்டும்; அரசை எதிர்த்து விமர்சனம் செய்ய வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு காங்கிரஸ் கட்சி மீது நம்பிக்கை வரும். அத்தகைய நிலை ஏற்பட்டால் தமிழ்நாட்டில் விரைவிலேயே காங்கிரஸ் தலைமையில் தனி கூட்டணி அமைக்க முடியும் - என்றார்.

# எல்லை தாண்டி மீன்பிடித்த 9 இலங்கை மீனவர் கைது

இராயபுரம்,பெப்.16

இந்தியக் கடல் பகுதியில் கடலோர காவல் படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, 2 படகுகளில் சிங்கள மீனவர்கள் சிலர் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

உடனே, 2 படகுகளையும் சுற்றி வளைத்த காவல்படையினர் அதில் இருந்த 9 மீனவர்களையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்த 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் 9 பேரையும் சென்னை துறைமுக மிதக்கும் காவல் நிலையத்தில் கடலோரக் காவல் படையினர் ஒப்படைத்தனர்.

சிங்கள மீனவர்கள் 9 பேர் மீதும் துறைமுக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் 9 பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பவுள்ளனனர்

## இந்தியச் செய்திகள்

# ஈழத்தமிழர்களின் துயர் துடைக்க நல்லதொரு தீர்வைக் காண்போம்!

## மத்திய அமைச்சர் பரூக் அப்துல்லா நம்பிக்கை

சென்னை,பெப்.16

அனைவருக்கும் மிகவும் துயரம் ஏற்படுத்தக் கூடியதொரு விடயமாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை உள்ளது. நாம் எல்லோரும் இணைந்து இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்க ஒரு நல்ல தீர்வைக் காண்போம்.

- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பரூக் அப்துல்லா.

சங்கத் தமிழ்ப் பேரவை சார்பில் முதல்வர் கருணாநிதிக்கு சென்னையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது.

அவ்விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் அதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு பேசியவை வருமாறு-

தமிழக முதல்வர் கருணாநிதியும், எனது தந்தை ஷேக் அப்துல்லாவும் மாநில உரிமைகளுக்காக மத்திய அரசுடன் தொடர்ந்து போராடி அதில் பல வெற்றிகளையும் பெற்றுள்ளனர்.

நம்நாட்டில் மாநிலங்களுக்கு இடையே ஆழமான புரிந்துணர்வும், மதங்களுக்கு இடையே அமைதியும் காண வேண்டியது மிகவும் அவசியம். அத்தகைய அமைதியை ஏற்படுத்துவதில் கருணாநிதி சிறப்பாகப் பணியாற்றுகிறார்.

நம் அனைவருக்கும் மிகவும் துயரம் ஏற்படுத்தக் கூடியதாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை உள்ளது, நாம் எல்லோரும் இணைந்து இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்க ஒரு நல்ல தீர்வை காண்போம் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

இவ்விழாவில் மத்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா பேசியவை வருமாறு-

தி.மு.க. தலைவர்களோடு நான் கடந்த 40 ஆண்டு காலமாக நெருங்கி பழகி வருகிறேன். முதல்வர் கருணாநிதி அனைத்துத்தரப்பு மக்கள் வாழ்விலும் வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் ஆட்சி நடத்துகிறார். அதற்கேற்ற திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துகிறார்.

கருணாநிதி அரசு அறிமுகப்படுத்தும் பல திட்டங்கள், பின்னர் ஆந்திரம், கர்நாடகம் போன்ற பிற மாநிலங்களிலும் செயற்படுத்தப்படுகின்றன.

தனது சிறப்பான செயற்பாடுகள் மூலம் இந்தியாவில் உள்ள மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரி முதல்வராக கருணாநிதி திகழ்கிறார்.

தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி, தனது பணிகளின் மூலம் தென்னிந்தியாவுக்கே வழிகாட்டும் தலைவராக கருணாநிதி விளங்குகிறார். மேலும் அவர் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டும் தலைவர் அல்லர். உலகெங்கும் வாழும் தமிழர்களின் துயர் போக்கும் தலைவராக கருணாநிதி வாழ்கிறார் - என்றார்.

# மகளின் நிச்சயதார்த்த அழைப்பிதழை கலைஞருக்கு நேரில் வழங்காதமை ஏன்?

## சூரியனை நெருங்கினால் சுடும்; ரஜினி விளக்கம்

மகளின் நிச்சயதார்த்த அழைப்பிதழை முதல்வர் கருணாநிதிக்கு நேரில் சென்று கொடுக்காதமை ஏன் - என்று நடிகர் ரஜினி காந்த் விளக்கமளித்துள்ளார்.

சங்கத்தமிழ் பேரவை சார்பில் முதல்வர் கருணாநிதிக்கு நடந்த பாராட்டு விழாவில் ரஜினிகாந்த் கலந்துகொண்டு பேசியவை வருமாறு -

சென்னையில் சிலை திறக்கப்பட்ட சர்வக்ஞர் ஒரு பகுத்தறிவாதி. சாதியை வெறுத்தவர். அனைத்துத் தரப்பினரும் எப்படி வாழ வேண்டும் என்று வரைமுறை வகுத்தவர். அவர் ஒரு சித்தர். அவருடைய சிலையை இங்கே வைக்க முதல்வர் கருணாநிதி பெரும் முயற்சி எடுத்தார். இதற்காக அவரை நான் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். அதே போல் பெங்களூரில் திருவள்ளுவர் சிலை அமைக்க முதல்வர் கருணாநிதி பெரும் முயற்சி எடுத்தார்.

அவர் வாழும் வரலாறு. வாழும் வழிக்காட்டி என்று கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறினார். ஜெகத்ரட்சகன் சொன்னமைபோல தமிழ்நாட்டில் பிறந்த அரசியல்வாதிகள்தான் மத்திய அரசியலை கைக்குள் வைத்திருக்கிறார்கள்.

என் மகள் திருமண நிச்சயதார்த்த அழைப்பிதழை முதல்வர் கருணாநிதியிடம் நேரில் சென்று கொடுக்க வேண்டும் என்றும், நீங்கள் செல்லவில்லையானால் தப்பாக நினைப்பார்கள் என்றும் எனது மனைவி கூறினார். நான் அதற்கு, கலைஞர் எப்போதும் தவறாக நினைக்க மாட்டார். நீங்கள் போங்கள் என்று கூறினேன். சூரியன் அருகில் சென்றால் சுடும். தூரத்தில் சென்றால் குளிர்ந்து விடும். நான் நெருங்கியும் செல்லமாட்டேன். வெகு தொலைவிலும் சென்றுவிடமாட்டேன். முதல்வர் கருணாநிதி நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் - என்றார்.

# புனே குண்டுவெடிப்புச் சம்பவத்தால் இந்தியா - பாக். பேச்சு தடைப்படுமா?

## சென்னையில் எஸ்.எம்.கிருஷ்ணா பேட்டி



புனே நகர் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் எதிரொலியாக இந்தியா-பாகிஸ்தான் இடையேயான பேச்சு தடைப்படுமா என்பதற்கு மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பதிலளித்தார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே வரும் 25ஆம் திகதி டில்லியில் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான பேச்சு நடக்கவிருக்கிறது. இதனிடையே, பேச்சைச் சீர்குலைக்கும் விதமாக புனே நகரில் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் 9 பேர் கொல்லப்பட்டனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் சென்னை வந்த அமைச்சர் கிருஷ்ணாவிடம், புனேயில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் காரணமாக இந்தியா - பாகிஸ்தான் இடையேயான பேச்சு தடைப்படுமா என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்குப் பதிலளித்து அவர் கூறியவை வருமாறு -

இப்போதைக்கு பேச்சுக் குறித்து நான் எதுவும் பேசப்போவதில்லை. ஏற்கனவே, தேசிய புலனாய்வு அமைப்பினரும், தடயவியல் நிபுணர்களும் புனே நகரில் உள்ளனர்.

அவர்கள் (தீவிரவாதிகள்) பீதியை உருவாக்க விரும்புகிறார்கள். துன்பத்தை ஏற்படுத்தி குழப்பத்தை உருவாக்குவதற்கான விதைகளையும் தூவுகிறார்கள். தீவிரவாதிகளின் இதுபோன்ற செயல்களுக்கு நாங்கள் அடிபணிந்து விடமாட்டோம்.

புனே நகர குண்டு வெடிப்புச் சம்பவம் மிகவும் துயரமானது. துரதிர்ஷ்டவசமானது. இது போன்ற தீவிரவாத செயல்களை இந்தியா உறுதியுடன், தீர்க்கத்துடனும் எதிர்கொள்ளும்.

இரு நாடுகளிலும் இடையே அமைதியை ஒருபுறவும் ஏற்படுவதற்கு எதிராக தீவிரவாதம் என்னும் தீய சக்திகள் இருப்பதை இந்தியா நன்கு அறியும் - என்றார்.

# புதுடில்லி உட்பட மூன்று நகரங்களை தாக்க தீவிரவாதிகள் சதித் திட்டம்!

## உளவுத்துறை எச்சரிக்கை



புதுடில்லி,பெப். 15

புனே குண்டு வெடிப்பைத் தொடர்ந்து புதுடில்லி உட்பட 3 நகரங்களை தகர்க்கத் தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர் என உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, அந்த நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் குறித்து உள்துறை அமைச்சர் சிதம்பரத்துடன் பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் அவசர ஆலோசனை நடத்தினார். மகாராஷ்டிர மாநிலம் புனேயில் உணவகம் ஒன்றில் கடந்த சனியன்று தீவிரவாதிகள் வைத்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் 9 பேர் பலியாயினர். 57 பேர் காயமடைந்தனர். மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு இதுதான் மிகப் பெரிய தாக்குதல்.

அரசு எடுத்துவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் தீவிரவாத தாக்குதல்கள் குறைந்து விட்டதாக கருதப்பட்ட நிலையில், புனே குண்டு வெடிப்பு நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், டில்லி, உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூர், மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூர் ஆகிய 3 நகரங்களைத் தகர்க்க தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்ற திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நகரங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது.

புனேயில் குண்டு வெடிப்பு நடந்த இடத்தை மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் பார்வையிட்டார். முதல்வர் அசோக் சவாகன் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர், மும்பையில் இருந்து டில்லி சென்ற அவர் நாட்டின் பாதுகாப்பு குறித்து ஆராய உயர் நிலைக் குழுக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டினார்.

இதில், மத்திய உள்துறை செயலாளர் ஜி.கே.பிள்ளை, உளவுத் துறை மற்றும் 'ரோ' அமைப்பின் தலைவர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சேதமுற்ற பள்ளிவாசல்களைப் புனரமைக்க முஸ்லிம் எம்.பிக்கள் எந்தவிதத்திலும் உதவி செய்யவில்லை

## மாநகர சபை உறுப்பினர் சுபியான் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்.பெப்.16

யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த முஸ்லிம் பள்ளிவாசல்களைப் புனரமைப்பதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் எந்தவிதமான உதவிகளையும் வழங்கவில்லை.

யாழ்.மாநகர சபையின் உறுப்பினர் மௌலவி எஸ்.சுபியான் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. அந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2002ஆம் ஆண்டு சமாதானம் ஏற்பட்ட போது இங்கு 66குடும்பங்கள் மீளக்குடியமர்ந்தன. திடீரென ஏ-9பாதை மூடப்பட்டதன் பின்னர் இங்கு குடியமர்ந்த மக்கள் சொல்லெண்ணாத் துயரங்களை அனுபவித்து வந்தனர்.

அந்தக் காலங்களில் எமது மக்களுக்காக மக்கள் பணிமனை ஊடாகப் பல்வேறு உதவிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் விரைந்துமுன்னெடுத்தோம்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எம்மோடுநின்று தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கினர்.

குறிப்பாக ''போரூட்'' நிறுவனம் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு நிதி உதவிகளை வழங்கியது.

முஸ்லிம் பள்ளிவாசல்களைப் புனரமைப்பதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து நிதி உதவிகளை வழங்கினார்கள்.

ஆனால் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து எந்தவித உதவிகளையும் வழங்கவில்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

எனவே முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விடயத்தில் நாம் அனைவரும் ஓரணியில்நின்று மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்தி முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் பாடுபடுவோம் -என்றார். (50-9)

# மல்லாவியில் 'நியாப்' திட்ட நிவாரணப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.பெப்.16

மீள்குடியேற்றப்பட்ட மல்லாவி, துணுக்காய் போன்ற இடங்களில் நியாப் திட்டத்தின் கீழ் மக்களுக்கான நிவாரணத் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே மன்னார், வவுனியா மீள்குடியேற்றப் பகுதியில் இப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (1-19)

# பல வருடங்களாகத் திருத்தப்படாத வீதி

சுழிபுரம், பெப்.16

சுழிபுரம், இறாத்தலடி தொடங்கி திருவடிநிலை கடற்கரைவரை செல்லும் 2 கிலோமீற்றர் தூரமுள்ள பாதை பாவனை செய்யமுடியாத நிலையில் உள்ளது.

இதனால் மரணச் சடங்குகள் செய்வதற்குத் திருவடிநிலை செல்லும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவ் வீதியில்தான் வறுத்தோலைக் கிராமம் உள்ளது. இதில் சுமார் 40 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன. இவர்கள் அனைவரும் கடற்றொழிலை மேற்கொள்பவர்கள். இத் தொழிலுக்காகக் கடலுக்குச் செல்வதற்கும் இப்பகுதியில் அமைந்துள்ள திருவடி நிலை, காட்டுப்புலம், ஐக்கியசங்கம் மற்றும் விக்ரோறியாக் கல்லூரி போன்ற இடங்களுக்குச் செல்வதற்கும் மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் அனைவரும் மழைகாலங்களில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. 50வருடங்களுக்குமேல் திருத்தப்படாத இவ்வீதியைத் திருத்தித் தருமாறு சுழிபுரம் பிரதேச சபைக்குப் பலமுறை விண்ணப்பித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ரி-29)

# ஆனைக்கோட்டை சிவன் கோயில்வரை குடிதண்ணீர் திட்டத்தை விஸ்தரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்.பெப்.16

நவாலி வரை கொண்டுவரப்பட்டுள்ள குழாய் மூலமான குடிதண்ணீர் திட்டத்தை ஆனைக்கோட்டை சிவன் கோயில்வரை விஸ்தரிக்க வேண்டும்.

இவ்வாறு ஆனைக்கோட்டை விநாயகர் ச.ச.நிலையத் தலைவர், யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை பொறியியலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

நவாலி மக்களைப் போன்றே ஆனைக்கோட்டை மக்களாகிய நாமும் கடந்த 100 வருடங்களாகக் குடிதண்ணீர் பெறுவதற்கு நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது. எனவே சுன்னாகம்-பொக்கணையூடாக வரும் குழாய் மூலமான குடிதண்ணீரை விஸ்தரித்துவழங்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (1-302)




# திருநெல்வேலிச் சந்தையைச் சூழவுள்ள வீதிகளில் பெரும் வாகன, சன நெரிசல்

வண்ணை, பெப்.16

திருநெல்வேலிச் சந்தையைச் சூழவுள்ள வீதிகளில் நெரிசலான நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைக் கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதால் நடைபாதைக் கடைகள் மற்றும் வாகனப் பாதுகாப்பு நிலையங்களை சந்தைக்கு உள்ளே அனுமதிக்க முடியாமல் இருப்பதாகவும், மார்ச் மாதமளவில் கட்டட வேலைகள் பூர்த்தி அடைந்ததும் நடைபாதைக் கடைகள் மற்றும் வாகன பாதுகாப்பு நிலையங்கள் சந்தையின் உட்புறத்தில் அமைக்கப்பட்டதும் தற்பொழுது இருந்து வரும் நெரிசல் நிலை சீராகுமென பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ரி-160)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் குருதிக் கொடையாளர் கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற குருதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு குருதியைவழங்கியகொடையாளர்களான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் படத்தில் காணலாம். (50-20)

# ஒரு கிலோ 'ஒறேஞ்' 200 ரூபா; மொழி தெரியாவிட்டாலும் அமோக வியாபாரம்



யாழ்ப்பாணம்.பெப்.16

தமிழ் மொழி சுத்தமாகத் தெரியாவிட்டாலும் கூட யாழ்ப்பாணத்தில் அமோகமாக வியாபாரம் செய்யமுடியும் என்பதைக் குடாநாட்டில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் தென்னிலங்கைச் சிங்கள வியாபாரிகள் அண்மைக் காலமாக நிரூபித்து வருகின்றனர்.

குறிப்பாக-குடாநாட்டு மக்களிடையே அண்மைக் காலமாகப் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ள சிறிய ரக 'ஒறேஞ்' பழங்களை இவர்கள் குடாநாட்டின் பல பாகங்களிலும் விற்பனை செய்து வருகின்றனர். தமிழில் ஒரு வார்த்தைகூட உச்சரிக்க முடியாத இந்த வியாபாரிகளின் '1 கிலோ ஒறேஞ் 200 ரூபா' என்பதனை அட்டைகளில் எழுதித் தொங்க விட்டுள்ளனர். இதனால் எவ்வித சிரமங்களுமின்றி சூடு பறக்கும் விற்பனையை நிகழ்த்துவதோடு அதிக வருவாயையும் ஈட்டி வருகின்றனர். (04-224)

# வலி. தென்மேற்குப் பிரதேச விவசாயிகள் கூடுதல் நெல் விளைச்சலைப் பெற்றுள்ளனர்

## விவசாயப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.16

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் நிலவிய நல்ல காலநிலை மாற்றங்களினால் விவசாயிகள் கூடுதல் நெல் விளைச்சலைப் பெற்றுள்ளனர்.

எனினும் சிலருக்கு விளைச்சல் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானவர்கள் காப்புறுதி மூலம் நன்மையடைவர்.

இவ்வாறு பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரிவாக்கம்) சி. சிவகுமார் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் ''வயல் விழா'' தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க. முதலியார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சி. சிவகுமார் தெரிவிக்கையில்-

விவசாயிகள் இவ்வருடம் கிடைத்த நல்லின நெல் விதைகளை முறைப்படி சேமித்து அடுத்தவருடப் பெரும்போகத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

மேலும் மேலதிக நெல்லைசந்தைப்படுத்தி வருமானத்தைப் பெறலாம்- என்றார்

விவசாய போதனாசிரியர் திருமதி ப.மணிவண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார் (1-302)



ஜெயந்தா கைத்தொழில் பூங்கா நிறுவனத்தினால் பருத்தித்துறை கற்கோவளத்தில் ஐஸ் தொழிற்சாலை ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் நாடாவை வெட்டித் தொழிற்சாலையைத் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட சுன்னாகம் ஹற்றன் நஷனல் [illegible] வங்கியின் முன்னாள் உதவிப்பொதுமுகாமையாளரும் யாழ்ப்பாண யூனியன் வங்கி முகாமையாளருமான க.பாலசுப்பிரமணியம், கற்கோவளம் கிராமசே[illegible]வதை இரண்டாவது படத்திலும், பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சந்திரயோகன் மங்கள விளக்கேற்றுவதை மூன்றாவது படத்திலும், நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி திருநாவுக்கரசு சேந்தன் வரவேற்புரை ஆற்றுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவு தினமும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
### சிங்காரம் செல்லமாணிக்கம் (மாணிக்கம்)

மலர்வு
11★08★1937

உதிர்வு
18★01★2010

அன்னார் காலஞ்சென்ற சிங்காரத்தின் மனைவியும் ராசா, நாகராசா, ராசகோபால், ஆனந்தன், குட்டி, தவம், சோதி, சித்திரா ஆகியோரின் தாயாரும், மகேஸ், கிளைட்டி, சாந்தி, நேசம், பவுண் ஆகியோரின் மாமியாரும், தாசன் (மனைவி) சசி, ஜொபானி, பைக்கியோ, ஜொபான், சந்துஸ், உஷானி, விஷ்னு, சுமன், லக்சனா, பவிதா, கீர்த்தி, சங்கீதா, தீபனா, தேவா ஆகி யோரின் பேர்த்தியாரும் யாழ்மதி, அருள்மதி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.02.2010) புதன்கிழமை காலை 6 மணிக்கு மகன் குட்டியின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.இந்த நிகழ்விலும் மதிய போசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி: நாகர் கோயில் கிழக்கு,
நாகர்கோயில்.
தற்காலிக முகவரி:ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை

தகவல்:
மகள், சண்டிகா
பரமேஸ்வரி (தவம்),
பிள்ளைகள் - கீர்த்தி,
சங்கீதா, தீபா.

(92155)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஆளுநர்சபை உறுப்பினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவு தலைவருமான திரு.எட்வேட் அருந்தவசீலன் அவர்களின் அன்புத்தந்தையார்

அமரர்
**நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எட்வேட் J.P**

அவர்கள் இறைபதம் அடைந்ததை அறிந்து பெரும் துயருற்றும், அன்னாரது மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா ஆண்டவருடன் சங்கமமாகி சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

தலைவர், ஆளுநர்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், தொண்டர்கள்.
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்- யாழ். கிளை.
(சி/884915)

## கண்ணீர் அஞ்சலி

எமது இசைத்துறை விரிவுரையாளர் திரு.தவநாதன் றொபேட் அவர்களின் அன்புத் தந்தை

### திருச்செல்வம் தவநாதன்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.** (94897)

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா இராஜதுரை



(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)

மட்டுவில் தெற்கு, மருதங்குளத்தைப் பிறப்பிட மாகவும் 442/2, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமா கவும் கொண்ட செ.இராஜதுரை நேற்று 15.02.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை- வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சிவலை-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் யோகேஸ் வரியின் அன்புக் கணவரும் பிரேம்குமார், பிரதீப்குமார் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் வாசுகி, காவேரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.02.2010) பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.442/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (94893)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி உவினிவிறட் தவமணி செல்வரட்ணம்



(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

V.H லேன், இருபாலையைப் பிறப்பிட மாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி. உவினிவிறட் தவமணி செல்வரட் ணம் அவர்கள் நேற்று (15.02.2010) திங் கட்கிழமை காலை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற T.R.செல்வரட் ணம் (சிறாப்பர், கல்வித்திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி செல்வரஞ்சிற் நவரட்ணம், கிறிஸ்ரி தயாளசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபா நவரட்ணம், திருமதி. சந்திரா தயாளசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், மிச்சேலின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 4மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் பரி.கன்னிமரியாள் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.H. லேன்,
இருபாலை, கோப்பாய். (94908)

தகவல்:
E.D.நவரத்தினம் (கிருபா),
(மருமகன்).

## கபடியில் வெற்றிபெற்ற விளையாட்டுக் கழகங்கள்

யாழ்ப்பாணம், பெப்.16

தென்மராட்சி பிரதேச பதிவுசெய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடை யிலான கபடிப்போட்டிகள் அண்மையில் மட்டுவில் வளர்மதி வி.க. மைதானத்தில் இடம்பெற்றன.

போட்டிகளில் ஆண்கள் பிரிவில் முதல் இடத்தை கல்வயல் ஐங்கரன் விளையாட் டுக் கழகத்தினரும் இரண்டாமிடத்தை சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தினரும் பெற்றுக்கொண்டனர்.

பெண்கள் பிரிவில் கொடிகாமம் துர்க்கா வி.க. மட்டுவில் வளர்மதி வி.க ஆகியவை முதலாம் இரண்டாம் இடங் களைப் பெற்றன.

## மிருசுவிலில் 'ஓட்டோ' தடம்புரண்டு காயம்

யாழ்ப்பாணம், பெப்.16

ஓட்டோ தடம் புரண்டதில் அதில் பய ணித்தவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மிருசுவில் ஏ 9 வீதி யில் இந்த விபத்து சம்பவம் நடை பெற் றது.

வியாபாரப் பொருள்களை வணிக நிலையங்களுக்கு விநியோகிக்கச் சென்ற வேளையில் நடந்த இந்த விபத்தில் புத்தளத்தைச் சேர்ந்த சகாப்தீன் மொகமட் வயது (34) என்பவரே காயமடைந்தார். இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-207)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.16

கைதடி, நாவற்குழி அ.த.க வித்தியா லய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடை பெற உள்ளது.

வித்தியாலய அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக சாவகச் சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண் முகலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மகேஸ்வரன், யாழ்ப்பா ணம் 'வேர்ள்ட் விஷன்' திட்ட அலுவலர் செல்வி அபிராமி சண்முகநாதன் ஆகி யோரும் கௌரவ விருந்தினராக யாழ்ப்பா ணம் செயல்திறன் அரங்க இயக்க இயக்கு நர் தே.தேவானந்தும் கலந்துகொள்ள உள்ளனர்.

* * *

சுன்னாகம், பெப். 16

மயிலணி சைவமகாவித்தியாலயத் தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மயிலணி கந்தசாமி கோயில் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா. சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதனும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் செ.சிவநடராஜா, சுன்னாகம் வடக்கு கிராம அலுவலர் செல்வி ச.செல்வரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்வர். (1-38)

## காணவில்லை

HD-3506 என்ற இலக்கமுடைய லான்மாஸ்ரரை 10.02.2010தொடக்கம் காணவில்லை. செம்மாதெரு வீதியில் தரிப்பிடத்தில் நிறுத்தி வைத்திருந்த போது, இரவு 7.45 மணியளவில் காணவில்லை. இதைபற்றி தகவல் அறிந்தவர்கள் பின்வரும் முகவரியில்தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கிரேட் சென்ரர்,
இல.14, பெரிய கடை மேற்கு,
யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 2224181

## தேவை

மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் ஆண்/ பெண் உடனடியாகத் தேவை. தகுதி உடையோர் பின்வரும் தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள் ளவும்.

**0779916512**
(C/564918)

## சிரம வாசனா

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 216
சீட்டிழுப்பு திகதி 14.02.2010

எழுத்து: **Q** | வெற்றி இலக்கங்கள்: **10 19 26 32**

| | பொருந்தல்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 4,431,572.50 | – |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 170 |
| 3ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 6166 |
| 4ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 67509 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. **2,828,480.00**

வெற்றிப் பெறும் சீட்டுகள் சீட்டிழுப்பு நடத்திய திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஐந்துஇலட்சமோ அதற்குக்கூடிய தொகைக்கான பரிசுகள் அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும். பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

அடுத்த வார சுப்பர் பரிசுத் தொகை ரூ. **4,431,572.50**

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2433631
இணையதளம்: www.nlb.lk

## சுவசெத லொத்தர்

Suwasetha சுவசெத லொத்தர்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 357
சீட்டிழுப்பு திகதி: 14.02.2010

வெற்றி எழுத்து: **T** | வெற்றி இலக்கங்கள்: **08 26 27 54** | போனஸ் இலக்கம் **23**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 13,279,255.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 02 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 120 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 157 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 4523 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2996 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 56475 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. **3,728,760.00**

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. **13,279,255.50**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புகளின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தரான **எட்வேட் சத்தியாசீலன் தனிநாயகம்** (பாடசாலை வேலைகள் பரிசோதகர், பாடசாலை வேலைகள் பகுதி, மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தந்தை

**நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எட்வேட் J.P.**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும்,
பொறியியலாளரும் சக உத்தியோகத்தர்களும்.
மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.
(94899)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
26 . 09 . 1926



மறைவு
18 . 01 . 2010

### அமரர் விநாயகம் சிங்காரவடிவேலு

கடந்த 18.01.2010 அன்று சிவபதமடைந்த எமது தந்தையின் அந்தியேட்டி கிரியைகள் எரிஞ்சம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் நாளை 17.02.2010 புதன்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். முற் பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நாகலிங்க முதலியார் ஒழுங்கை,
பருத்தித்துறை. (92154)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான கலந் துரையாடல் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ்.மாநகரசபை உறுப்பினர் மௌலவி எஸ்.சுபியான் உரையாற்றுவதையும், யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பிரதீபன், யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணா தேவி தெய்வேந்திரம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட முஸ்லிம் மக்களின் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரன்)

# தபால் நிலையங்களுக்கும் தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகளுக்கும் இடையே வலைப்பின்னல் வசதி

## பிரதி அஞ்சல் மா அதிபர் குமரகுரு தகவல்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்.மாவட்டத்திலுள்ள தபால் நிலையங்களுக்கும் தேசிய சேமிப்பு வங்கிகளின் கிளைகளுக்கும் இடையே நேரடி இணைய வலைப்பின்னல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பொது மக்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளமுடியும்.

வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், குடா நாட்டில் உள்ள 19 அஞ்சல் நிலையங்களில் இந்த இணைய வலைப்பின்னல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கிக்கும் இந்தத் தபால்நிலையங்களுக்கும் இடையில் விசேட கணனி வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நேரடித் தொடர்பு மூலம் மக்கள் தமது கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தேவைகளை விரைவாக மேற் கொள்ள முடியும்-என்றார். (50-224)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.16

சாவகச்சேரி நகரசபை உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று சபையின் நிர்வாக அலுவலர் அறிவித்துள்ளார். (ஒ-207)




யாழ்.நகரில் சத்திரத்துச் சந்தியில் உள்ள திருவள்ளுவர் சிலை எச்.எஸ்.பி.சி வங்கியின் அனுசரணையுடன் மெருகூட்டப்பட்டு அழகாகக் காட்சியளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: நந்தன்)




# யாழ்.நடுவர்கள் நால்வருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

சர்வதேசப் பாடசாலைகளுக்கிடையேயான 10ஆவது மெய்வன்மைப் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் எதிர்வரும் மார்ச் மாதம் 5, 6, 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் நடுவர்களாகக் கடமையாற்றுவதற்கு யாழ்.மாவட்ட மெய்வல்லுனர் சங்க உறுப்பினர்கள் நான்கு பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04-23)

# காரைநகர் மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள்

ஆனைக்கோட்டை, பெப்.16

காரைநகரிலுள்ள ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகள் உட்பட்ட 8 பாடசாலைகளுக்கு 'பொஸ்டோ' நிறுவனம் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

'பொஸ்டோ' சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் பணிப்பாளர் ரி.தேவதாசின் வழிகாட்டலில் இவ்வுதவிகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதைவிட காரைநகரிலுள்ள நான்கு விளையாட்டுக் கழகங்களுக்கும் இந்நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை வழங்கியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (50-20)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டம் இன்று பி.ப. 4 மணியளவில் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம். (04-23)

* * *

வலிவடக்கு, பெப்.16

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதவுள்ளன. (04-23-86)

* * *

வலி வடக்கு, பெப்.16

யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஆதரவுடன் மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகம் அமரர் மாணிக்கம் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் தாச்சிப் போட்டியில் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மருதனார்மடம் மயிலிட்டி கலைமகள் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டியில் உடுவில் சிந்து விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் வெஸ்றோம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (04-86)

* * *

வலிவடக்கு,பெப்.16

வலிவடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* இளவாலை வெண்புறா விளையாட்டுக்கழகம் எதிர் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம்.
* மல்லாகம் எஸ்.எம்.எஸ். விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகம்.(04-86)

# யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக்குடியமர்த்துவது குறித்து நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது.

மக்கள் பணிமனையின் தலைவரும் மாநகரசபை உறுப்பினருமாகிய மௌலவி எஸ்.சுபியான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்கு ஆர்வமுள்ள, தற்போது புத்தளத்தில் வசித்தும் வருகின்ற 55 குடும்பங்களினைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பிரதீபன், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் திருமதி சுகுணாதேவி தெய்வேந்திரம் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆர்.சுந்தரராஜன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியமர்வதற்கு ஆர்வத்துடன் விண்ணப்பித்துள்ள முஸ்லிம் மக்களின் ஆவணங்களைப் பரிசீலனை செய்வது தொடர்பாகவும் -

மீள்குடியமர்த்தப்படுகின்றபோது அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாகவும் -

இதில் விரிவாக ஆராயப்பட்டது.

இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்வதற்கு முன்னர் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பாகச் சகல துறை சார் அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் பல்வேறு விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

புத்தளத்திலிருந்து மீள்குடியேற்றத்திற்கு விண்ணப்பித்துள்ள 55 குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தாம் குடியேற்றப்பட்டவுடன் வீட்டுத்திட்ட வசதிகளையும், அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இந்த முஸ்லிம் மக்களின் காணி உறுதி ஆவணங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பிரதேச செயலர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் ஆராய்ந்தனர். (50-9)

# வண்ணாங்குளம் தூர்வாரப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்நகரின் மத்தியிலுள்ள வண்ணாங்குளம் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கனரக இயந்திரங்களின் உதவியோடு 'தூர் வாரப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

பல வருடங்களாக எவ்வித துப்புரவுப் பணிகளும் இக்குளத்தில் மேற்கொள்ளப்படாமையால் சேறு மண்டியுள்ளதோடு புல், பூண்டு மற்றும் தாமரைக் கொடிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

தற்போதுதான் இதனைத் துப்புரவு செய்து புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. ஆனால் இதன்போது கிளம்பும் துர்நாற்றம் சகிக்கமுடியாது உள்ளமையால் அருகிலுள்ள வீதிகளில் செல்லும் பொதுமக்கள் தமது மூக்குகளைப் பொத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ரி-224)

# யாழ்.கல்வியியற் கல்லூரிக்கு இம்முறை 260 மாணவர்கள் தெரிவு

வலி.வடக்கு, பெப்.16

யாழ்.கல்வியற் கல்லூரிக்கு இவ்வாண்டு 260 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கான பதிவுகள் கடந்த 8ஆம் திகதி கோப்பாயில் அமைந்துள்ள கல்வியியற் கல்லூரியில் இடம் பெற்றன.

நடனத்துறைக்கு 20 பேரும், சங்கீதத்துக்கு 20 பேரும், ஓவியத்துக்கு 25 பேரும், நாடகமும் அரங்கியலுக்கு 15 பேரும், தமிழ்மொழி மூலம் கணிதம், விஞ்ஞானம் பிரிவுகளுக்குத் தலா இருபது பேர் வீதம் 40 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆங்கில மொழி மூலம் கணிதம், விஞ்ஞானம் பிரிவுகளுக்குத் தலா இருபது பேர் வீதம் 40 பேரும் ஆரம்பப் பிரிவுக்கு 30 பேரும் விசேட கல்விக்கு 20 பேரும், கிறிஸ்தவத்திற்கு 30 பேரும், இந்துசமயத்துக்கு 30 பேருமாக மொத்தம் 260 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (50-86)

# நெல் அறுவடை ஆரம்பம்

நவாலி, பெப்.16

நவாலி, கல்லுண்டாய், அராலி, சண்டிலிப்பாய் பிரதேசங்களில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இம்முறை நெல் சிறந்த விளைச்சல் தந்திருப்பதாகவும், அறுவடைக்கான கூலியாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்து



யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதியும் எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும், எமது மக்களின் நன்மதிப்பினைப் பெற்றவரும், சமூகத் தொண்டருமான திருவாளர்

### கந்தையா தேவராஜா

அவர்கள் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு இறை ஆசியுடனும் நற் சுகத்துடனும் இன்று போல் என்றும் சேவையாற்ற வேண்டுமென "ANDRA" நிறுவனத்தினர் மனமார வாழ்த்துகின்றார்கள்.

356A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/564910)

## திருமறைக் கலாமன்றம் நாடகப் பயிலகம்

### விண்ணப்பம் கோரல்

எமது மன்றத்தின் நாடகப் பயிலகத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறியின் 2010 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புவர்களுக்கும், நாடகமும், அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப்பயிற்சி நெறி அமையும்.

பயில விரும்புவோர் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 27.02.2010 சனிக்கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 2393

பிரதி இயக்குநர்,
திருமறைக் கலாமன்றம் (c/564906)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணகம்
06 ★ 05 ★ 1946

விண்ணகம்
19 ★ 01 ★ 2010



### இரத்தினசிகாமணி தனேந்திரன் (பவுண்)

*(03ஆம் சந்தி, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)*

கடந்த 19.01.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர் இரத்தினசிகாமணி தனேந்திரன் (பவுண்) அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 18.02.2010வியாழக்கிழமை காலை 6மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து எமது துயரில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

03ஆம் சந்தி,கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு. (92152) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்லையா தங்கரத்தினம்

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தங்கரத்தினம் நேற்று (15.02.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-பறுவதம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்தம்பி, அருளம்பலம் ஆகியோரின் மைத்துனியும், கணேஸ்வரி, கதிர்காமஈஸ்வரன், காலஞ்சென்ற சிவாஈஸ்வரன் (சுவிஸ்) மற்றும் ஞானேஸ்வரன் (சுவிஸ்), சர்வேஸ்வரன் (HNB, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், தங்கராசா (மானிப்பாய் ப.நோ.கூ.ச), வாசுகி, ரூபாவதி (சுவிஸ்), காந்திமதி (சுவிஸ்), கிருஷ்ணகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜனி(நுண்கலைப்பீடம், 4ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), கஜன், ருஷானி(A/L2011,யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) கபிதாஸ் (சபரக முவ பல்கலைக்கழகம்) சங்கீர்த்தா, செல்வதாஸ் (A/L -2010யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), யாழினி (யா/இணுவில் மத்திய கல்லூரி), சிவனுஜன், ருபீஷன், தசானி, தஷாந், தர்மிகன், மதுராங்கி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), மயூராங்கி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), சர்வானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஏரம்பமூர்த்தி, கதிர்காமநாயகி, சண்முகராஜா (சிவசக்தி - வவுனியா), காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் கருணைத்தவசோதி ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்வரங்கம், பாப்பாதோட்ட வீதி,
இணுவில் மேற்கு. (94892)

தகவல்:
பிள்ளைகள்
T.P-0213737907

## இடம்பெயர்ந்த மாணவர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்குமுறை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்ற இடம் பெயர்ந்த மாணவர்களை பல்கலைக்கழக அனுமதிக்குரிய முதலாம் படிவத்தில் விண்ணப்பிக்கும்போது தாம் முன்னர் கற்ற பாடசாலை அதிபர்களிடம் உறுதிப்படுத்தி எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன் விண்ணப்பத்தினை அனுப்பவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிக்கல்களை எதிர்நோக்குபவர்கள் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1)

## தீவக வலய அதிபர்களுக்கு செயலமர்வு

தீவகக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை முகாமைத்துவ மண்டபத்தில் மு.ப.11 மணிக்கு நடைபெறும்.

க.பொ.த(சா/த) வகுப்பு உள்ள அதிபர்களும், அழகியல்பாட செய்முறைப் பரீட்சையில் பரீட்சகராகக் கடமையாற்றும் ஆசிரியர்களும் தவறாது இக் கூட்டத்தில் பங்குபற்றல் வேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (1)

## மீள்குடியமர்வு குறித்து யாழ்.பல்கலையில் கருத்துரை

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் கழகத்தினரின் ஏற்பாட்டில் பேராதனைப் பல்கலைக்கழப் புவியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். எச்.ஹஸ்புல்லா "வன்னிப்பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்கான வாய்ப்புக்கள்" என்ற பொருளில் இன்று பிற்பகல் ஒரு மணிக்குப் புவியியற்றுறை மண்டபத்தில் கருத்துரையாற்றவுள்ளார்.

இக்கருத்தரங்கில் ஆர்வலர்களைப் பங்குபற்றுமாறு புவியியல் கழகத்தினர் கேட்டுள்ளனர். (01)

## சுழிபுரம் பிரதேச சபையில் இன்று ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.16

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் இன்று வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பணியாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் க.பாலசுப்பிரமணியம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி வாழ்த்துரை வழங்குவார். (1-302)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப்.16

உடுவில் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஷிராணிமில்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (204-86)

## கூடைப்பந்தாட்டப்போட்டி

யாழ்ப்பாணம், பெப்.16

'எக்ஸ்போ எயார்' விமானசேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் பெண்களுக்கான மூன்றாமிடத்திற்கான போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

வேம்படி மகளிர் கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி. (04-23)

## சிட்டை எழுதுனர் தேவை

தட்டாதெரு சந்திக்கு அண்மித்த விற்பனை நிலையத்திற்கு சிட்டை எழுதுனர் (Bill Clerk) -பெண் தேவை. விருப்பம் உள்ளோர் கீழ்வரும் முக

பலாலி வீதி (நல்லூர் AGA Office முன்பாக),
திருநெல்வேலி. (94891)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### உயர் பட்டப்படிப்புகள் பீடம்

### கல்வியியல் முதுமாணிக் கற்கை நெறி - 2010/11 (யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டபடிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. அனுமதிக்குரிய தகைமைகள்

* "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்"

அத்துடன்

1) ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டு கற்பித்தல் அனுபவம்.

அல்லது

2) மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டு அனுபவம்.

2. தெரிவு முறைமை:

எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்)

விண்ணப்ப முடிவுத்திகதி-22.03.2010

விண்ணப்பப் படிவம் பெறும் முறை

உயர் பட்டப் படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் கட்டும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழகக் கிளையில் ஒரு விண்ணப்ப படிவத்திற்கு ரூபா 100/= வீதம் செலுத்திய பற்றுச் சீட்டை உயர்பட்டப் படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பங்களை பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு செலுத்திய ரூபா 100/= பெறுமதியான காசுக்கட்டளையுடன் ரூபா 5/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23×10 செ.மீ.அளவுள்ள வெற்றுக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி 2010/11 விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு உதவிப்பதிவாளர் உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபாலில் அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

*பதிவாளர்*
*15/02/2010* (சி/564911)

## இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
### பொறியியல் தொழில் நுட்பபீடம்

கல்வி ஆண்டு 2010/2011 இல் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்காக நடாத்தப்படும்

### விசேட கருத்தரங்கு

**இடம் :**
இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையம்
பிறவுண் வீதி, கொக்குவில்

**காலம் :** 20.02.2010 சனிக்கிழமை காலை 10.00 மணி.

மேற்படி பீடத்தினால் பின்வரும் துறைகளில் டிப்ளோமா மற்றும் இளமானி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ குடிசார் எந்திரவியல் ★ கணனி எந்திரவியல்
★ மின் எந்திரவியல்
★ இலத்திரனியல், தொடர்பாடல் எந்திரவியல்
★ பொறிமுறை எந்திரவியல்
★ பொறி இலத்திரனியல் எந்திரவியல்
★ புடவை எந்திரவியல்

விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், க.பொ.த(உ/த) கணித, விஞ்ஞானத்துறைகளில் கல்வி கற்றவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது. ஏனைய துறைசார்ந்தவர்களும் ஆகக்குறைந்த பெறுபேறுகளுடன் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவங்களை தற்போது யாழ் பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 05.03.2010**

**மேலதிக விபரங்களுக்கு:**
இணைப்பாளர்: யாழ்.பிராந்திய நிலையம்.
Tel.021 222 3374
Email: adjaf@ou.ac.lk

## மரண அறிவித்தல்

### முருகன் கந்தையா

***(முன்னாள் யாழ். பல்கலைக்கழக ஊழியர்)***



கோண்டாவில் கிழக்கு, நாராயணா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கந்தையா (ஐயாத்துரை) 13.02.2010 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - செல்வி தம்பதியினரின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும். காத்தி, கண்மணி, சிவபாக்கியம், பொன்னம்மா (மாம்பழம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கோவிந்து, நடராசா, மார்க்கண்டு, கந்தன், கந்தையா, வீரன் ஆகியோரின் மைத்துனரும் சுபத்திரா துசேந்திரன் (கனடா), கேசவாணி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்ராஜா (யாழ்/ மாநகர சபை), பாஸ்கரன் (கனடா), துஷ்யந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவடினாத், சகானா, தேனுகானா, ராம்டினாத், டயானா (கனடா), யோசாத் (கனடா), மதுரன் (கனடா), அனோத் (கனடா), சுவர்ணா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை பி.ப 3மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நாராயணா வீதி,*
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (94894)

தகவல்:
வீ. அருள்ராசா
*(மருமகன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லையில் அதிகரிக்கும் பன்றித் தொல்லை



இரவு 8.30 மணியிருக்கும். வல்லை வெளியை இருள் முழுதாகக் கௌவியிருந்தது. ஆங்காங்கே அவசரமாக விரைந்து கொண்டிருந்த வாகனங்களின் வெளிச்சத்தில் அந்த வெளியியைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. இருளின் நிசப்தத்தைக் குலைத்துக்கொண்டு சரேலென ஓர் உருவம் வீதியின் குறுக்கே பாய்ந்தது. எதிர்பார்க்காத இந்தப்பாய்ச்சலால் நிலைகுலைந்து போன மோட்டார் சைக்கிள் ஒன்று அந்த உருவத்தின் மீது வேகமாக மோதியதால் தூக்கிவீசப்பட்டது. அதில் பயணித்தவர்களின் ''ஐயோ! அம்மா!'' என்ற அவலஒலி மேலெழுந்தது. இருவருக்கும் பலத்த அடி. தாடையிலிருந்து இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது. உருக்குலைந்துபோன பின்னும் உறுமிக்கொண்டிருந்தது மோட்டார் சைக்கிள். இத்தனைக்கும் காரணமான அந்தக் கரிய உருவம் வீதியோரமாக இரத்தத்தைக் கக்கியபடி வீழ்ந்து கிடந்தது.

இந்தச் சம்பவத்தை வாசிக்கும் போது அந்தக் கரிய உருவம் பேயோ பிசாசோ என்று தவறாக எண்ணிவிடாதீர்கள். அண்மைக்காலமாக வடமராட்சியின் வல்லைப் பகுதியில் அதிகரித்துள்ள பன்றிகளில் ஒன்றுதான் அந்தக் கறுத்த உருவம். கடந்த சில வாரங்களாகவே பன்றிகளின் நடமாட்டம் வல்லைப் பகுதியில் அதிகரித்துள்ளது. இரவு வேளைகளில் வல்லை வெளியிலுள்ள வயல்களில் காணப்படும் கோரைப் புற்களின் கிழங்குகளையும், ஈச்சம் வேர்களையும் உண்பதற்காக இந்தப் பன்றிகள் வல்லையை நோக்கி வரத்தொடங்கியுள்ளன. இந்தப் பன்றிகள் தென்மராட்சிப் பகுதியில் இருந்து இங்கு வருவதாகக் கூறப்படுகின்றது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்பு தென்மராட்சியில் கவனிப்பாரற்றுக் கிடந்த பல வயல்நிலங்களுக்கு விடிவுகாலம் பிறந்தது. மீண்டும் உழவுசெய்யப்பட்டு, பெரும்போக நெற்செய்கையும் அவற்றில் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. நீண்ட காலமாக அப் பகுதியில் ஆளரவம் இல்லாதிருந்ததால் பன்றிகள், மாடுகள் போன்ற கட்டாக்காலிகளின் நடமாட்டமும் அட்டகாசமும் வேளாண்மைக்கு இடையூறை உண்டுபண்ணும் என்பதால் மாற்றுவழிபற்றி தென்மராட்சி விவசாயிகள் சிந்தித்தனர்.

கட்டாக்காலிகளில் இருந்து நெற் பயிர்களைக் காப்பாற்ற வயல்களைச் சுற்றி பாதுகாப்பு வேலிகளை முட்கம்பிகளால் அமைத்தனர். இதனால் கட்டாக்காலிகளின் பருப்பு, தென்மராட்சி வயல்களில் வேகவில்லை. வயிறு காயத்தொடங்கியதும் உணவுதேடி நாவற்குழி, கைதடி வெளிகள் ஊடாக வல்லையை நோக்கி கட்டாக்காலிகள் படையெடுக்கத் தொடங்கின. அதன் விளைவே வல்லைப் பகுதியில் அதிகரித்துக் காணப்படும் பன்றிகளின் நடமாட்டம். இப் பன்றிகளால் நெற்பயிர்செய்கை சேதமாவது மட்டுமல்லாது, இவை அடிக்கடி வீதிகளின் குறுக்குமறுக்காக மிகவும் வேகமாக ஓடுவதால் இரவு வேளைகளில் வல்லைவெளியில் வாகனங்களில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகும் சம்பவங்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. எனவே உரியவர்கள் இது விடயமாக அக்கறையும், நடவடிக்கையும் எடுத்து வல்லைப்பகுதியில் அதிகரித்துள்ள பன்றிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி, வல்லையால் பயணிப்போர் விபத்துகளில் சிக்குவதில் இருந்து தவிர்க்க ஆவன செய்ய வேண்டும். செய்வார்களா?

- வடநரி -




# வடமராட்சியை உலுக்கும் கொள்ளைகள்

தற்போது வீதி அகலத் திறந்து விடப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தின் சனத் தொகை பன்மடங்காக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் கொள்ளைகள், கலாசாரச் சீரழிவுகள் குடாநாட்டை குறிப்பாக வடமராட்சியை ஆக்கிரமித்து வருகின்றன. அண்மையில் வடமராட்சியில் நெல்லியடிக்கு மிக அண்மையில் பட்டப்பகலில் வீட்டில் தனியாக இருந்த வயோதிப மாது கொள்ளையர்களால் பலமாகத் தாக்கப்பட்ட பின் அவரின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கல்வத்தை சங்கமும் அண்மையில் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டதாக அறியத்தரப்பட்டுள்ளது.

இதேவேளை கொள்ளைச் சம்பவங்கள் குறித்து கிராம சேவகர்களுக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறார்கள். அதில் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறும் சந்தேகத்திற்கு இடமானவர்கள் குறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறும் தகவல்தரும் பட்சத்தில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் தரப்பினர் பொதுமக்களைக் கோரியிருக்கின்றனர். இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் வியாபாரிகள் என்ற போர்வையில் வருபவர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறும் வீட்டில் வயோதிபர்கள் தனியாக இருப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுமாறும் தங்க நகைகளை அணிந்து கொண்டு வீதிகளில் நடமாடுதல் பாதுகாப்பானது அல்ல எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஏற்கனவே உள்ள விழிப்புக்குழுக்கள் மூலமாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் கிராம அலுவலர்கள் பிரதேச செயலகங்கள் ஈடுபட்டு வருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எது எவ்வாறு இருப்பினும் பொலிஸ் தரப்பினர் தெரிவிப்பதுபோல பொதுமக்கள் அவதானமாக இருக்காதபட்சத்தில் எதுவும் புறக்குடத்தில் நீர் வார்த்தது போலவே அமையும். எனவே பொது மக்களாகிய நாம் அனைவரும் விழிப்பாக இருந்து கொள்ளைச் சம்பவங்களை முறியடிப்போம் என உறுதியெடுத்துக் கொள்வோமாக.

# மழலைகளின் கல்விச் சொத்தாக மிளிரும் யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

வடமராட்சியிலே புகழ் பூத்து விளங்குகின்ற ஆரம்ப பாடசாலைகளில் நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை முதன்மையானது. '' கற்றாங்கு ஒழுகுக'' எனும் மகுடவாக்கியமுடைய இப்பாடசாலை வடமராட்சிப் பிரதேசத்தின் மத்தியில் வதிரியூடாகத் திக்கம் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது. இன்றைய சிறார்களே நாளைய எதிர்கால நாட்டின் சிற்பிகள் என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க நல்லதொரு ஒழுக்கமும் கண்ணியமும் கல்வியும் உடைய எதிர்கால சந்ததியை உருவாக்குவதில் இப்பாடசாலை முன்னின்று உழைக்கின்றது. இப்பாடசாலையானது நூற்றாண்டு கால தொன்மையும் சிறப்பும் உடையது.

வடமராட்சியின் கரையோரப் பிரதேசங்களில் பாடசாலைகளை அமைத்து நிலைகொண்ட மிஷனறிமார் தமது நடவடிக்கைகளை உள்ளூரை நோக்கி நகர்த்தத் தொடங்கினர். அந்தவகையில் 1888 ஆம் ஆண்டு கட்டைவேலி கோயில்பற்றில் வதிரிக் கிராமத்தில் ஒரு பாடசாலையை நிறுவினர். இதுவே நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையாக மாற்றம் கண்டது. இந்நிலையில் மிஷனறிமார் வதிரிக் கிராமத்திலும் அதன் அயற்கிராமங்களிலும் உள்ள சிறுவர்களை வீடு வீடாக சென்று அழைத்துவந்து எண், எழுத்து என்பவற்றுடன் மதபோதனையும் பரப்பினர் இறுக்கமான சைவசமய சூழலில் வாழ்ந்த இப்பிரதேச மக்களிடையே அவர்களது கல்வியும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப்பாடசாலை சைவ சமய கலாசாரத்துடன் மிகவும் பின்னி பிணைந்து சைவ பாரம்பரியங்களை பேணிப்பாதுகாப்பதில் வல்லமை பொருந்தியிருந்தது. அக்காலத்தில் இருந்து இக்காலம் வரை வடமராட்சிப் பிரதேசத்தின் பெரும்பாலான பிள்ளை செல்வங்களின் கல்வி வாழ்க்கை இப்பாடசாலையுடன் இரண்டறக் கலந்து இருந்தது. மேலும் 1944 இல் இருந்து 1967 வரை J.S.C. வரை கல்வி கற்பிக்கப்பட்டது. கல்விச் சீர்திருத்தங்களின் விளைவாக 1968 ஆம் ஆண்டில் இருந்து படிப்படியாக வகுப்புக்கள் குறைக்கப்பட்டு 1973 ஆண்டில் இருந்து 5ஆம் வகுப்பு மட்டும் கற்பிக்கப்படும் ஆரம்பப் பாடசாலையாக பரிணாமம் கண்டது. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்டு வந்த J.S.C. பரீட்சைப் பெறுப்பேறுகள் எப்போதும் திருப்திகரமாக இருந்து வந்ததுடன் இன்று வரை 5 ஆம் தர ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் எண்ணிக்கையில் வடமராட்சி பிரதேசத்தில் முதலிடத்தை இப் பாடசாலை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.2009ஆம் ஆண்டு இலங்கைப் பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்பட்ட 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 28 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 100 புள்ளிகளுக்கு மேல் 58 மாணவர்கள் பெற்றுச் சாதனை படைத்திருப்பது பாரிய வரலாற்று சாதனை ஆகும்.

இப்பாடசாலை வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள வளர்ச்சி அடைந்த ஆரம்ப பாடசாலை ஆகும் மாணவர் அனுமதி வருடா வருடம் அதிகரித்து வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளதாகப் பாடசாலை புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. இப்பாடசாலை கல்வி கற்ற சமூகத்தவர்கள் அதிகம் உள்ள பிரதேசத்தில் இருப்பதால் இப்பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோருக்கும் இப்பிரதேச மக்களுக்கும் அதிக ஈடுபாடு உண்டு. இங்கு ஆங்கில மொழிக் கல்வி சிறப்பாக மேற் கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் நிரந்தர ஆங்கில ஆசிரியர் ஒருவர் இல்லாதகுறை காணப்படுகின்றது ஒரு கவலைக்குரிய விடயம் ஆகும். இங்கு சாரணர் இயக்கம், சிறுதோழியர் இயக்கம் இயங்கி வருதல் ஒரு முக்கிய சிறப்பம்சமாகும். ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றனர். தேவைக்கேற்ற வளங்கள் இப் பாடசாலைக்கு கிடைக்கப்பெறுமாயின் இப்பாடசாலை மேலும் எழுச்சி பெற்று, வளர்ச்சி பெற்று, உயர்ச்சி அடையும் என அனைவரும் எதிர்பார்க்கலாம்.

ஹரிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் பகுதி நேர
ஆங்கில ஆசிரியரான

**செல்வி சாவித்திரி விநாசித்தம்பி**

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (94895)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2010



மலிந்த விற்பனையில்
Fax மற்றும் Monitor
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 0214920758
தியேட்டர் ஒழுங்கை, இணுவில். (94882)


## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு புதிய உப அதிபர்

யாழ்ப்பாணம்,பெப்.16

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உப-அதிபர் பதவிக்கு புதியவர் நியமனம் செய்யப்படுவார்.

கல்லூரியின் சிரேஷ்ட நிலையில் உள்ள ஒருவர் உப அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவர் என முன்னாள் பேராயரும் தென்னிந்திய திருச்சபையின் முகாமையாளருமான கலாநிதி எஸ்.ஜெபநேசன் தெரிவித்தார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உப அதிபர் நியமனம் குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். (1-302)

## மரத்தில் இருந்து வீழ்ந்த கத்தி சிறுவனைப் பதம் பார்த்தது

யாழ்ப்பாணம்,பெப்.16

மரத்திலிருந்து வீழ்ந்த கத்தி நிலத்தில் நின்ற சிறுவனின் கையைவெட்டிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் மட்டுவிலில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த க.ரவீந்திரன் (வயது 9) என்னும் சிறுவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆட்டுக்குக் குழை வெட்டியபோது இச்சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## சங்கரத்தைக்கு தொலைபேசி இணைப்பு வழங்க நடவடிக்கை

சங்கானை, பெப்.16

ரெலிகொம் நிறுவனத்தினர் சங்கானை பஸ்நிலையத்தில் இருந்து சங்கரத்தைக்குச் செல்லும் வீதியூடாகத் தொலைபேசிக் கேபிள் விநியோகத்திற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கெனகொங்கிறீட் தூண்கள் நடப்பட்டு வருகின்றன. ஏற்கனவே சண்டிலிப்பாய் சந்திவரை இவ் விநியோகம் செயற்பட்டு வந்தது.

தற்போது பிரதான வீதியைத் தவிர்த்து ஏனைய வீதிகளுக்கும் இவ் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. (1-29)

## கோண்டாவில் பகுதியில் டெங்கு ஒழிப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம், பெப்.16

டெங்கு நோய் பரவாது தடுக்கும் நடவடிக்கையில் கோண்டாவில்குமரக் கோட்டம் பகுதி மக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தமது வீடுகளைத் துப்புரவு செய்வதிலும் சுற்றுப்புறங்கள், வீதியோரங்கள் என்பனவற்றைச் சுத்திகரித்துப் புகையூட்டியும் வருகின்றனர்.

அத்துடன் குப்பைகளை வெட்டிப் புதைத்து மலத்தியோன் மருந்தினை வீட்டைச் சுற்றி அடித்தும் குளிக்கும் நீரினைத் தேங்காது பார்த்தும் மிகவும் மும்மரமாக நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. (1-19)

## வாழ்த்துகின்றோம்

ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட வட பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று யாழ்.நகர்தனிலே உன்னதமான சேவையை வழங்கவுள்ள

உயர்திரு. திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கடந்த பதினாறு வருடங்கள் யாழ்ப்பாண வங்கியில் முகாமையாளராகவும் சிரேஷ்ட முகாமையாளராகவும் கடமையாற்றி மக்களுக்கும் வர்த்தகர்களாகிய எமக்கும் நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய வேளையிலும் தனது நலன்பாராது எந்த வேளையிலும் எமது பிரச்சினைகளை நேரடியாகக் கேட்டறிந்து எமக்கு தோள் கொடுத்து வியாபாரத்துறையில் முன்னோடியாகத் திகழவைத்த சிரேஷ்ட வடபிராந்திய முகாமையாளர் திரு.தி.ஜெயராசசிங்கம் அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று தனது குடும்பத்தினருடன் நீடுழி வாழ வாழ்த்துவதோடு அவர் மேலும் பல உயர்பதவிகள் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்

கஜமுகன் ஹாட்வெயர்
இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
எஸ்.பீ.என்.மோட்டோர்ஸ்.

## 20 பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது

வடமராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மத்தியஸ்தர் சபையில் இற்றைவரை கிடைக்கப்பெற்ற அறுபத்திஐந்து பிணக்குகளில் இருபது பிணக்குகளுக்கு தீர்வு கண்டுள்ளது.

சமாதானமாக எதுவித செலவும் இன்றி வெகுவிரைவில் தீர்வு காணப்பட்டது என சபைத் தவிசாளர் எஸ்.வடிவேலு தெரிவித்தார். (1-253)

## கழுகுகள் வி.க வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

★ 1ம் பரிசு இல -3826 ★ 2ம் பரிசு இல-242
★ 3ம் பரிசு இல-846

**10 ஆறுதல் பரிசு இல:- 262, 1706, 1719,306, 2293, 021, 3801, 248, 4067, 4002**

**அனுசரணை வழங்கியோர்**

1) Marsha System (P.V.T) (Kannathiddy Road, Jaffna)
2) Multy Phone shop & Repairing (V.V.T Road, Uduppiddy)
3) Teknal Computers & Technology (Nelliady)
4) Selva Printers (V.V.T Road, Uduppiddy)
5) Olliyaruvi Video & Photo, Colour Lab (V.V.T Road, Valvetty)
6) Thurai Sound (Commanthari V.V.T).

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:
077-4473380, 077-0857568

நிர்வாகத்திடம் பெற்றுக் கொள்ளவும்.
நிர்வாகம். (94889)

## இதய அஞ்சலி

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளை உத்தியோகத்தர்
திரு. செல்லையா சர்வேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செல்லையா தங்கரத்தினம்**

நேற்று (15.02.2010) திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஹற்றன் நஷனல் வங்கி, சுன்னாகம். (94890)


- Study in the UK -

இங்கிலாந்தில் உயர்கல்வியை தொடர விரும்புகிறீர்களா?
உங்கள் கனவை நனவாக்க எங்களுடன் இணையுங்கள்.

எமது முற்றிலும் இலவசமான சேவைகள்
- உங்கள் தகமைக்கேற்ப கற்கைநெறியையும், கல்விகற்கும் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளை தெரிவுசெய்தல்.
- கற்கை நெறிகளுக்கான அனுமதி.
- VISA பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்
- இலண்டனில் தங்குமிட வசதி
- பிரயாண ஒழுங்குகள்
- சட்டரீதியான ஆலோசனை

கொழும்பிலிருந்து வருகை தரும் துறைசார் நிபுணர்களால் வழங்கப்படும் இலவச ஆலோசனைகள்
Feb 16th, 2010 at 3.30 p.m., Feb 17th 2010 at 9.00 a.m
ஆகிய திகதிகளில் வழங்கப்படும்.

ஆலோசனைகளை தமிழிலும் பெற்றுக்கொள்ளலாம்.

IDM Nation's ICT Academy Affiliated University College



IDM education Services

IDM Affiliafed University College
- Jaffna Campus -
216, Navalar Road, Jaffna.

IDM Education Services (Pvt) Ltd
No. 230 - 4th Floor, Galle Road,
Colombo-04.

☎ +94 21 222 9901 ☎ +94 11 2583338
web : www.idmes.lk


## முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 20 . 02 . 1985



உதிர்வு 27 . 02 . 2009

**அமரர் கந்தசாமி கலைச்செல்வன்**

திதி: 16.02.2010

அன்பெனும் மலர் தூவி ஆசை மொழி பல பேசி
என் இதயங்களில் குடி கொண்ட குல விளக்கே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை என் இதயம்

இன்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

*நிரந்தர முகவரி:*
உடுத்துறை வடக்கு,
தாழையடி.

*தற்காலிக முகவரி:*
வியாபாரிமூலைச் சந்தி,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர். (சி/564905)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமாரசுவாமி வெற்றிக் கிண்ண 'ருவென்ரி-20'

# துடுப்பாட்டத்தில் சுதாகரன் விஸ்வரூபம்; சம்பியன் கிண்ணம் ஜொலிஸ்ரார் வசம்!

யாழ்ப்பாணம்.பெப்.16



வெற்றிக்கிண்ணத்துடன் ஜொலிஸ்ரார் அணித்தலைவர்

சுதாகரன் அதிரடிச் சதத்தை விளாசிக் கைகொடுக்க வெற்றிக் கிண்ணத்தை தம் வசமாக்கிக் கொண்டது ஜொலிஸ்ரார் விளையாட்டுக்க கழக அணி.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், முன்னாள் அதிபர் பி.எஸ்.குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திய 'ருவன்ரி-20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன் தினம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி.விளையாட்டுக் கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட் டுக் கழகமும் மோதிக் கொண் டன.

முதலில் துடுப் பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் ஏழு விக்கெடுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் சுதாகரன் 127 ஓட்டங்களையும், ஜனார்த்தன் 27 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகத்தின் சார்பில் றெபேசன் 4 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

204 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இமாலய இலக்கை துரத்தத் தொடங்கிய கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தினர் 18.5 ஓவர்க ளில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்

இதில் வல்லவக்குமரன் 38 ஓட்டங்களையும், பிரதீபன் 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் பகீரதன் 3 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், உமாதரன் 4 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த் தினர்.

இதனால் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 88 ஓட்டங்களால் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி குமாரசுவாமி வெற்றிக் கிண்ணத்தை தம்வசப்படுத்திக் கொண்டது. (04-23)

### யாழ்.மாவட்டத்தில்

## 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டிகளில் முதல் சதம் அடித்துச் சுதாகரன் சாதனை

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் முன்னாள் அதிபர் பி.எஸ் குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திய 'ருவென்ரி - 20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தின் போது ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணிவீரன் சுதாகரன் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.



வெற்றிக்களிப்புடன் சுதாகரன்

இவர் 61 பந்துகளில் எட்டு சிக்ஸர்கள், 16 பவுண்டரிகள் அடங்கலாக 127 ஓட்டங்களைப் பெற்று யாழ். மாவட்டத்தில் இடம் பெற்று வரும் 'ருவென்ரி- 20' கிரிக்கெட் போட்டிகளில் முதன் முதலில் சதம் அடித்தவர் என்ற சாதனையை சுதாகரன் நிகழ்த்தினார்.

இறுதியாட்டத்தில் சிறந்த ஆட்ட நாயகனாகவும் தொடர் ஆட்ட நாயகனாகவும் இவர் தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (04-23)

## நல்லூர் கோட்ட மட்டத்தில் வலைப்பந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு.பெப்.16

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர் வரும் 18, 19 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வலைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

15, 17, 19 வயதுப் பிரிவினருக்கு இடையே நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி, திருநெல் வேலி முத்துத் தம்பி மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியும்.

**17வயதுப் பிரிவு**

கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், அரியாலை கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

அரியாலை கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி (04-86)

## வடமாகாண மாவட்டங்களுக்கிடையேயான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.16

மஞ்சி கிண்ணத்திற்காக வடமாகாணங்களில் உள்ள மாவட்டங்களுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறுக் கிழமைகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும், சங்கனை யூத் விளையாட்டுக் கழகமும், நண்பர்கள் விளையாட்டுக்கழகமும், காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், வவுனியா மாவட்டத்திலிருந்து ஆண்கள் பிரிவில் பொலிஸ் விளையாட்டுக் கழகமும்,

யாழ்.மாவட்டத்திலிருந்து பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகமும், சங்கானை யூத் விளையாட் டுக் கழகமும்,

வவுனியா மாவட்டத்திலிருந்து பெண்கள் பிரிவில் சிவில் விளையாட்டுக்கழகமும்,பொலிஸ் விளையாட்டுக் கழகமும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. (04-23)

## பூப்பந்தாட்டச் சம்பியன் கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது உடுவில் மான்ஸ்

வலி.வடக்கு.பெப்.16

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும், உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு ஒற்றையர் ஆட்டத்தில் இரு பாடசாலைகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றுச் சம நிலையில் காணப்பட்டன. இந் நிலையில் மூன்றாவது சுற்றில் இடம் பெற்ற இரட்டையர் ஆட்டத்தை உடுவில் மான்ஸ் வித்தியாலயம் தனதாக்கியமையால் 02:01 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரியை வீழ்த்தி வலிகாமம் கல்விவலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

ஒற்றையர் ஆட்டத்தில் முதல் ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 21:04, 21:06 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தை உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 21:09, 21:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தை உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 21:07, 21:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியதுடன் இரு அணிகளும் மாவட்ட மட்டத்தில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளன.

உடுவில் மான்ஸ் வித்தியாலயம் வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாக ஐந்து வருடங்களுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். (04-86)

## மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோருக்கு

யாழ்ப்பாணம்,பெப்.16

'நெஸ்ரமோல்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள், கழகங்களுக்கு இடையில் நடத்தப்படவுள்ள மரதன் ஓட்டப் போட்டி நிகழ்வு மார்ச் மாதம் 6 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இந்த மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் மற்றும் கழகங்கள் இல. 175, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ரமணன் ஸ்போர்ட்ஸ் கடையில் தங்களது பதிவுகளை எதிர்வரும் 25.02.2010 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். 04-23)



மதிவதனன், ஜெயச்சித்திரா சகோதரர்களின் 15 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கரம் சுற்றுப் போட்டியின் சில காட்சிகள் இவை.

(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச வளர்ச்சிக்கென அபிவிருத்தி நிதியம்; மத்திய வங்கியின் மாகாண அலுவலகம்

## எதிர்வரும் மாதங்களில் நிறுவி உதவ ஆளுநர் கப்ரால் உறுதிமொழி



**கொங்கொங் அன் சங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட்டின் யாழ்ப்பாண அலுவலகம் திறக்கப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆற்றிய உரையின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.**

வடபகுதிக்காக பிரதேச அபிவிருத்தி நிதியம் ஒன்றையும் மத்திய வங்கியின் மாகாண அலுவலகம் ஒன்றையும் எதிர்வரும் மாதங்களில் நிறுவி உதவுவதற்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உறுதியளித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

காடுகள், வேளாண்மை நிலங்கள், சதுப்பு நிலங்கள், கடல் நீரேரிகள் மற்றும் குடாக்கள் என்பனவற்றை உள்ளடக்கும் வட மாகாணத்தின் வளம்மிக்க மூலவளங்கள் பல்வேறு தொழில் முயற்சிகளுக்கும் உறுதியான தளமொன்றினை வழங்குகின்றது. மோதல் நிலவிய காலத்திலும் கூட, 10 சதவீதமான நெல் உற்பத்தியினை இப்பகுதி விளைவித்திருக்கிறது. 40 சதவீதமான வெங்காயத்தினையும் 10 சதவீதமான மிளகாயினையும் 14 சதவீதமான பயறினையும் 25 சதவீதமான நிலக்கடலையையும் உற்பத்தி செய்திருக்கிறது.

### பயன்மிக்க கோரிக்கை

நான் யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்த பல்வேறு தடவைகளிலும் வர்த்தக சம்மேளனம், வங்கியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராமிய மக்கள், மீன்பிடியாளர்கள் மற்றும் பல்வேறுபட்டவர்களையும் சந்தித்து பல விடயங்களையும் கலந்துரையாடியுள்ளேன். நாங்கள் அவர்களிடமிருந்து பெறுமதிமிக்க யோசனைகளையும் பெற்றிருக் கிறோம். குறிப்பாக வடமாகாணத்தில் மத்திய வங்கியின் மாகாண அலுவலகத்தினையும் வட பகுதிக்காக சிறப்பு பிரதேச அபிவிருத்தி நிதியம் ஒன்றையும் ஒழுங்கு செய்யுமாறு எமக்கு விடுவிக்கப்பட்ட கோரிக்கை பயன்மிக்கதாகும்.

அத்தகைய இவ்விரண்டு கோரிக்கைகளையும் இனிவரும் மாதங்களில் நடைமுறைப்படுத்துவோம் என்பதனை இன்று அறிவித்துக் கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

எம் தேசத்தினைக் கட்டியெழுப்புவதற்கு, குறிப்பாக, பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்ப இதுவே நேரம். வடபகுதி மக்களின் வழமையான வாழ்வினை சாத்தியமானளவிற்கு விரைவாக மீட்டுக்கொள்வதற்கு நாம் மிகுந்த ஆர்வமுடையவர்களாக உள்ளோம். இப் பெறுபேறினை அடைவதற்கு உலகில் பல்வேறு பகுதிகளிலும் வதியும் இலங்கையர்கள் தீவிரமான பங்கினை ஆற்ற முடியும் எனவும் வடக்கின் அபிவிருத்தியில் பங்கேற்பாளர்களாக மாறமுடியும் எனவும் நாம் நம்புகிறோம். அவர்கள் இப் பிரதேசங்களில் முதலீடுகளை விரைவுபடுத்துவதில் முக்கியமானதும் செல்வாக்குமிக்கதுமான பங்கினை ஆற்ற முடியுமாகையால் இதன் மூலம் கைத்தொழில்களை விரிவுபடுத்தவும் சுற்றுலாவினை உத்வேகப்படுத்தவும் அவர்கள் உதவ முடியும். வடக்கின் பொருளாதார வாய்ப்புக்கள் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றமையினால் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் பல்வேறு துறைகளிலும் குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் உண்மைச் சொத்து அபிவிருத்தி என்பன பற்றிய வளர்ந்துவரும் இத்துறைகளில் முதலீட்டு வாய்ப்புக்களில் நேர காலத்துடன் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் முதலாவது வெளிநாட்டு வங்கிக் கிளையினை திறக்கின்ற இந்த சுப வேளையில் கொங்கொங் வங்கியை வாழ்த்துகின்றேன். இத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட ஐக்கிய இராச்சியத்தின் உயர் ஸ்தானிகர் முனைவர் பீற்றர் ஹேஸ் அவர்களுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இம்முயற்சிகள் தொடர்பாக, எச் எஸ் பீ சி வங்கி அதன் உலகளாவிய தொடர்புகளின் மூலம் உலகின் மற்றைய நாடுகளுக்கும் வடக்கிற்குமிடையிலான நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் அதே வேளை யாழ்ப்பாண தீபகற்பத்தில் எச் எஸ் பீ சி வங்கியின் பிரசன்னமானது இன்றிலிருந்து போருக்குப் பின்னைய இலங்கையின் யதார்த்த பூர்வமான முன்னேற்றத்தினை உலகிற்கு காட்டுவதான சமிக்ஞையினை விடுப்பதொன்றாக இருக்கும். இம்முயற்சிக்குக் கிடைத்த இந்த ஆதரவு இங்கு யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் வேறு எந்தப் பகுதி யிலுமுள்ள வியாபார சமூகத்தினருக்கு நிச்சயமாக உற்சா கத்தினை வழங்கியி ருக்கும். வலுவான பொருளாதார வளர்ச் சிக்கும் வறுமைக் குறைப்பிற்கும் இன்றிமையாத உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்து பராமரிப்பது மிக முக்கியமானதொரு அம்சமாகவுள்ளது. குறிப்பாக சுகாதாரம், கல்வி, மின்வலு, வீடமைப்பு, வினைத்திறன் மிக்க நீர் மற்றும் சுகாதாரப் பணிகள், உற்பத்தியாக்கமும் ஆரோக்கியமும் மிக்கதான மக்கள் தொகைக்கு அடித்தளமிடுவதற்கு உதவுவதன் மூலம் வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் பங்களிக் கும். இரத்தம் சிந்தப்பட்ட நீண்ட போர் நடவடிக்கைகளின் காரணமாக, வடக்கின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றைய மாகாணங்களைப் போன்று அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதனை நாம் எல்லோரும் அறிவோம். இதன் காரணமாக வடபகுதியில் அபிவிருத்திகளை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்கம் "வடக்கின் வசந்தம்" என்ற மகுடத்தில் நன்கு திட்டமிடப்பட்டதும் ஒருங்கிணைக்கப்பட்டதும் விரைவுபடுத்தப்பட்டதுமான நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறது. இந்நிகழ்ச்சித்திட் டத்தின் கீழ், புனர்நிர்மாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அடுத்த 3 ஆண்டு காலப்பகுதியில் ஏறத்தாழ ரூ.295 பில்லியன் (ஐ.அ.டொலர் 2.7 பில்லியன்) செலவிடுவதற்கு ஒதுக்கியிருக்கிறது. இந்நிகழ்ச்சித் திட்டம் வீதிகள் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்புக்களின் புனர்நிர்மாணம், வீடுகள் மற்றும் கைத்தொழில்களுக்கான மின்வலு வசதிகள், நீர் வழங்கல், வேளாண்மை, நீர்ப்பாசன உட்கட்டமைப்பு மற்றும் தயாரிப்புக் கட்டமைப்பு போன்றவற்றின் தரத்தினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம் சிறப்பு வறுமை ஒழிப்புத்திட்டங்களை மேற்கொள்ளவும் தேவையான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை விரைந்து ஏற்படுத்தவும் எண்ணியிருக்கிறது.

நாமறிந்தவாறே உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது அரசாங்கத்தின் உயர்ந்த முன்னுரிமையாக இருந்து வருகிறது. இந்த இலக்கினை அடையும் பொருட்டு பலவேறு அசாதாரண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மீட்கப் பட்டு தற்காலிகமாக நலன்புரி நிலையங் களில் தங்க வைக்கப்பட்ட 300,000 இற்கு மேற்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களில் 217,000 பேர் அல்லது 72 சதவீதத்தினர் ஏற்கனவே மீளக்குடியமர்த் தப்பட்டுள்ளனர். வவுனியா, மன்னார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரும்பான்மை யான மக்கள், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் ஒரு பகுதியைச் சேர்ந்த மக்களும் தற்பொழுது தமது வீடுகளுக்கு திரும்பிவிட்டனர். முல்லைத்தீவு, கிளிநொச் சியைச் சேர்ந்த எஞ்சிய மக்கள், கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளின் அடிப்ப டையில், தாமதமின்றி ஒழுங்கானதொரு முறையில் குடியமர்த்தப்படுவர். அனைத்து சச்சரவான விடயங்களுக்கிடையிலும் இது மிகச் சிறந்ததொரு சாதனையாகும். இச் சாதனையானது அசாதாரணமான ஒன்று என்பதுடன் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்ட இம் முயற்சிகளுக்கும் பல்வேறு சர்வதேச அமைப்புக்களின் அர்ப்பணிப்பு மிக்க பணிகளுக்கும் கிடைத்த பெருமை என்றே நான் நம்புகின்றேன். இச் சவால்மிக்க பணியினை மேற்கொள்வதற்கு அரசாங் கத்திற்கு ஆர்வமோ அல்லது அவசரமோ இருக்கவில்லை என தமது உணர்வுகளை வெளிக்காட்டியவர்களுக்கு இத்தகைய சிறந்த பெறுபேறானது அதிர்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சியினை ஏற்படுத்தியிருக்கும் என்ப தனை தெரிவிக்க நான் ஆர்வமுயையவனாக உள்ளேன்-எனத் தெரிவித்தார். (ப)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் சுப்பிரமணியம் சண்முகலிங்கம் (செல்லப்பா)

தோற்றம்: 21.08.1963
மறைவு: 19.01.2010

19.01.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (16.02.2010) செவ்வாய்க் கிழமை கீரிமலையில் அந்தியேட்டிக் கிரியையும் 18.02.2010 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(94898)

## கண்ணீர் அஞ்சலி

## செல்வி சாவித்திரி விநாசித்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியை,
யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்)



காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும், இல.11, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாவித்திரி விநாசித்தம்பி 14.02.2010 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கணபாலா ஸ்ரோர்ஸ்,
இல.24, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

நடராஜா கணேசன் (கனடா)
ஐங்கரன் குடும்பம் (கனடா)
பாலன் குடும்பம் (கனடா)

(சி/564917)

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ Auto Mobile Engineer
★ வீதி உருளை இயக்குநர் (Road Roller Operator)
★ JCB இயக்குநர்
★ ஹைட்ரோலிக் இயந்திர திருத்துநர் (HYDRAULIC Machine Mechanic)
★ Lathe Man
★ தச்சுத் தொழிலாளர் (Carpenter)
★ அலுமினிய பொருத்துநர் (Aluminium Fabricator)

தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 21.02.2010 ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூநரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். 15.02.2010

(சி/564914)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. ஆதரவாளர் மீது இரத்தினபுரியில் தாக்குதல்

## மாகாணசபை உறுப்பினர் விசனம்

இரத்தினபுரி,பெப்.16

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இரத்தினபுரி மாவட்டத்தில் ஆங்காங்கே ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்படுகின்றனர் என சப்ரகமுவ மாகாணசபை உறுப்பினர் எம்.யெயியா எம் இப்னார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரத்தினபுரி எலபாத்த திரிஎல்ல எனுமிடத்தில் எமது கட்சி ஆதரவாளரான செல்டன் அப்பு (வயது - 52) என்ற குடும்பஸ்தர் இனந்தெரியாத நப்களால் கடுமையாகத் தாக்கப்பட்டதில் அவர் இரத்தினபுரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்ட மறுதினம் அவரது வீட்டுக்குச் சென்ற சிலர் அவரைத் தாக்கியதுடன் வீட்டையும் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இச்சம்பவம் குறித்து இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் பொலிஸார் இது வரை எவரையும் கைதுசெய்யவில்லை.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர் - என்றார். (ளி)

# கழிவுப் பொருள்களில் இயற்கைப் பசளை

மாவனல்லை, பெப்.16

டெடிகமைத் தொகுதியின் தலைநகராகக் கருதப்படும் வரக்காப்பொல நகரத்திலிருந்தும், இத்தொகுதியின் உப நகரங்களிலிருந்தும் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கழிவுப்பொருள்களின் மூலம் இயற்கை உரம் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் பொருட்டு சப்றகமுவ மாகாண சபை 34 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது எனத் தெரிய வருகின்றது. வரக்காப்பொலப் பிரதேசசபை இதற்கான உரிய பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. (ளி)

# மலையகத்தில் கடும் வரட்சி பொதுமக்கள் அசௌகரியம்

கண்டி, பெப்.16

மலையகப் பகுதிகளில் தற்போது கடும் வரட்சி நிலவிவருவதால் மக்கள் தாம் பாரிய அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் வரட்சி காரணமாக மலையகப் பிரதேசங்களில் உள்ள நீர்த் தேக்கங்களான மவுசாகல, கென்ஜோன், காசல்ரி, லக்ஷபான, விமலசுரேந்திர ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மலையகப் பகுதிகளில் நிலவும் இந்த வரட்சி தொடருமானால் மின்வெட்டு அமுல் படுத்தப்படும் சாத்தியம் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இப்பகுதிகளில் இரவு வேளையில் கடும்குளிர் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ளி)




# தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு 30 லட்சம் பார்வையாளர்கள் வருகை

## முன்னாள் அமைச்சர் தகவல்

கண்டி,பெப்.16

இலங்கையின் 62ஆவது சுதந்திர தினத்தையொட்டி கண்டி பல்லேகலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''தேசத்திற்கு மகுடம்'' கண்காட்சிக்கு மொத்தமாக 30 இலட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் வருகை தந்துள்ளனர் என தேசிய வருமான மற்றும் நிதி தொடர்பான முன்னாள் பிரதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 04ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கண்காட்சிக்கு நாடெங்கிலுமிருந்து 30 லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் வந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர்-

கொழும்புக்கு வெளியே முதன் முதலாக நடத்தப்பட்ட இந்தக் கண்காட்சிக்கு இந்தளவு மக்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படவில்லை என்றும் அவர்கள் காட்டிய ஆர்வம் பிரமிப்பூட்டுகின்றது என்றும் தெரிவித்தார்.

60 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப் பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்தக் கண்காட்சியின்போது தேசிய லொத்தர் சபை 20 லட்சம் ரூபா பெறுமதியான அதிஷ்டலாபச் சீட்டுகளை விற்பனை செய்து சாதனைபடைத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

அடுத்த ஆண்டிற்கான 'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சி மொனராகலையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்று முடிந்த 'தேசத்தின் மகுடம்' கண்காட்சிமூலம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு அபரிமிதமான வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த எட்டு நாள்களாக கண்டி பல்லேகலவில் நடந்துவந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சியைக் காணவந்த பார்வையாளர்களுக்கான போக்குவரத்துச் சேவைகளை வழங்கிய வகையில் இலங்கை போக்குவரத்துச் சபை இரண்டு கோடி 75 லட்சத்திற்கும் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதென சபையின் மத்தியமாகாண பிரதேச முகாமையாளர் மஹிந்த பஸ்நாயக்க தெரிவித்தார்.

சாதாரணமாக மத்திய மாகாணத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் நாள் ஒன்றுக்கான வருமானம் ஒரு கோடி 80 லட்சம் ரூபா என்றும், தேசத்திற்கு மகுடம் கண்காட்சி காரணமாக இந்த வருமானம் மேலும் ஒரு கோடி ரூபாவால் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கண்காட்சிக்காக மத்திய மாகாணத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சுமார் 420 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

இவற்றுக்கு மேலதிகமாக மேல்மாகாணம், வடமத்திய, ஊவா, ரஜரட்ட போன்ற பிரதேசங்களிலிருந்தும் நூறு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. (ளி)

# கம்பஹா பிரதேசத்தில் 33 மின் திட்டங்கள்

கண்டி,பெப்.16

கம்பஹா தேர்தல் தொகுதியில் 72 லட்சத்து 51 ஆயிரத்து 905 ரூபா செலவில் 33 மின் வழங்கல் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் அபிவிருத்திப் பணியில் மகிந்த சிந்தனையின் கீழ் மின்சார வசதியற்ற சகலருக்கும் மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்குடன் கம்பஹா மாவட்டத்தில் 33 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சமய விவகார அமைச்சர் பந்து பண்டாரநாயக தெரிவித்தார்.

இன்னும் சில தினங்களில் இத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமெனவும் நாட்டின் அபிவிருத்திப் பணியில் மின்சாரம் அடிப்படை வசதிகளில் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்து பண்டாநாயக தெரிவித்தார்.

கடந்த 8ஆம்திகதி வெலிபேரியவில நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் கம்பஹா பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தான் அர்ப்பணிப்புடன் செயல்படவிருப்பதாக மேலும் தெரிவித்தார். (ளி)

# மாத்தளை மாணவி உயிரிழப்பு; உணவு விநியோகித்தவர் கைது

மாத்தளை,பெப்.16

மாத்தளை, பலாபதவல பாடசாலையில் உணவு விஷமடைந்து இருபது மாணவிகள் சுகவீனமடைந்ததுடன், மாணவி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தில் பாடசாலைக்கு உணவு விநியோகித்து வந்த ஒப்பந்தகாரர் கைது செய்யப்பட்டுள்ளார் என மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயம்பதி பண்டார தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபர் மாத்தளை மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளுக்கும் பகலுணவு விநியோகிப்பவர் என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

உணவு விசமடைந்ததால் மாத்தளை பலாவத்வல புத்தகோஸ வித்தியாலய மாணவி ஒருவர் கடந்த 11ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

மாத்தளை பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 22 மாணவர்கள் உட்கொண்ட உணவு விசமடைந்ததன் காரணமாக சுகவீனமுற்ற நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கபட்டனர் என்றும் அவர்களில் ஒரு மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 16 மாணவிகள் அடங்குகின்றனர் என்றும் கூறப்பட்டது.

இந்த மாணவி உள்ளிட்ட ஏனைய மாணவர்கள் உட்கொண்டதாகக் கூறப்படும் உணவின் மாதிரிகளை அரச பகுப்பாய்வாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என மாத்தளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவியின் பிரேத பரிசோதனைகள் கடந்த 12ஆம் திகதி மாத்தளை வைத்தியசாலையில் இடம்பெற்றன.

தரம் ஐந்தில் கல்விகற்கும் மாத்தளை தொம்பேவலயைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதே உயிரிழந்துள்ளார் என வைத்திய அதிகாரி டாக்டர் டபிள்யூ. கே. டபிள்யூ. எஸ். குமாரவம்ஸ தெரிவித்துள்ளார். (ளி)

# மஹா ஓயா நீர்வீழ்ச்சி மூலம் மின் உற்பத்தி நடவடிக்கை

மாவனல்லை, பெப்.16

மாவனல்லை நகரினூடாகப் பாய்ந்தோடும் மஹாஓயா அருவி ஆரம்பமாகும் இடமான எஹுப்பினிஎல்ல நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரியவரு கின்றது.

இதேபோன்று மாவனல்லை பூட்டாவை என்ற இடத்திலும் மஹா ஓயாவை மறித்து சிறு மின் உற்பத்தி ஏற்படுத்தப்படவுள்ளது என்றும், மேலும் பல கிராமங்களுக்கு குழாய் தண்ணீர் வசதிகள் வழங்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

பிரஸ்தாப பகுதியிலிருந்து மாவனல்லை, றம்புக்கனை, கேகாலை, அளவ்வை போன்ற இடங்களுக்கும் குழாய் மூலம் தண்ணீர் பெறப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் பொருட்டு அவ்வப்பிரதேசங்களில் பாரிய நீர்த்தாங்கிகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (ளி)

# கடுகண்ணாவை தீ விபத்தில் உடைமைகளுக்குப் பாரியசேதம்

கண்டி,பெப்.16

கடுகண்ணாவை நகர மத்தியில் அமைந்துள்ள பழைய பொருட்கள் கொள்வனவு நிலையமொன்றில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இந்த வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட தீ அருகிலுள்ள பல வீடுகளுக்கும் பரவியதில் அங்கிருந்த பெறுதியான பொருள்களும் எரிந்துபோயின - என்றும் தெரிவிக்கப்பட்டது.

தீவிபத்திற்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும், சேதங்களின் மொத்த இழப்பீடு மதிப்பிடப்பட்டு வருகின்றது என்றும் கடுண்ணாவைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரோஹண வணிகசேகர தெரிவித்தார். (ளி)

# திருமணத்திற்கு இணங்காத காதலியை எரித்துக் கொன்றவருக்கு கடூழியச்சிறை

கொழும்பு,பெப்.16

திருமணத்துக்கு சம்மதிக்க மறுத்த காதலியை பெற்றோல் ஊற்றித் தீமூட்டி எரித்துக்கொன்ற காதலன் ஒருவனுக்கு 12 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் , 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து கண்டி மேல்நீதி மன்ற நீதிபதி பத்மன் சூரசேன தீர்ப்பளித் துள்ளார்.

அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 8 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2003 ஆம் [illegible] திகதி கண்டி [illegible] கட பிரதேசவாசியான 17 வயதுடைய எச்.எம்.யமுனா ஞானவதி எனும் யுவதியை பெற்றோல் ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தினார் என யுவதியின் மைத்துனனும், காதலனுமான அநுரபண்டார என்பவருக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவர்களது விவாகத்துக்கு இரு தரப்பிலும் எதிர்ப்பு இருந்தபடியால் குறிப்பிட்ட யுவதி விவாகத்துக்கு சம்மதிக்கவில்லை. இறுதி முயற்சியாக அவரை தன்னுடன் ஓடி வந்து விடுமாறு காதலன் நிர்ப்பந்தித்துள்ளார்.

அதற்கு யுவதி இணக்கம் தெரிவிக்காததால் தனது காற்சட்டைப் பையில் தயாராக [illegible] பெற்றோலை ஊற்றி தீயிட்டுக் கொளுத்தினார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. (ளி)

# இராணுவ டிரக்டர் விபத்து மூன்று சிப்பாய்கள் காயம்

பதுளை,பெப்.16

பதுளை ரிதிபான பிரதேசத்தில் அண்மையில் மாலை 6 மணியளவில் தியத்தலாவை இராணுவ முகாமுக்குச் சொந்தமான டிரக்டர் ஒன்று ஓடிக்கொண்டிருந்த சமயம் திடீரென அதன் இரண்டு முன்சில்லுகளும் கழன்றதில் டிரக்டர் புரண்டு பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

இதில் இராணுவ சிப்பாய்கள் இருவரும், இராணுவச் சாரதியும் காயமுற்று பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நடந்ததுடன் பதுளை மாநகர சபையின் தீயணைப்பு மற்றும் உயிர்காப்புப் பிரிவு சம்பவ இடத்துக்கு விரைந்து பொது மக்களின் உதவியுடன் புரண்ட டிரக்டரின் கீழ் சிக்கியிருந்த மூவரையும் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தன என்றும், இதில் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகியிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கந்தகெட்டிய லோகல்ஓயா பிரதேசத்திலுள்ள வனமொன்றில் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உணவு கொண்டு சென்று விட்டு மீண்டும் தியத்தலாவை முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் விஞ்ஞான தொழில்நுட்ப நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்விற்கு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண வருகை தந்தபோது பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸால் வரவேற்கப்படுவதையும் அமைச்சர் அடிக்கல் நாட்டுவதையும் முதலிரு படங்களிலும் பிரதேச செயலர் வரவேற்புரையாற்றுவதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: மருதன்)*

## ஸ்ரீ மஹோற்சவப் பத்ததி வெளியீடு

ஊரெழு அமரர் சிவஸ்ரீ பால.வைத்தியநாத சிவாச்சார்யார் அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட ஸ்ரீ மஹோற்சவப் பத்ததியின் இரண்டாம் பதிப்பு வெளியீடு 17.02.2010 புதன்கிழமை ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய துவஜாரோகணத்தன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

சிவாச்சார்யார் பீடம், ஊரெழு.

(94878)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)



**பிரத்தியேக வகுப்புக்கள்**
ஆண்டு 1 இலிருந்து 08 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் திறமையான பெண் ஆசிரியையினால், யாழ்ப்பாணத்தில் உள்ள உங்கள் வீடுகளுக்கு வந்து சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.
தொலைபேசி இலக்கம்: 0779626030


## முன் அறிவித்தலின்றி மின் வெட்டு அமுல்

நீண்டநாள் இடைவெளிக்குப் பின்னர் முன்னறிவித்தல் இன்றி ஏற்பட்ட மின் வெட்டால் பாவனையாளர்கள் சிரமப்பட்டனர். மானிப்பாய் பிரதேசத்தில் சென்ற மூன்று தினங்களாக இரவு 7 மணி தொடக்கம் அரை மணித்தியாலங்கள் மின்விநியோகம் தடைப்பட்டது.

எதிர்பாராது ஏற்பட்ட இந்த மின் தடையால் எதுவித முன்னேற்பாடுகளும் இன்றி பாவனையாளர் சிரமப்பட்டனர். கடைகள் வியாபார நிலையங்களும் திடீரென இருளில் மூழ்கியதால் பல்வேறு இடர்பாடுகள் நேர்ந்தன. (267)

## வீதி விளக்குகள் இன்மையால் மக்கள் இடர்பாடு

மானிப்பாய் வீதி, உடுவில் வீதி, டச்சு வீதி எனும் வீதிகளில் வீதி விளக்குகள் இன்மையால் பாதசாரிகளும், வாகனச் சாரதிகளும் இரவு நேரங்களில் பயணத்தின்போது இடர்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது இரவு 10 மணிவரை வாகனம் போக்கு வரத்துகள் நெரிசலாக இடம்பெறுகின்றன. வீதி விளக்கு இன்மையால் இருளில் பாதசாரிகளும், சைக்கிள் பயணிகளும் பல்வேறு இடர்பாடுகளையும் எதிர்நோக்கு கின்றனர். மானிப்பாய்வீதியில் இடை யிடையே வீதிவிளக்குகள் இருந்தாலும் பல இடங்கள் இருளில் சூழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (267)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கணபதிப்பிள்ளை
கோபாலசாமி
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)
திதி: 16.02.2010

ஆண்டு ஒன்று மறைந்தாலும் - உங்கள்
நினைவு எங்கள் மனதைவிட்டு மறையாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 24.02.1931
மறைவு 27.02.2009

கற்கோவளம், பருத்தித்துறை.
குடும்பத்தினர்.

(92151)

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
### சுன்னாகம்
### வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி-2010

**காலம்:-** 16.02.2010-செவ்வாய்க்கிழமை
**நேரம்:-** பி.ப.1.30 மணி
**இடம்:-** கல்லூரி மைதானம்
**தலைவர்:-** திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் (அதிபர்)

**பிரதம விருந்தினர்கள்**
ஸ்கந்தாவின் மைந்தன் திரு.சோ.அனந்தசயனன் அவர்கள் [பொறியியலாளர்]
திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் [அதிபர் மகாஜனாக் கல்லூரி]

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு செ.குபேரநாதன் அவர்கள் [கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்]

**கௌரவ விருந்தினர்கள்**
ஸ்கந்தாவின் மைந்தர்கள்
திரு ந.நந்தரூபன் அவர்கள் (பொறியியலாளர்). திரு ச.மகேந்திரன் அவர்கள் (தலைவர் O.S.A கொழும்பு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை, சுன்னாகம். (94880) அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்.



பழைய காளிகோயில் என விளங்கும்
கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி

திருவருள்மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானம்

## திருமஞ்சம், தேர் வெள்ளோட்ட விழா

**அம்பிகை அடியார்களே!**

இற்றைக்கு இருநூறு வருடம் பழமை வாய்ந்த மேற்படி ஆலயத்தில் மங்களகரமான விரோதி வருடம் மாசித் திங்கள் ஐந்தாம் நாள் புதன்கிழமை (17.02.2010) காலை 11 மணிக்கு திருமஞ்சம், தேர் ஆகியவற்றின் வெள்ளோட்ட விழா நடைபெறும்.

**23.02.2010 இரவு 7 மணிக்கு திருமஞ்சத் திருவிழாவும்**
**27.02.2010 முற்பகல்10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும்.**

*அடியார்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளைப்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வீர்களாக.*

அம்பாள் அடியார்கள்
கோண்டாவில்.

(94884)


**வெள்ளிவிழாவை முன்னிட்டு**
**அனைத்து கணினி பாடநெறிகளுக்கும் CSC வழங்கும்**
**75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை**
25 YEARS

CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION



**வெள்ளிவிழா சிறப்புச் சலுகை 28-02-2010 வரை மட்டுமே !**

* மாணவர்கள் விரும்பிய பாடநெறி ஒன்றை நேரடியாக தெரிவு செய்யலாம்.
* பதிவுகளை உடனே மேற்கொண்டு வகுப்புக்களில் இணைந்து கொள்ளலாம்.
* தெரிவு செய்யும் பாடநெறிக்கு 25% மட்டுமே கட்டணமாக செலுத்த வேண்டும்.
* இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்படும்.
* 100% செயன்முறைப் பயிற்சி.
* அடிப்படைத் தகைமை G.C.E (O/L).
* டிப்ளோமா சான்றிதழ்கள் அனைத்தும் Asian - CSC நிறுவனத்தால் வழங்கப்படும்.

சர்வதேச தர நிர்ணய கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கல்லூரி
ISO 9001 : 2000

**Diploma Courses**
* Information Technology
* IT & Web Programming
* PC Professional
* Graphic Design & DTP
* Macromedia Application
* Adv. Java Programming
* Office Automation
* Software Engineering
* Web Design & Development
* Digital Video Production
* Hardware & Networking
* Computer Applications
* Digital Pre-Press

மேலதிக விபரங்களுக்கு
**ASIAN COMPUTER EDUCATION**
[illegible]ன்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செனட் உபகுழு அறிக்கை சொல்லும் செய்தி என்ன?


**இலங்கையுடனான தனது உறவாடல் கொள்கையை அமெரிக்க நிர்வாகம் மீளாய்வு செய்ய வேண்டும் என வலியுறுத்தும் அறிக்கை ஒன்றை செனட்டர் ஜோன் கெரி தலைமையிலான வெளிவிவகார செனட் குழு கடந்த டிசம்பரில் வெளியிட்டது. அது பற்றிய இந்தக் கண்ணோட்டம் 'பதிவு' இணையத்தளத்தில் பிரசுரமாகியுள்ளது.**

தேசிய நலனின் உள்ளடக்கமான வெளிவிவகாரக் கொள்கையில் அடிப்படை மாற்றம் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள் இருத்தல் வேண்டும். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரும், ஆளும் ஜனநாயகக் கட்சியின் முன்னணி உறுப்பினரும். அமெரிக்க செனெட் சபையின் வெளிவிவகாரக் குழுத் தலைவருமான ஜோன் கெரியின் பெயரில் வெளிவந்த சிறிலங்கா தொடர்பான அறிக்கைக்குப் பெருமளவு முக்கியத்துவம் உண்டு.

தமிழர்களாகிய நாம் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் ஒரு கனதியான மாற்றம் ஏற்படப் போவதை இந்த அறிக்கையில் இருந்து புரிந்து கொள்வது அவசியம். மாற்றம் என்ற தாரக மந்திரத்தை ஆரம்பத்தில் கொண்டிருந்த ஒபாமா நிர்வாகம் அதை நிராகரித்து விட்டு முந்திய நிர்வாகம் கொண்டிருந்த வெளிவிவகாரக் கொள்கைக்குத் திரும்புவதற்கான சமிக்ஞையாக ஜோன் கெரி அறிக்கையைப் புரிந்துகொண்டால் வரப்போகும் அதிர்ச்சித் திருப்பங்களின் தாக்கத்தில் இருந்து விலகிக்கொள்ள முடியும்.

காலம் காலமாகத் தொடரும் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் இரு முக்கிய

அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானப் பணி



போக்குகளை நோக்கர்கள் அவதானித்துள்ளனர். உன்னதமான மனித நேய இலட்சியங்களை வெளிப்படுத்தும் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை அதேசமயத்தில் உலக ஆதிக்கத்திற்கான வல்லாதிக்கக் குறிக்கோளையும் வெளிப்படுத்தி வருகிறது. இந்த இரட்டைப் போக்கிலிருந்து அமெரிக்காவினால் விலகிக் கொள்ள முடியவில்லைப் போலும், இரு தடவை இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய செஸ்ரர் போல்ஸ் அவர்களுடைய பொது வாழ்வில் மேற்கூறிய உன்னத இலட்சியங்களும் உலக ஆதிக்க வல்லாதிக்கமும் இரண்டறக் கலந்திருந்தன. போல்சின் காலம் பனிப்போரின் உச்சக்கட்டம். இருப்பினும் அவர் அமெரிக்க இலட்சியங்களை வெளிப்படையாகப் பேசி வந்தார். போல்ஸ் காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜோன் கெனடியும் விதிவிலக்கல்லர்.

**-வீமன் -**

அவர் அமெரிக்க அரசியலில் ஒரு மறுமலர்ச்சிக்கான கட்டியம் கூறினார். ஆனால் அவர் வியட்நாம் போரை விரிவுப் படுத்திப் பேரழிவை ஏற்படுத்தினார். படுதோல்வியில் முடிந்த கியூபா மீதான இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். இப்போது ஒபாமாவும் கெனடியின் பாதையில் செல்வதற்கு தயாராகிவிட்டாரா என்று எண்ணத் தோன்றுகிறது.

டிசம்பர் 07 ஆம் திகதியிடப்பட்ட ஜோன் கெரி அறிக்கையின் முழுத்தலைப்பு சிறிலங்காப் போர் முடிந்தபின் அமெரிக்க அணுகுமுறையை மீளமைத்தல் என்பதாகும். பூடகமாகத் தெரிவிக்கப்பட்ட இந்தத் தலைப்பில் உள்ளர்த்தம் என்னவாக இருக்கும் என்பதை ஆராய்வது எமது முக்கிய நோக்கம். சிறிலங்காவின் புவிசார்ந்த அரசியலில் அமைவிட முக்கியத்துவம் அண்மைக் காலமாக உயர்ந்துள்ளதை இந்த அறிக்கை தனது முக்கிய செய்தியாகக் குறிப்பிடுகின்றது. இதை ஒட்டிய செய்தியாக சிறிலங்காவின் நெருக்கமான நட்புறவை இழப்பது அமெரிக்காவுக்குக் கட்டுப்படியாகாது என்றும் சொல்லப்படுகின்றது. சிறிலங்காவை மிரட்டிப் பணிய வைக்க முடியாது என்ற தகவலும் அறிக்கை மூலம் கிடைக்கிறது. அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் அனைத்தும் ஜனாதிபதி ராஜபக்ஷ அரசும் படைகளும் போரை நடத்திய விதத்தையும் அவை போரின் போது நடத்திய மனித உரிமை மீறல்களையும், புரிந்த போரியல் குற்றங்களையும் கண்டித்த போது சிறிலங்கா அரசு சீனா, ஈரான், லிபியா, பர்மா போன்ற நாடுகளுடன் நெருக்க உறவைப் பேணியதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இது போன்ற அறிக்கையில் ஓரளவு நேர்மையையும் நாணயத்தையும் எதிர்பார்ப்பது இயற்கை. அமெரிக்காவின் நட்பு நாடுகளான இந்தியாவும் பாக்கிஸ்தானும் ராஜபக்ஷவின் தமிழர் களுக்கு எதிரான போருக்கு வழங்கிய ஆயுத, அரசியல் மற்றும் இராஜதந்திர உதவிகள், புலனாய்வுத் தகவல்கள் போன்ற முக்கிய வழங்கல்கள் பற்றிய செய்தியை குறிப்பிடாமல் விட்ட அறிக்கை தமிழர் தரப்பிற்குத் திருப்தி அளிப்பதாக இல்லை. தடுப்பு முகாம்களில் நெருக்கி அடைக்கப்பட்ட பொதுமக்களை விரைவில் விடுவிப்பதற்கு இந்திய அரசு எடுத்த முயற்சிகள் பலன் அளித்ததாக கூறும் அறிக்கை போருக்கு இந்திய மத்திய அரசு வழங்கிய அனுசரணை பற்றிக் குறிப்பிடாமல் விட்டுள்ள மையை ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. சிறிலங்கா நடத்திய போர் வெற்றி அடைவதற்கும் புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கும் பின்னால் இருந்து செயற்பட்டது இந்தியா தான். போர் முடிவடைந்தபின் இது இந்தியாவின் போர் என்று ராசபக்ஷ அரசே குறிப்பிட்டுள்ளது. பாரியளவு ஆயுதங்களை வழங்கிய இந்தியா தனது இராணுவ ஆலோசகர்களையும் புலனாய்வு அதிகாரிகளையும் சிறிலங்காவிற்குள் தள்ளியுள்ளது. தமிழ் நாட்டிலும் உலக மட்டத்திலும் சிறிலங்காவுக்கு எதிரான குரல் எழும்பாமல் தனது இராஜதந்திர வீச்சு மூலம் இந்தியா தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஜோன் கெரி அறிக்கையின் முக்கிய நட்சத்திரச் செய்தி பின் வருமாறு:-

சிறிலங்கா விவகாரத்தில் ஒபாமா நிர்வாகம் குறுகிய கால மனித உரிமை மற்றும் மனித நேயக் கரிசனைகளில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் புவிசார் அரசியல் அமைவிட நோக்கங்களில் விரிவான கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் என்று இந்த அறிக்கை பரிந்துரை செய்கிறது. நெருக்கமான பொருளாதார, இராணுவப் பாதுகாப்பு மேம்பாட்டுத்திட்ட உதவிகளை சிறிலங்காவிக்கு அமெரிக்கா வழங்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்படுகிறது. போரின் முடிவுக்குப் பின் புதிய அரசியல் மற்றும் பொருளாதார யதார்த்தங்களுக்குப் பொருத்தமான சிறிலங்கா தொடர்பான வெளியுறவுக் கொள்கையை அமெரிக்கா வகுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் அறிக்கை, இதன் அர்த்தம் மனிதநேய விவகாரங்களைக் கைவிடுதல் என்றல்ல என்று கூறுகிறது. எதிர்வரும் காலத்தில் மனிதநேய விவகாரம் மாத்திரம் அமெரிக்காவின் ஒற் றைக் கரிசனையாக இருக்கக் கூடாது என்று அது அடித்துக் கூறுகிறது.

அமெரிக்க அரசு சிறிலங்கா அரசுக்கு நேரடி போர் உதவிகளை வழங்காமல் விட்டது ஓரளவுக்கு உண்மை என்றாலும் அதன் நட்பு நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், செக் குடியரசு போன்றவை அத்தகைய உதவிகளை வழங்கிய போது அமெரிக்கா தடுப்பு நடவடிக்கை எடுக்காமல் விலகியுள்ளது.


மனித நேயக் கரிசனைகளில் மாத்திரம் போர்க் காலத்தில் அமெரிக்கா கவனம் செலுத்தியது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பான செய்தி. கொத்துக் குண்டுகள், இரசாயன ஆயுதங்கள் போன்ற தடை செய்யப்பட்ட படைக்கலங்கள் பயன்படுத்தப்பட்ட போது மேற்குலகம் வெற்று அறிக்கைகளை மாத்திரம் விடுத்தவாறு மௌனம் சாதித்தது. இதைச் சிறிலங்கா நடத்திய போருக்கு வழங்கப்பட்ட மறைமுக ஆதரவு என்று கணிப்பிட வேண்டும். ஐ.நாப் பாதுகாப்புச் சபையில் போர் நிறுத்தம் ஏற்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைதனது வெட்டு வாக்கு மூலம் சீனா செயலிழக்கச் செய்துவிட்டது என ஜோன் கெரி அறிக்கை கூறுகின்றது. ஐ.நாவின் ஒப்புதல் இன்றி அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பு பொஸ்னியா விவகாரத்தில் படை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அத்தோடு கொசோவா என்ற புதிய நாடு பிறப்பதற்கும் ஆதரவுவழங்கியுள்ளது. தனது தேதிய நலன் என்று வந்து விட்டால் எந்த நாடும் அத்து மீறல்களைச் செய்யத் தயங்கமாட் டாது என்பதற்கு இது சிறந்த உதாரணம்.



மஹிந்த



பராக் ஒபாமா



ஜோன் கெரி

சிறிலங்காப் போர் நடந்த காலத்தில் ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீமூன் போரைத் தடுப்பதற்குப் பதிலாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப நண்பர் என்ற காரணத்திற்காக அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்தார் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இது பற்றிய ஆய்வை மேற்கொள்வது அவசியமாகும்.

போர்க் காலத்தில் உதவி வழங்காமல் பின்னின்ற காரணத்தால் அமெரிக்கா - சிறிலங்கா உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளமையை கெரி அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இந்து மாகடலில் மாறி வரும் சூழல், அதன் கடற் பாதைகளில் சிறிலங்காவின் கேந்திர அமைவிடம் காரணமாக எழுந்த முக்கியத்துவம் ஆகியன விரிசலை அகற்றி நெருக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய அத்தியாவசியத்தை ஏற்படுத்துகின்றன என்ற அடிப்படையில் இந்த அறிக்கை வலியுறுத்துகிறது. மேற்கு நாடுகள் விதிக்கும் நிபந்தனைகள் இல்லாமல் பல மில்லியன் பெறுமதியான இராணுவ மற்றும் போர் உபகரணக் கடன்கள், உட்கட்டமைப்புக் கடன்கள், துறைமுக விரிவாக்கக் கடன்கள் போன்றவற்றைச் சீனா வழங்குவதை அறிக்கை மூலம் காணமுடிகிறது. அம்பாந்தோட்டையில் ஓர் ஆழ்கடல் துறை முகத்தைக் கட்டுவதற்கு ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தத்தைச் சீனா சிறிலங்காவுடன் 2007 இல் செய்து கொண்ட நிகழ்ச்சி அமெரிக்காவிலும் அதன் நட்பு நாடான இந்தியாவிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. 2008 இல் சீனா ஒரு பில்லியன் டொலர் கடனுதவியை சிறிலங்கா அரசுக்கு வழங்கியது. 2009 இல் கொழும்புத்துறை முகத்தில் இருந்து 34 மைல் தொலைவிலுள்ள மீரிகம என்ற பிரதேசத்தில் ஒரு பிரத்தியேக பொருளாதார வலயத்தை சிறிலங்கா சீனாவிற்கு வழங்கியது.



*(18 ஆம் பக்கம் பார்க்க....)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## புவியியல் (சூழற் புவியியல்) — பகுதி - I

* எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. பூமியின் அமைவிட நிலையினைக் காட்டும் சரியான படிமுறை யாது?
 1) பால்வழி → பூமி → சூரிய மண்டலம் → பிரபஞ்சம்.
 2) பூமி → பால்வழி → அண்டம் → சூரிய மண்டலம்.
 3) பிரபஞ்சம் → பால்வழி → சூரிய மண்டலம் → பூமி.
 4) பால்வழி → பிரபஞ்சம் → சூரிய மண்டலம் → பூமி.

02. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகப்பெரிய கோளின் விட்டம் எவ்வளவு?
 1) 16,794 km 2) 141,968 km 3) 14,296 km 4) 12,3926 km

03. ஞாயிற்றுத் தொகுதியில் காணப்படும் இரசாயனம்சார் மற்றும் சாரா மூலங்கள் எவை?
 1) காபன், மொனக்சைட், சயனசன், சோடியம், இரும்பு, நிக்கல், மிதேன், அமோனியா, தூசு என்பன.
 2) காபன், நைற்றஜன், ஒட்சிசன் என்பன.
 3) நைதரசன் மட்டும். 4) ஒட்சிசன், மெதேன் மட்டும்.

04. புவி தன்னைத் தான் சுழல எடுக்கும் சரியான நேர அளவு,
 1) 23 மணித்தியாலங்களும் 56 நிமிடங்களும்.
 2) 23 மணித்தியாலங்களும் 56 நிமிடங்களும் 40 செக்கன்களும்.
 3) 24 மணித்தியாலங்களும் 56 நிமிடங்களும் 04 செக்கன்களும்.
 4) 23 மணித்தியாலங்களும் 55 நிமிடங்களும் 02 செக்கன்களும்.

05. பருவகால அடிப்படையில் ஜூன் மாதம் 21 ஆம் திகதி சூரியன்; வடக்கே கடகக் கோட்டில் உச்சம் கொடுப்பதை எவ்வாறு அழைப்பர்?
 1) சமவிராக் காலங்கள். 2) மாரிச் சூரிய கணநிலை நேரம்.
 3) கிறீன்விச் நேரம். 4) கோடைச் சூரிய கணநிலை நேரம்.

06. புவியானது அகலக்கோடுகள், நெடுங்கோடுகள் கொண்டு வரையப்படுகிறது. அதில் ஒவ்வொரு அகலக்கோடுகளுக்கிடையிலும் காணப்படும் சரியான தூர இடைவெளி கிலோமீற்றர்களில்,
 1) 111.3 கி.மீ. 2) 114.2 கி.மீ. 3) 110.5 கி.மீ. 4) 116 கி.மீ.

07. புவிநடுக்க அலைகளில் திடப்பொருட்களையும் திரவப்பொருட்களையும் தங்கு தடையின்றி ஊடுருவிச்செல்லும் அலை எது?
 1) P அலைகள் (Primary Waves) நெடுங்கோட்டு அமுக்க அலைகள்.
 2) S அலைகள் (Secondary Waves) அதிர்வலைகள்.
 3) L அலைகள் (Surface Waves) புவியோட்டின் மேற்பரப்பில் பயணம் செய்யும் அலைகள்.
 4) யாவும் சரியானது.

08. இதுவரை நீர்க்கோளத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மூலக்கூறுகள் எத்தனை?
 1) 57. 2) 105. 3) 61. 4) 96.

09. புவிச்சரிதவியல் (Geology) அடிப்படையில் ''பஞ்சியா'' என்ற கண்டத்தொகுதி காணப்பட்ட காலப்பகுதி எது?
 1) இயோசின் காலம். 2) மயோசின் காலம்.
 3) கார்போனிபரஸ் காலம். 4) தற்காலம்.

10. அல்பிரட் வெக்னர் எத்தனையாம் ஆண்டு கண்ட நகர்வுக் கொள்கையை வெளியிட்டார்?
 1) 1905. 2) 1912. 3) 1878. 4) 1901.

11. 1988 ஆம் ஆண்டிலிருந்து ஆபத்தினை எதிர்நோக்கிநிற்கும் உயிரினங்கள் மற்றும் உயிர்ப் பல்வகைமை தொடர்பான விவரங்கள் ''Biological Hotspobs'' என்ற பட்டியல்களில் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு உலக பாதுகாப்புச் சமூகத்தினால் ''அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள இனங்கள்'' பற்றிய விவரத்தைத் தரும் புத்தகம் எது?
 1) செந்தரவுப் புத்தகம் (Red Data Book)
 2) உயிரியல் புத்தகம் (Biology Book)
 3) நீலத்தரவுப் புத்தகம் (Blue Data Book)
 4) சூழலியற் புத்தகம் (Ecology Book)

12. வளிமண்டல காலநிலை மாற்றத்தைப் பாதுகாப்பதற்காக வேண்டி 1997 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முதலாவது **கியோட்டோ** பிரகடனத்தின் பிரதான நோக்கம்,
 1) ஒட்சிசன் வாயுக்களைக் குறைத்தல்.
 2) காபனீரொக்சைட்டு வாயுக்களைக் கூட்டுதல்.
 3) வளிமண்டலத்திற்குச் செலுத்தும் CFC (குளோரோ புளோரோ காபன்) அளவைக் குறைத்தல்.
 4) பச்சை வீட்டு வாயுக்களைக் குறைத்தல்.

13. பவளக்கற்பாறைகள், நீர்வாழ் உயிரினங்கள் பற்றிய ஆய்வுகளை நடத்திவரும் நிறுவனம்,
 1) U.N.H.C.R 2) ZOA 3) NARA 4) IOM

14. 1993 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த **உயிரியல் சாசனம்** எங்கு கைச்சாத்திடப்பட்டது?
 1) கொழும்பு. 2) கன்பேரா.
 3) டொரன்டோ. 4) றியோடிஜெனிரோ.

15. பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் (PTWC) (Pasfic Tsunami Warning Centre) சர்வதேச சுனாமி தகவல் நிலையம் (ITIC) (International Tsunami Information Centre) ஆகிய இந்த இரு நிலையங்களும் அமைந்துள்ள நாடு எது?
 1) பிறேசில். 2) ஹவாய்த்தீவு.
 3) அமெரிக்கா. 4) மெக்சிக்கோ.


16. சோக்குப்பாறையை தோற்றத்தின் அடிப்படையில் எம்முறையால் உருவான அடையற் பாறையாகக் கொள்ளலாம்?
 1) பொறிமுறையால் உருவான அடையற் பாறை (Mechanically Derived Rocks)
 2) பௌதிகமுறையால் உருவான அடையற் பாறை (Physically Derived Rocks)
 3) சேதனமுறையால் உருவான அடையற் பாறை (Organically Derived Rocks)
 4) இரசாயனமுறையால் உருவான அடையற் பாறை (Chemically Derived Rocks)

17. பாறைகள் உருமாறும் தன்மையைக் கொண்டுள்ளமையினால் உருமாறிய பாறைகள் உருவாகின்றன. அந்த அடிப்படையில் ''கருங்கல்'' என்ற தீப்பாறை ''பளிங்குப் பட்டைப் பாறை'' ஆக மாறுவதற்கு பின்வரும் எவ் உருமாற்ற முறை காரணம்?
 1) வெப்ப உருமாற்றம் (Thermal Metamorphism)
 2) அமுக்க உருமாற்றம் (Cataclastie Metamorphism)
 3) பிரதேச உருமாற்றம் (Regional Metamorphism)
 4) சாதாரண உருமாற்றம் (Normal Metamorphism)

18. காற்றின் தின்னல் செயல்களுள் ''தேய்த்தல்'' ஒன்றாகும். இத்தேய்த்தலின் மூலம் உருவாகும் பாறை வடிவமைப்பு,
 1) காளான் வடிவப் பாறை (Mushroom Rocks)
 2) பாறைச்சமவெளி (Rock Plains)
 3) நெடுமணற்குன்று (Seifs Dune)
 4) குறுக்கு மணற்குன்று (Transverse Dune)

19. அரித்தல் கருவிகளுள் பனிக்கட்டியாற்றரிப்பும் பிரதானமானது. அதன் பிரதான தின்னற் செயல்கள்,
 1) பறித்தல், தேய்த்தல். 2) தேய்த்தல், அரைந்து தேய்த்தல்.
 3) அரித்தல், வாரிஇறக்கல். 4) சுரண்டல், நீர்த்தாக்கம்.

20. இங்கு காட்டப்பட்டுள்ள நில உருவத்தின் பெயர் என்ன?
 1) போல்ஜே (Polije)
 2) புனற்பள்ளம் (Doline)
 3) லாப்பீஸ் (Lapies)
 4) உவாலாஸ் (Uvalas)



21. முருகைப்பல்லடியம் (Coral Polyp) எனப்படும் கடல்வாழ் நுண்ணிய உயிரினங்களால் தோன்றுவது,
 1) கடற்கீழ்ப் பாறைகள். 2) சமுத்திரச் சூழற்சமநிலை.
 3) முருகைக் கற்பார்கள். 4) சமுத்திரக் கரையோர மண் விருத்தி.

22. 1931 இல் உலக ரீதியான காலநிலை பாகுபாட்டினைச் செய்தவர் யார்?
 1) தோன்வைட். 2) கெப்பன். 3) மில்லர். 4) கெபேட்சன்.

23. முதன்முதலாகச் சூழலுக்கெனத் தாபிக்கப்பட்ட நிறுவனம்,
 1) ஐ.நா. சபையின் சூழல் நிகழ்ச்சித்திட்டம் (UNEP)
 2) இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN)
 3) உலக வன உயிரினங்கள் நிதியம் (WF)
 4) உலக அவதானிப்பு நிறுவனம் (WW)

24. புவி மேலோட்டின் அசையும் தகடுகளின் இடையில் எல்லைகள் காணப்படுகின்றன. அத்தகட்டு எல்லைகளின் பிரதான வகைகளின் எண்ணிக்கை,
 1) ஒன்று. 2) இரண்டு. 3) மூன்று. 4) நான்கு.

25. ரெகோசொல்ஸ் (Regosols) என்ற பிரதான மண்வகை இலங்கையின் எப்பகுதியில் அல்லது வலயத்தில் காணப்படுகிறது?
 1) மலைநாட்டு வலயம். 2) கரையோர வலயம்.
 3) கடல் வலயம். 4) மலைநாட்டுத் தாழ்வலயம்.

26. வளிமண்டலத்திலுள்ள $CO_2$ இன் செறிவு 1974 இல் ஏறக்குறைய 330ppm (Parts Per Million) ஆகக் காணப்பட்டது. 1980 இல் 284 ppm ஆகக் குறைந்து 2000 ஆம் ஆண்டில் அதிகரித்துக் காணப்பட்டது. ஏறத்தாழ இருபவது வருடத்துக்குள் கூடுதலாகக் காணப்பட்ட $CO_2$ செறிவு எவ்வளவு?
 1) 46 ppm. 2) 132 ppm. 3) 95 ppm. 4) 65 ppm.

27. இலங்கையின் யானைகளின் சரணாலயம் ''பின்னவல'' அமைந்துள்ள மாவட்டம் எது?
 1) கேகாலை. 2) பொலனறுவை. 3) கம்பஹா. 4) கண்டி.

28. இலங்கையில் யூராஸிக் படிவுகள் காணப்படும் இடங்கள் எவை?
 1) தம்போவாவிலும் ஆண்டிகமவிலும்.
 2) நிலாவெளியிலும் பொலன்னறுவையிலும்.
 3) தோப்பூரிலும் மீற்றியாகொடவிலும். 4) கொழும்பிலும் கேகாலையிலும்.

29. இலங்கையில் சூழற் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?
 1) 1980. 2) 1981. 3) 1983. 4) 1971.

30. தாவரங்களைத் தயாரிப்பாளர்கள் (Producers) என்கிறோம். காரணம் தாவரங்கள் மண்ணிலுள்ள நீரையும் காபனீரொட்சைட்டையும் பயன்படுத்தி பகல்நேரங்களில் சூரிய ஒளி, பச்சையம் கிடைக்கப்பெறும்போது தமது உணவினைத் தாமே தயாரிப்பதாலாகும். இச்செயன்முறையை தாவர ஒளித்தொகுப்பு என்கிறோம். எனவே, ஒளித்தொகுப்புச் செயன்முறையை சரியாகக் காட்டும் சமன்பாடு எது?
 1) $C_6H_{12}O_6 + 6O_2 \rightarrow 6CO_2 + 6H_2O$ + (சக்தி வெளியேற்றம்)
 2) $6CO_2 + 6H_2O$ + சூரிய சக்தி/ பச்சையம் $\rightarrow C_6H_{12}O_6 + 6O_2$
 3) $6CO_2 + 6H_2O \rightarrow C_6H_{12}O_6 + 6O_2$
 4) $6CO_2 + 6H_2O \rightarrow C_6H_{12}O_6 + 6O_2 + H_2O$

31. வெப்பநிலை ஒவ்வொரு 1,000 மீற்றர்களுக்கு 6.4°C குத்துயர அடிப்படையில் வீழ்ச்சியடைவதைக் குறிப்பது,
 1) உயர் வீழ்ச்சிவீதம். 2) இழிவுப்பெறுமானம்.
 3) நழுவு வீதம். 4) வெப்பநிலை குறைவுவீதம்.

32. சூழல்தொகுதி என்ற அடிப்படையில் சமுத்திரச் சூழல்தொகுதியும் முக்கியத்துவம் உடைய ஒன்றாகும். இங்கு முதனிலை உற்பத்தியாக்கி எனப்படுவது,
 1) பிளாந்தன் (Planton)
 2) கடற்றள கிடை உயிரினம் (Benthos)
 3) முருகைக்கற்பாறைகள் (Coral Reefs)
 4) மீனினங்கள்.

33. சூறாவளி ஒன்றின் மையப்பகுதி **கண்** எனப்படும். பொதுவாகப் பெரும்பாலும் புயலின் கண் வட்டமாகக் காணப்படும். அதன்படி ஒரு புயலின்/சூறாவளியின் விட்டம் ஏறத்தாழ எவ்வளவாக இருக்கும்?
 1) 10 - 12 km வரை. 2) 15 - 30 km வரை.
 3) 7 - 15 km வரை. 4) 1 - 10 km வரை.

34. புயல் ஒன்று பூரண வளர்ச்சி அல்லது முதிர்ச்சி பெற்று வீசுகின்றபோது அது பிரதான மூன்று பகுதிகளைக் கொண்ட சுழலும் காற்றுத் தொகுதியாகக் காணப்படும். அவற்றைச் சரியாகக் காட்டும் பகுதி எது?
 1) புயலின் கண், சுழிப்பு வலயம், வெளி வளையம்.
 2) புயலின் கண், சுழிப்பு வலயம், உள் வளையம்.
 3) புயலின் கண், சுழிப்புவளையம் , உள் வலயம்.
 4) சுழிப்பு வலயம், காற்று வலயம், கண் பகுதி.

35. பால்மன் என்ற அறிஞர் வளிமண்டலச் சுற்றோட்டம் பற்றிய கருத்து ஒன்றை வெளியிட்டார். அதில் மத்திய கோட்டிற்கும் அயனவயல் உயரமுக்கத்திற்கும் இடையில் ''ஹட்லி''யின் கலம் அமைக்கின்றது என்றார். இக்கருத்து எத்தனையாம் ஆண்டு வெளியிடப்பட்டது?
 1) 1948. 2) 1949. 3) 1950. 4) 1951.

36. வளிமண்டலப் பொதுச்சுற்றோட்டம் பற்றிய பழைமையான கொள்கையாகக் கொள்ளக்கூடிய முக்கலக் கருதுகோளை (Tri - cellular Theory) தக்க விதமாக விவரித்த அறிஞர் யார்?
 1) லாப்பிலாஸ். 2) வாஸ்கொடகாமா.
 3) றொஸ்ப்பி. 4) கெப்பன்.

(17 ஆம் பக்கம் பார்க்க

ஆசிரியர்:- L.C.ஜன்ஜபீல் B.A (Hons), Sp.Geo
முன்னாள் விரிவுரையாளர்,
ஜாமியா நளீமியா கலாபீடம், பேருவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 உயர்தர மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

# புவியியல் (சூழற் புவியியல்), பகுதி - I

தொடர்ச்சி......

37. அமெரிக்கப் பசுபிக் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி றொக்கி மலைத்தொடரைக் கடந்து வீசும் காற்றின் பெயர் என்ன?
   1) போன் காற்று. 2) பருவக்காற்று.
   3) சினூக் காற்று. 4) முனைவுக் கீழைக்காற்று.

38. நீரியல் வட்டத்தின் நிலைகளுள் முதற் படிமுறை நிகழ்வு என்ன?
   1) ஒடுங்குதல் (Condenation) 2) பனிபடுநிலை (Dew - Point).
   3) பதங்கமாதல் (Sublimation) 4) ஆவியாதல் (Evaporation)

39. சூரியனின் கதிர்வீச்சுச் செயற்பாட்டில் பூமி நேரடியாகப் பெறுவது எத்தனை வீதம்?
   1) 23%. 2) 47%. 3) 28%. 4) 17%.

40. தரையின் கீழ் இருக்கும் நீரானது இயற்கையாகத் தரையின்மேல் பாயும்போது அல்லது தேங்கும் அதனை நீருற்றுக்கள் (Spring) என்பர். அதில் திருகோணமலையில் உள்ள கன்னியா ஊற்றுக்கள் எந்த வகை ஊற்றுக்களுள் அடங்கும்?
   1) பள்ள ஊற்று (Dimple Spring) 2) சாய் ஊற்று (Slope Spring )
   3) வெப்ப ஊற்று (Hot Spring) 4) ஆட்டீசியக் கிணறு (Astision Well)

## பகுதி - II

### பகுதி 'அ' - சூழல் மூலகங்கள்

01. 1) புவியின் கட்டமைப்பினை (Structure of the Earth) வரைந்து குறித்த பகுதிகளின் மாதிரிகளைப் பெயரிடுக.
   2) புவியின் ஒவ்வொரு பகுதியும் சில மூலகங்களைக் கொண்டுள்ளன. அவற்றைக் குறிப்பிடுக.
   3) புவியின் கட்டமைப்புடன் தொடர்புபடுத்தி பாறைகளின் வகைகளையும் உருவாக்கச் செயன்முறைகளையும் (Types and Formation of Rocks) புனையா வரைபடங்களின் உதவியோடு ஆராய்க.

02. 1) எரிமலை வெடிப்பு(Volcanic Eropsion) என்றால் என்ன?
   2) எரிமலையின் வகைகள் இரண்டைக் குறிப்பிட்டு அதன் செயற்பாடுகள் மூலம் உருவாகும் நிலவுருவங்கள் இரண்டையும் புனையா வரைபடங்களாக வரைந்து பெயரிடுக.
   3) இற்றைவரை எரிமலை வெடிப்பதனால் உலகில் ஏற்பட்ட விளைவுகளை உதாரணங்களோடு விளக்குக.

03. 1) இவ்வாண்டு (2009) தனது அமைச்சரவைக் கூட்டத்தைக் கடலுக்கு அடியில் நடத்திய நாடு எது?
   2) கடலடி நிலவுருவவியல் தோற்றப்பாடுகளை புனையா வரைபடத்தின் உதவியுடன் சுருக்கமாக விளக்குக.
   3) கடலாய்வுகளின் (Oceanic Reserch) தேவையை அதன் பொருளாதார முக்கியத்துவத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.

04. 1) வானிலையால் அழிதல் (Weathering) என்றால் என்ன?
   2) இரசாயனமுறை அழிதலின் (Chemical Weathering) செயற்பாடுகளில் பின்வரும் பகுதிகளைத் தெளிவான முறையில் சுருக்கமாக விளக்குக.
      a) காபனேற்றம் (Carbonation)
      b) ஒட்சியேற்றம் (Oxidation)
   3) இன்று புவி எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளில் ஒன்று புவி வெப்ப மடைதல் (Globle Warnning) இதனால் எதிர்காலத்தில் உலகில் எவ்வாறான மாற்றங்கள் நிகழலாம்? கருத்துரைக்குக.

### பகுதி 'ஆ' - சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும்

05. 1) உயிர்ப்பல்வகைமை (Bio - Divercity) என்றால் என்ன?
   2) இன்றைய உலகில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளையும் உயிர்ப் பல்வகைமையையும் தொடர்புபடுத்தி விளைவுகளை விளக்குக.
   3) சிறந்த உயிர்ப்பல்வகைமை பேணப்படும் இடமாக அயனமண்டலக் காடுகள் காணப்படுகின்றன. அதனைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?

06. 1) மண்ணரிப்புக்கான (Soil Erosion) பௌதிகக் காரணிகள் இரண்டையயும் மானிடக் காரணிகள் இரண்டையயும் குறிப்பிடுக.
   2) மண்படையின் குறுக்குவெட்டு முகத்தை புனையா வரைபடமாக வரைந்து அதன் இயல்புகளை விளக்குக.
   3) உலகில் மண்ணின் பொருளாதார முக்கியத்துவத்தினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

07. 1) சுனாமி அலைகளை (Tsunami Waves) உருவாக்கும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
   2) சுனாமியின் உருவாக்கத்தினைச் சுருக்கமாக விளக்குக.
   3) சுனாமியை மையமாகக்கொண்டு சுனாமி எச்சரிக்கை நிலையங்களுடன் (Tsunami Warming System) அனர்த்த முகாமையின் (Disaster Management) அவசியத்தைத் தொடர்புபடுத்தி ஆராய்க.

08. பின்வரும் தலைப்புகளில் மூன்றை விளக்குக.
   1) புவி நடுக்கங்கள் (The Earth Quark)
   2) புவியில் காணப்படும் இயற்கை வளங்களை அறிந்துகொள்வதற்கு செய்மதிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறைகள் (Settelite Remote Sensing + Technologies)
   3) புவி உச்சிமாநாடுகள் (The Earth Summits)
   4) நிலையான அபிவிருத்தி (Sustarible Development)
   5) புவியியல் தகவல் முறைமை (Geographical Information System)

-நிறைவுற்றது-

# கணக்கீடு: தொடர்ச்சி..... | பகுதி - II

03. அ. ருவன் கம்பனியின் 30 டிசெம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு பின்வருமாறு:-

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 92,000 | வெளித்திருப்பம் | 11,000 |
| விற்பனை | 318,000 | பெற்ற காசு (மீளப்பெற்ற அறவிட முடியாக்கடன் உட்பட) | 299,000 |
| கொடுத்த கழிவு | 12,000 | பெற்ற கழிவு | 10,000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 5,000 | அறவிடமுடியாக்கடன் | 5,000 |
| எதிரீடு | 10,000 | மீ/செ | 105,000 |
| உட்திருப்பம் | 3,000 | | |
| | 440,000 | | 440,000 |

1) மேலே உள்ள கணக்கில் பொருத்தமற்ற, தவறான பதிவுகளை இனங்கண்டு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கை தயாரிக்குக.
2) மொத்தமாக கடன்பட்டோர் பேரேட்டு மீதி (செலவு மீதி கழித்து) 30 டிசெம்பரில் ரூபா 86,000 ஆகும். ஆராய்ச்சியின்போது பின்வருவன கண்டுபிடிக்கப்பட்டன.
   1. செலவு மீதி ஒன்று விற்பனை பேரேட்டு மீதியில் வரவு மீதியாக எடுக்கப்பட்ட தொகை ரூபா 4,300 ஆகும்.
   2. விற்பனை நாளேட்டின் ஒரு பக்க கூட்டுத்தொகை மறுபக்கத்திற்கு மாற்றியபோது ரூபா 2,200 கூடுதலாக மாற்றப்பட்டது.
   3. கடன்பட்டோருக்கு வழங்கப்பட்ட செலவுத்தாள் ரூபா 8,400 உட்திரும்பல் நாளேட்டில் ரூபா 4,700 எனப்பதியப்பட்டது.
   4. பின்வருவன தனிப்பட்ட கணக்குகளில் பதியப்படவில்லை.
      * எதிரீடு - 10,000 ரூபா
      * கொடுத்த கழிவு - 1,400 ரூபா
   5. டிசெம்பரின் முன்பு பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் மீளப்பெறப்பட்ட தொகை ரூபா 900 சரியாக தனிநபர் கணக்கில் பதியப்பட்டுள்ளது. எனினும், வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. வினா 1இல் வந்த மீதியைக்கொண்டு மேற்கூறப்பட்ட தவறுகளைத் திருத்தி கீழ்வரும் கணக்குகளைத் தயாரிக்குக.

**வேண்டப்படுபவை:-**
1. கட்டுப்பாட்டுக் கணக்கு திருத்தம்.
2. கட்டுப்பாட்டுக் கணக்கு இணக்கக்கூற்று.

ஆ. 31.12.2007 இல் ''தூயவன்'' நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வரும் மீதிகளை உள்ளடக்கியிருந்தது.
மோட்டார் வாகனம் ரூபா 42,000
01.01.2007 இல் மோட்டார் பெறுமானத்தேய்வு ஏற்பாடு.
1) நிறுவனம் பின்வரும் வாகனங்களை வைத்துள்ளது

| | | | | |
|---|---|---|---|---|
| NPJI | 1029 | 01.07.2000 இல் | கொள்வனவு செய்தது | 8,000 |
| NPJI | 2048 | 01.07.2001 இல் | கொள்வனவு செய்தது | 16,000 |
| NPJI | 2418 | 01.09.2004 இல் | கொள்வனவு செய்தது | 10,000 |
| NPJI | 3016 | 01.04.2005 இல் | கொள்வனவு செய்தது | 22,000 |

2) நிறுவனமானது நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 20% பெறுமானத்தேய்விடுகிறது. கொள்வனவு செய்யும் வருடத்தில் இதற்கான பெறுமானத் தேய்வை முழு வருடத்துக்கும் செய்கின்றது. ஆனால், விற்பனை செய்யும் வருடத்தில் இதற்கான பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. இந்நிறுவனத்தின் கணக்காண்டுக்காலம் டிசம்பர் 31 இல் முடிவடைகிறது.
3) 30.09.2007 இல் NPJI 2418 இனது விற்பனை மூலம் பெற்ற 14,000/= மோட்டார் வாகனக் கணக்கில் பிழையாக செலவு வைக்கப்பட்டுள்ளது. வாகன் விற்பனையால் பெற்ற காசு தவிர வேறு பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுபவை:-**
1. 01.01.2007 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக்கணக்கு தொகையினைத் துணிக.
2. 31.12.2007 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
   மோட்டார் கணக்கு
   மோட்டார் விற்பனைக் கணக்கு
   மோட்டார் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக்கணக்கு
   மோட்டார் பெறுமானத்தேய்வுக் கணக்கு ஆகியவற்றை தயாரிக்குக.

04. அ. 1) வங்கிக் கூற்று எதற்கு மூல ஆவணமாகும்?
   2) காசேடு செம்மையாக்கப்படுவதன் அவசியம் யாது?

ஆ. ஆதி நிறுவனத்திற்கு 31.01.09 இல் கிடைத்த வங்கிக்கூற்று மீதி காசேட்டு மீதியுடன் இணங்கவில்லை. வங்கிக்கூற்று மீதி 275,000. இரண்டையும் ஒப்பிடும்போது பின்வரும் விடயங்கள் அறியப்பட்டன.
1) 01.01.09 இல் வழங்கப்பட்ட காசோலைகள் 35,000 இல் 7,500 மட்டுமே வங்கிக் கூற்றில் காணப்பட்டது.
2) நேரடி வைப்பு செய்யப்பட்ட 18,000 ரூபா காசோலையில் 7,200 மட்டுமே வங்கிக்கூற்றில் காணப்பட்டது.
3) வங்கி கட்டணம் ரூபா 3,500 காசேட்டில் தவறான பக்கத்தில் 500 என பதியப்பட்டிருந்தது.
4) வங்கி சேர்த்த பங்குலாபம் 3,200 காசேட்டில் 320 எனப் பதியப்பட்டிருந்தது.
5) வேறொரு நபர் சார்பில் செலுத்திய 750 ரூபா காப்புறுதி கட்டணம் வங்கியினால் ஆதியின் வங்கிக் கூற்றில் காணப்பட்டது.
6) வங்கி அறவிட்ட தரக்குகூலி 1,330 இரண்டு முறை வங்கிக்கூற்றில் காணப்பட்டது.

**வேண்டப்படுவது:-**
திருத்திய காசேடு வங்கிக்கணக்கிணக்கக்கூற்று.

05. அ. 01.01.08 இல் மூலதன கணக்கு மீதிகள்
A - 160,000 B - 150,000 C - 80,000
01.01.08 இல் நடப்பு கணக்கு மீதிகள்
A - 3,000 (வரவு) B - 6,000 (வரவு) C - 24,000 (செலவு)

| | | |
|---|---|---|
| 31.12.08 இல் மொத்த சொத்துக்கள் | | 800,000 |
| 31.12.08 இல் தாபனத்தின் கொடு கடன் | | 200,000 |
| பங்காளரின் மாதாந்தப்பற்று | A | 2500 |
| (ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும்) | B | 1,500 |
| | C | 1,000 |

30.03.08 இல் மேலதிகமாக இட்ட மூலதனம்
A - 100,000 B - 50,000
இலாபம் பங்காளரிடையே பின்வரும் உடன்படிக்கையின் படி பகிரப்படின் பகிர் கணக்கையும் நடப்பு கணக்கையும், ஐந்தொகையையும் காட்டுக.
1) மூலதன வட்டி 5%
2) இலாபம் முறையே 5 : 3 : 2 .

ஆ. மர அலுமாரிகளை உற்பத்தியாக்கும் பாண்டியன் நிறுவனத்தினது ஏடுகளில் 2003ஆம் ஆண்டிற்கான தகவல்கள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| இருப்புக்கள் 01.01.03 | ரூபா |
| மரப்பலகை (400 அடி) | 40,000 |
| அலுமாரிகள் - 10 | 20,000 |
| மரப்பலகை கொள்வனவு (1,600 அடி) | 160,000 |
| பிணைச்சல்களும் ஆணிகளும் | 36,000 |
| தொழிற்சாலை பராமரிப்புக்கள் | 9,400 |
| மின் வலு வாயு | 10,600 |
| நேரில் ஊழியர் சம்பளம் | 12,000 |
| ஆக்கவுரிமை (அலுமாரியொன்றுக்கு) | 50 |
| இயந்திர உபகரண தேய்வு | 4,000 |
| தரக்கட்டுப்பாடு | 2,000 |
| தச்சர்கூலி அலுமாரி ஒன்றுக்கு | 200 |
| இருப்புக்கள் (31.12.03) | |
| மரப்பலகை (200 அடி) | ? |
| அலுமாரி - 20 | ? |

1) நிதி வருட முடிவில் 10 அலுமாரிகள் பூர்த்தியடையவில்லை. இவை தொடர்பான நேர்கிரயங்கள் மாத்திரமே இடம்பெற்றுள்ளன.
2) அலுமாரி ஒன்றுக்கு 20 அடி பலகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
3) ஆரம்ப இருப்பு அலுமாரிகள் யாவும் நடப்பாண்டில் விறகப்பட்டன.
4) விற்பனை கிரயங்களில் 20% இலாபம் வைத்து விற்பனைகள் இடம்பெற்றுள்ளன.

தயாரிக்குக.
2003 ஆம் ஆண்டுக்கான உற்பத்தி வியாபார கணக்கு.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சறோஜினிதேவி செல்வக்கதிர்காமத்தையா**

திதி: 25.02.2010

ஆண்டுகள் இரண்டு ஓடி
மறைந்தாலும் எங்கள்
இதயத்தில் உமது பசுமையான
நினைவுகள் என்றும் நிலையாக
நிற்கின்றன அம்மா.

தோற்றம் 05.04.1950

மறைவு 16.02.2008

உங்கள் நினைவால்:
K.செல்வக்கதிர்காமத்தையா
(கணவர்)
கைதடி தெற்கு, கைதடி.

(92442)

## ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 22 ★ 04 ★ 1990



ஆண்டவன் அடியில் 27 ★ 02 ★ 2009

**அமரர் சுவர்ணா (மேனகா) கந்தசாமி**

(ஒடக்கரை வீதி, சங்கானை)

திதி: 16.02.2010

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த அன்னையைப்
பிரிந்து, பத்தொன்பதாவது வயதில் எங்கு சென்றாய்?
உன் பாச நினைவுகள் எம்மைவிட்டு அகன்றிடா
உன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஒடக்கரை வீதி,
சங்கானை.

(94871)

தகவல்:
அம்மா, குடும்பத்தினர்.

# அமெரிக்க செனட் உபகுழு.....

*(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

சீனப் பிரசன்னம் அமெரிக்காவுக்கும் இந்தியாவிற்கும் கடும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே இந்தியாவின் மேற்கில் பாகிஸ்தானின் பலுச்சிஸ்தான் கரையோரத்தில் குவதார் என்ற பெயர் பெற்ற ஆழ்கடல் துறைமுகத்தைச் சீனா அமைத்தது. அமெரிக்காவின் மத்திய கிழக்கு இராணுவ நடவடிக்கைகளை குவதாரில் இருந்து கண்காணிக்க முடியும். சிறிலங்காவைத் தனது பாதுகாப்பு ஒழுங்கிற்குள் கொண்டு வருவதோடு சீனப் பிரசன்னத்தை வெளியேற்றுவது இந்தியாவின் நோக்கமாக இருக்கின்றன.

வெளிப்படையாகப் பிரகடனம் செய்யாமல் இந்து மாகடலில் வலுவாகக் காலூன்றுவது சீன வெளியுறவுக் கொள்கையின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். இதற்காக சீனா பல இந்து மாகடல் சார்ந்த கரையோர நாடுகளுடன் நெருக்கமான நட்புறவை உருவாக்கியுள்ளது. அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகியவற்றின் எதிரும் புதிருமான தேசிய நலன்களில் முரண்பாட்டுக் களமாக சிறிலங்கா இடம் பெறுகிறது. இரண்டாம் பனிப்போரின் விளைநிலமாக சிறிலங்கா இடம் பெறும் வாய்ப்பு இருக்கிறது. இந்த முரண்பாடுகளை நன்கு உணர்ந்த சிறிலங்கா, அதற்கு அமைவாகத் தனது இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்கிறது. அமெரிக்காவும் இந்தியாவும் சிறிலங்காவிற்கு எத்தகைய

இனிப்புகளை வழங்கினாலும் சீனாவை அகற்றுவது அல்லது ஒடுக்குவது நீண்ட கால அடிப்படையில் கூட இயலாதகாரியம் என்று துணிந்து கூற முடியும்.

தமிழர்களுக்கு என்று மாத்திரம் இல்லாமல் சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கு தீவு முழுவதையும் உள்ளடக்கிய உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை அமெரிக்கா செயற்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்யும் அறிக்கை சிறிலங்கா மீது இதமான அழுத்தம் பிரயோகிப்பது மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கிறது. அனைவருக்கும் திருப்தி அளிக்கும் அதிகாரப்பகிர்வை அரசியல் சீர்திருத்தத்தில் உள்ளடக்கி நிரந்தர அமைதியை சிறிலங்காவில் ஏற்படுத்தும் கைங்கரியத்தை நிகழ்த்த அமெரிக்காவினால் முடியும் என்று இந்த அறிக்கை கூறுவதைத் தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இப்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் சாசனம் பௌத்த மதத்திற்கும் சிங்கள [illegible] வழங்குகிறது. எக்காரணம் கொண்டும் நாடாளுமன்ற அதிகாரங்கள் பிற அரசியல் கட்டமைப்புக்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படமாட்டாது என்று அதே சாசனம் கூறுகின்றது. கொடுத்த அற்ப சொற்ப அதிகாரங்களை மீளப் பெறுவதுதான் சிறிலங்கா அரசியல் வரலாறாக இருக்கிறது. சிறிலங்காவின் முதலாவது அரசியல் சாசனம் சிறுபான்மையினருக்கு வழங்கிய உரிமைகள் மீளப் பெறப்பட்டுள்ளன. கடந்த 60 வருட காலமாக வழங்காத அதிகாரங்களை இனியா சிங்களவர்கள் தமிழர்களுக்கு வழங்கப்போகிறார்கள்?- அமெரிக்க அரசு இதனைச் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

சிங்களச் சார்பு நீதி மன்றங்கள் மூலம் தமிழர்களுடைய உரிமைகளைப் பறிப்பது சிறிலங்கா நடைமுறை. 13 ஆம் திருத்தம் ஏற்படுத்திய வடக்கு - கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தின் மூலம் பிரித்தார்கள். மத்தியட்சகர் நோர்வே சுனாமி நிதியைப் பங்கீடு செய்வதற்காக ஏற்படுத்திய ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிர்வாகக் கட்டமைப்பை நீதி மன்றம் மூலம் சிங்கள ஆளும் வர்க்கம் இல்லாதொழித்தது. சிறிலங்கா நீதி மன்றங்களில் தமிழர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். கிளிநொச்சியில் சிங்களக் குடியேற்றம் நடக்கப் போவதாக கதை அடிபடுவதாக கெரி அறிக்கை கூறுகிறது. சிறிலங்கா சுதந்திரம் பெற்ற நாட்தொட்டு வெப்பவலய மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் தமிழர்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத் திட்டத்தை அரசு அமைத்து வருகிறது. கிழக்கிலும், வடக்கிலும், மத்தியிலும் குடியேற்றம் தொடர்ச்சியாக இன்றும் நடை பெறுகிறது. சிங்கள - தமிழ் முரண்பாடுகளுக்கு நிலம்தான் அடிப்டைக் காரணம். ஒட்டு வேலைச் சமரசங்களும் பூச்சு வேலைகளும் நிலையான அமைதியை ஏற்படுத்தப் போவதில்லை. போரின் முடிவு அமைதிக்கு வழி காட்டும் என்ற அறிக்கையின் கூற்றை ஏற்க முடியவில்லை. இந்து மாகடல் ஆதிக்கத்திற்காக சிறிலங்காவில் கால் ஊன்றும் ஆதங்கம் அமெரிக்க செனெட் சபை அறிக்கையின் தொனிப் பொருளாக இருக்கிறது. இந்த இலட்சணத்தில் அது தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் என்றும் எதிர்பார்ப்பது பேதமையாகும். ****************

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**மேரிஜெலன் றொக்ஸி வில்பிறெட் செல்வக்குமார்**
(தாழையடி)

(ஆசிரியை, யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்)

மலர்வு: 19*01*1963

உதிர்வு: 17*01*2010

அன்பின் உறைவிடமே!
குடும்பத்தின் குலவிளக்கே!
உங்களுடன் வாழ்ந்த நாள்களின்
பசுமையான நினைவுகளைச் சுமந்து
வாழ்கின்றோம்.
என்னையும் பிள்ளைகள் இருவரையும்
தனியே தவிக்கவிட
நாம் செய்த பாவமென்னவோ!
மாதமொன்றாகித் துன்பக்கடலில்
தத்தளிக்கும் நாம் தங்கள்
ஆன்மா சாந்தியடைய இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

எமது குலவிளக்கின் திடீர் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து உதவிய உறவினர்கள், நண்பர்களுக்கும், மேன்மை தங்கிய ஆயர், அருட்தந்தையர், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் அனைவருக்கும், இன்னும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இரங்கற் செய்தியையும், அனுதாபத்தையும் தெரிவித்தோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகைதந்து எம் துன்பத்தை பகிர்ந்துகொண்ட எமது குடும்ப உறவினர்களுக்கும், துண்டுப்பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோருக்கும், மலர்மாலைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தினமும் எமது இல்லம் வந்து வழிபாடுகளைச் செய்து இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் யாழ்.புனிதசாள்ஸ் கல்விக்குடும்பத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி:
தாழையடி வடக்கு, தாழையடி.

தற்போதைய முகவரி:
இல: 01, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
[illegible] (பிள்ளைகள்)

(94857)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 ★ 05 ★ 1923



விண்ணில் 07 ★ 03 ★ 2000

**அமரர் சபாபதி கணபதி**

(கால்நடை வைத்தியர், காம் வீதி, ஊர்காவற்றுறை)

திதி: 16.02.2010

எங்களுக்காய் செய்ய வேண்டியதைச் செய்து வைத்தீர்கள்
சொல்லவேண்டியதைச் சொல்லவும் செய்தீர்கள்
வல்லமை தந்து வாழவும் வைத்தீர்கள்
உங்களுக்காய் அருகில் இருந்து நாங்கள் செய்ய நினைக்க
எட்ட நீங்கள் போய் பத்து வருடங்களா....?
இடையில் எத்தனையோ பட்டோம், எவ்வளவோ இழந்தோம்
மீண்டும் எழுவோம் பீனிக்ஸ் பறவை போல்
உங்கள் ஆசியுடன்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள்.

(94836)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனத்தின் சுகத்தில் 14 ★ 11 ★ 1941



மரணத்தின் சுமையில் 19 ★ 02 ★ 2007

**அமரர் சிவசம்பு மனோகரசீலன்**

(உரிமையாளர் - சுரேக்கா ரெக்ஸ், முன்னாள் தலைவர், மானிப்பாய் வர்த்தக சங்கம், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்)

திதி: 16.02.2010

காலங்கள் பிரிவின் துயரை மாற்றினாலும்
கனவிலும் நினைவிலும் பதிந்திருக்கும்
மாறாத அன்புருவம் உங்களுடன்
வாழ்ந்த பசுமை நினைவுகளை என்றும் நினைவூட்டும்
ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டும்

நாவலடி லேன்,
மானிப்பாய்.

(94788)

அன்பு மனைவி,
பிள்ளைகள், குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.08.1988

✱கடந்த 25 நாள்களாக கடமைக்குச் செல்லாது புறக்கணித்த திருகோணமலை கச்சேரி ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்ப உடன்பாடு காணப்பட்டுள்ளதாக அரசு தெரிவிப்பு.

✱அசம்பாவிதங்கள் காரணமாக சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்துக்குள்ளும் வெளிமாவட்டங்களிலும் வாழ்ந்த யாழ். குடாநாட்டுப்பொது மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிக் குடியமர ஒவ் வொரு குடும்பத்துக்கும் தலா இரண்டாயிரம் ரூபா நிவாரண உதவி வழங்கப்படுமென யாழ். அரச அதிபர் தெரி விப்பு.

17.08.1988

✱தமிழ்ப் பகுதிகள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இன்று முதல் இரண்டு நாள்களுக்குப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஜே.வி.பி. விடுத்த கோரிக்கையால் பதற்ற நிலை.

✱திருகோணமலை மரக்கறிச் சந்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவ மொன்றில் சிக்கி 9 பொதுமக்கள் பலி. 21 பேர் படுகாயம்.

✱ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தாம் பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கவில்லையென ஜே.வி.பியினர் அறிவித்ததாகக் கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்ததாக ரூபவா ஹினியில் செய்தி ஒளிபரப்பு.

18.08.1988

✱பாகிஸ்தான் ஜனாதிபதி ஹிய-உல்-ஹக் விமான விபத்தில் மரணம். விமானத் தில் அவருடன் கூடப் பயணித்த பாகிஸ் தானுக்கான அமெரிக்கத் தூதுவர் உட்பட 35 பேர் மரணம்.

✱யாழ்ப்பாணம் பிரதம தபாற்கந்தோர் அலுவலகத்தின் அருகில் குண்டுவெடிப்பு.

✱சுமார் 900 ஜே.வி.பி. சந்தேக நபர்கள் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு.

19.08.1988

✱இரண்டாவது நாளாக யாழ். நகரில் இந்திய அமைதிப்படையினர் மீதான தாக்குதலில் ஒரு படை வீரர் கொல்லப்பட்டதையடுத்து படையினர், பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பேர் மரணம்.

✱தேர்தல்களை ஒத்திவைக்க அரசு முயற் சித்தால் பொதுமக்கள் அரசுக்கு நல்ல பாடம் புகட்டுவர் என சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

✱பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதம் ஆரம்பிப்பு.

20.08.1988

✱ஈழத்தமிழர் பிரச்சினைக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் ஏதாவது ஒரு வழி யில் தீர்வு காண இந்திய அரசு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென இலங்கை அரசு இந்திய அரசை வற்புறுத்தி வருவதாகத் தெரிவிப்பு.

✱சென்னையில் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 31 விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுவிக்கக் கோரும் மனுவை சென்னை நீதிமன்றம் நிராகரிப்பு.

21.08.1988

✱தமிழீழ விடுதலைப்புலிகள் வன்முறைகளைக் கைவிட்டு பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள முன்வர வேண்டும் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு.

✱இந்தியவெளிவிவகார அமைச்சின் விசேட அழைப்பின் பேரில் ஈ.பி.ஆர்.எல். எவ் இயக்கத் தலைவர்கள் டில்லிக்கு விரைவு.

22.08.1988

✱விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய-பிரதான தலைவர்களைப் பிடிக்கும் நோக்குடன் வன்னிப் பகுதிக் காடுகளை எண்ணாயிரத் துக்கும் மேற்பட்ட இந்தியத் துருப்பினர் சுற்றி வளைத்துத் தேடுதல்.

✱திருகோணமலையில் சிங்களவர் வாழும் பகுதி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை உயர் இரா ணுவ அதிகாரியொருவர் தெரிவிப்பு.

✱ஐக்கிய தேசியக் கட்சி தனது வேட்பாளராக ஏகமனதாக என்னைத் தெரிவு செய்தால் மட் டுமே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிடு வேன் என பிரதமர் பிரேமதாஸ நிபந் தனை விதிப்பு.

23.08.1988

✱யாழ். குடாநாட்டுக்கு, அமைதிப்படையின ரின் முன்அனுமதிபெறாமல் தனியார் நிறுவன மொன்றோ, தனிப்பட்டவர் எவருமோ எரி பொருள் எடுத்து வர முடியாதென இந்திய அமைதிப் படையின் நகரக் கொமாண்டர் அலுவலகம் அறிவிப்பு.

✱தமிழர்கள் இலங்கையில் இனரீதியில் துன்புறுத்தப்படவில்லை எனவும் ஆதலால் அவர்கள் மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் கோர இயலாது எனவும் மேற்கு ஜேர்மனியின் கொலோன் நீதிமன்றம் வழக்கொன்றில் தீர்ப்பு.

✱இந்திய அமைதிப்படை இங்கு இருக்கும் வரை இலங்கையை ஒரு சுதந்திர நாடு எனக் கூற இயலாதென சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

24.08.1988

✱வெலிஓயா உட்பட நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இலங்கை அரசால் மேற் கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு இந்திய அரசிடம் கோரிக் கை முன்வைப்பு.

✱யாழ்ப்பாணத்துக்கான வார இறுதி ரயில் சேவையை நடத்துமாறு போக்கு வரத்து அமைச்சர் எம்.எச்.முகமது உத்தரவு பிறப்பிப்பு.

25.08.1988

✱வவுனியாக் காடுகளில் இந்திய அமைதிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே கடும் மோதல். போராளிகளின் தாக்குதலில் அமைதிப் படைக்குச் சொந்தமான ஹெலிஹொப்டர் ஒன்று சேதம்.

✱பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப் பாணத்தில் சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டம். வடக்கு, கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் ஆரம்பிப்பு.

26.08.1988

✱வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமடைந்த வீடுகளில் இரண்டாயிரத்தை திருப்பிக் கட்ட முன்னுரிமை வழங்க ஐ.நா.சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் திட்டம் தயாரிப்பு.

✱கூட்டுறவுத்துறை அமைச்சர் டபிள்யூ. தகநாயக்காவின் காலியில் உள்ள வீட்டின் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்ரபிள் கொலை.

✱முல்லைத்தீவு காட்டுப்பகுதியில் இந் தியப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் மோதல்.

27.08.1988

✱வாரந்தோறும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பயணிகள் ரயில் சேவை நடைபெறும் என இந்திய அமைதிப்படையின் யாழ். நகரக் கொமாண்டர் அலுவலகம் தெரிவிப்பு.

✱ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழர்களை தற்போதைக்கு இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என ஐ.நா. சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிய ராலயத் தின் வேண்டுகோளுக்கு 12 ஐரோப்பிய நாடுகள் இணக்கம் தெரிவிப்பு.

28.08.1988

✱வன்னிக்காடுகளில் கடந்த இருவாரங்களாக இந்தியப்படையினருக்கும விடுதலைப்புலிகள் இயக்கப்போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக பி.பி.சி. தனது செய்தி ஒலிபரப்பில் தெரிவிப்பு.

✱வவுனியாவில் உள்ள வங்கிகள் மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அனுபவிக்கும் சிரமங்களை நேரில் வந்து கண்டறியுமாறு இந்தியத் தூதுவர் டிக்ஸிட்றிடம் இ.தொ.கா. கோரிக்கை.

✱நீண்ட இடைவெளியின் பின்னர் பெற்றோலிய எரிபொருள்களை எடுத்துக்கொண்டு சரக்கு ரயில் ஒன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

29.08.1988

✱இந்தியப் படையினர் வட பகுதிமீதான தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தாவிட் டால் சர்வதேச கெரில்லா அமைப்புகளின் ஆதரவுடன் இந்தியாவின் பெரிய நகரங்களில் குண்டுத் தாக்குதலை நடத்துவோம் என விடுதலைப்புலிகளின் உயர்மட்டத் தலைவர் ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

✱நடந்து முடிந்த மாகாணசபைத்தேர்தல்கள் செல்லுபடியற்றவை என அறிவிக்கும்படி ஜே.வி.பி. அமைப்பு தேர்தல் ஆணையாள ரிடம் வேண்டுகோள்.

30.08.1988

✱ வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தவிர்த்து விட்டு நடத்தலாம் என இந்தியத் தரப்பினர் இலங்கை அரசுக்குக்குப் புதிய யோசனையொன்று தெரிவிப்பு.

✱ புகலிடம் தேடித் தமிழகம் வந்துள்ள ஈழத் தமிழர்களை இந்திய அரசு கைது செய்வதைக் கண்டு தமிழக மக்கள் வருந்துவதாக தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் சோமு இந்திய லோக் சபையில் தெரிவிப்பு.

✱இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்காத வரை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் இந்திய அரசு பேச்சுக்களை நடத்தப் போவதில்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

31.08.1988

✱ தேசிய பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சென்னையில் கைதான விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் 154 பேரை பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டுவர இந்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரியவருவதாக காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் தெரிவிப்பு.

✱ அரசியல் ரீதியாக விடுதலைப் புலிகளைத் தனிமைப் படுத்தி வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த இந்திய முயற்சித்தால் குழப்பமான சூழ்நிலை உருவாகும் என ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு.

# வரணிப் பிரதேசத்தில் அமோக நெல் விளைச்சல்

யாழ்ப்பாணம், பெப்.16

வரணிப்பிரதேசத்தில் காணப்படும் மிகப்பெரிய வயல் வெளிப் பிரதேசமான சவணவெளி, மேற்கு வெளி, வெங்கிராயன் வெளி ஆகிய இடங்களில் இம்முறை நெற்பயிர்கள் அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளன. இப்பிரதேசங்களில் நெல் அறுவடை வேலைகள் தற்போது மும்முரமாக நடைபெறுகின்றன.

அநேகமான நெற்பயிர்ச் செய்கையாளர்கள் இம்முறை குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய நெல்லினங்களைப் பயிரிட்டதால் அவை அமோகமாக விளைந்துள்ளன. ஆனால் வெட்டி உலரவிடப்பட்ட பயிர்களைக் காட்டுப்பன்றிகள் மிதித்துச் சேதப்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ரி-122)

# சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தில் இணைந்த பயனாளிகளுக்கு உறுதிகள் வழங்கப்படும்

## தென்மராட்சிப் பிரதேச செயலகம் அறிவிப்பு

தென்மராட்சி கிழக்கு, பெப்.16

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தில் இணைந்த பயனாளிகளுக்குரிய ஒரு தொகுதி உறுதிகள் பிரதேசசெயலகத்துக்கு வந்துள்ளதாகச் செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது. உரிய பயனாளிகள் செயலக சமூக சேவைப் பிரிவினருடன் தொடர்புகொண்டு இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பயனாளிகளுக்கு தனித் தனிக் கடிதங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2009 புரட்டாதி மாதம் வரை தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் சமூகப் பாதுகாப்பு சுயதொழில் ஓய்வூதிய திட்டத்தில் 859 பேர் வரை இணைந்துள்ளதாக யாழ். செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ரி-122)

# சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறும் இடமாக சுட்டிபுரம் அம்மன் ஆலயச் சுற்றாடல்

தென்மராட்சி கிழக்கு, பெப்.16

வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலயப் பிரதேசம் தற்சமயம் சுற்றுலாப் பிரயாணிகள் இளைப்பாறிச் செல்லும் இடமாக மாறிவருகின்றது. வடபகுதிக்குச் சுற்றுலா வரும் தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாவை முடித்துக்கொண்டு பருத்தித்துறை - கொடிகாமம் வீதியால் பயணிக்கும்போது மேற்படி ஆலயச் சூழலில் தங்கி இளைப்பாறிச் செல்வதை அன்றாடம் காண முடிகின்றது. இப்பிரதேசம் சோலைகள் நிறைந்த இடமாகக் காணப்படு வதாகவும் தண்ணீர் வசதி, தங்குமிட வசதி ஆகியவை உள்ள தனாலும் இவர்கள் ஆலயச் சுற்றாடலில் தங்கி இளைப்பாறிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-122)

# வரணி வடக்கில் மீள் குடியமர்ந்தவர்களை 'நிக்கொட்' நிறுவனம் பதிவு செய்யும்

தென்மராட்சி கிழக்கு, பெப்.16

வன்னி நலன்புரி நிலையங்களில் இருந்தும் தென்மராட்சிப்பிரதேசநலன்புரிநிலையங்களில் இருந்தும் வெளி யேறி வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் குடியமர்த்தப்பட்டவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை வரணி தென்னிந்தியத் திருச்சபை குருமனைக்கு வருமாறு மேற்படி பிரிவு கிராம அலுவலர் அ. பிரதீபன் கேட்டுள்ளார். நிக்கொட் நிறுவன பிரதிநிதிகள் மீளக் குடியமர்ந்த மக்களை பதிவு செய்யவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ரி.122)

# காரைநகரில் குடிசை வீடு எரிந்து நாசம்

ஆனைக்கோட்டை, பெப்.16

காரைநகர் ஊரிக்கிராமத்தில் வசித்துவரும் அருளானந்தம் அமலதாஸ் என்பவரின் குடிசைவீடு எரிந்து நாசமாகியது. இந்தச் சம்பவத்தில் அமலதாஸும்அவரது குடும்பத்தினரும் மயிரிழையில் காயம் எதுவுமின்றி உயிர் தப்பியுள்ளனர்.



கடந்தசெவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் மேற்படி குடும்பஸ்தரின் மனைவி வீட்டில் இருந்து வெளியில் சென்ற சமயத்தில் அவரது பத்துவயதான மூத்த மகள் தேநீர் தயாரித்த போது அடுப்பில் இருந்து கிளம்பிய நெருப்பு மேலெழுந்ததாலேயே குடிசை எரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குடிசையில் தீ பற்றி முழுவதும் எரிந்து நாசமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-20)

# சாவகச்சேரி, சித்தங்கேணிப் பகுதிகளில் ரெலிக்கொம் பரிவர்த்தனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், பெப் 16

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம், கேபிள் தொலைபேசி வசதிகளை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாகத் தற்போது சாவகச்சேரி மற்றும் சித்தங்கேணிப் பகுதிகளில் பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த மார்ச் மாத இறுதியில் இந்தப் பகுதிகளுக்கான கேபிள் இணைப்புக் களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் நல்லூர், நெல்லியடி பகுதிகளுக்கும் கேபிள் இணைப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவை மேலும் கூறின. (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகம் நிறைந்த கர்நாடக இசைக்கலைக்கு விலைபேசும் இழிநிலை இங்கு மாற வேண்டும்

## வயலின் வித்தகர் பிரம்மஸ்ரீ சிவானந்தக் குருக்கள் சர்வேஸ்வர சர்மாவுடனான நேர்காணல்

**ஈழத்துக் கர்நாடக இசை உலகில் 1960ஆம் ஆண்டின் பின்னர் பல்லாண்டுகளாக எந்தவொரு இசை நிகழ்ச்சி அரங்கிலும் எந்தவொரு இசைக் கலைஞரின் இசை நிகழ்ச்சியிலும் வயலின் வாசித்து அந்த இசை நிகழ்ச்சி சிறப்புற நடந்தேறச்செய்து பல்லாயிரவரின் போற்றுதலையும் பாராட்டுக்களையும் பெற்றுப் புகழேணியின் உச்சியை அடைந்தவர். இன்று முதுமை காரணமாக இசை அரங்கைவிட்டு ஒதுங்கிவாழும் வயலின் வித்தகர் பிரம்மஸ்ரீ சி.சர்வேஸ்வரசர்மா அவர்களைத் தரிசித்து அவருடன் கலந்துரையாடி அவரது அனுபவங்களையும் அறிவுரைகளையும் கேட்டறிந்துகொள்ளும் வேட்கையோடு அக்கலைஞர் இன்று வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணம், நாவலர் வீதி, கடைச் சுவாமியார் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்துக்கு சென்றிருந்தோம்.**

**அந்த மூத்த புகழ் பூத்த வயலின் கலைஞர் கூறிய தமது நிலவுலக வாழ்க்கைக் கதையினையும் இசையுலக வாழ்க்கைக் கதையினையும் நாங்கள் மட்டும் கேட்டுவிட்டால் போதுமா? நீங்களும் கேட்க வேண்டாமா?**

**கேள்வி: தங்களின் வாழ்வின் கதையைக் கூறுவீர்களா?**

பதில்: யாழ்.குடாநாட்டில் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள கரவெட்டியில் 01.01.1928ஆம் திகதி நான் பிறந்தேன். எனது தந்தையார் பெயர் சிவஸ்ரீ சிவானந்தக் குருக்கள் என்பதாகும். எனது தாயாரின் பெயர் நீலாயதாட்சி என்பதாகும். எனக்கு நான்கு ஆண் சகோதரர்கள்.

நான் எனது கல்வியைக் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் பெற்றேன். என்னுள்ளத்தில் வயலின் கற்கவேண்டும் என்ற வேட்கை மிகுந்திடவே பெற்றோரின் உதவியுடன் தமிழ்நாடு சென்றேன் .

அங்கு சிதம்பரம் ராமசாமிச் செட்டியார் ரவுண் ஹைஸ்கூல் என்னும் பாடசாலையில் எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

**கேள்வி: தங்களின் இசைத்துறைப் பிரவேசம் பற்றி அறிய ஆவலாகவுள்ளோம்.**

பதில்: எனது பெற்றோருடன் பாடசாலைக் கல்வி முற்றுப்பெறவே தஞ்சாவூரில் குடியமர்ந்தோம். அங்கு குருகுலவாசம் முறைப்படி வயலின் கல்வியைக் கற்கத் தொடங்கினேன்.

குருகுலவாசம் இரு வகைப்படும். குருவுடனேயே அவரது வீட்டில் தங்கி இருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொடுத்துக் கொண்டு இருக்கும் போது குரு விரும்பும்போது சொல்லித் தருகின்ற பாடங்களைப் படித்து முன்னேறுவது ஒரு வகையான குருகுலவாசம்.

குருவின் வீட்டில் தங்கியிராது வெளியிலே ஒரு வீட்டில் தங்கி இருந்துகொண்டு காலையில் குருவின் வீட்டுக்குப் போய் மாலைவரை தங்கி இருந்து பாடங்களைக் கேட்டுப் படித்துவிட்டு மாலையானதும் வீட்டிற்குத் திரும்புவது இரண்டாவது வகையான குருகுலவாசமாகும்.

நான் இரண்டாவது முறையிலேயே குருகுலவாசம் செய்து நாலு ஆண்டுகள் வயலினிசையைக் கற்றேன்.

எனக்கு வயலினிசையைப் போதித்த குரு இருவரில் ஒருவர் திரு.என்.ரீ.கோபால கிருஷ்ணஐயர் இரண்டாமவர் திரு.எஸ்.கஜபதிராவ் என்பவராவர்.

பெற்றோருடன் நாடு திரும்பிய நான் 1960ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறைச் சிவன் கோயிலில் அனைத்துலகும் போற்றிப் பாராட்டும் இசைச் சொற்பொழிவாளர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் நடத்திய இசைச் சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு முதன் முதலாகப் பக்க வாத்தியமாக வயலின் வாசித்துப் பாராட்டுப்பெற்றேன். இதுவே எனது அரங்கேற்றமாகவும் அமைந்துவிட்டது. அதன் பின்பு சுவாமிகளின் நிகழ்ச்சிகளுக்கு யானே வயலின் வாசிக்கும் பெருவாய்ப்பினைப் பெற்றேன்.

மேலும் இலங்கை வானொலியில் 15 ஆண்டு காலமாக பக்க வாத்தியமாக வயலின் வாசித்துள்ளதோடு, தனி வயலின் கச்சேரிகளையும் நடத்தியுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் நாட்டுநிலைமை காரணமாக 1983ஆம் ஆண்டுடன் இத்தொடர்பு நின்றுவிட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஓரங்கமான இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் ஓராண்டு காலம் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளேன்.

கர்நாடக இசை உலகில் எல்லோராலும் பாராட்டப் பெறுகின்ற இசைப்புலவர் ந.சண்முகரத்தினம், திரு.பரம்தில்லைராஜா, திரு.ராம்குமாரசாமி முதலான கர்நாடக இசை மேதைகளின் இசை நிகழ்ச்சிகளுட்பட பல இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளை எனது வயலின் இசை மூலம் சிறப்பித்துப் பாராட்டப்பட்டுள்ளேன்.

இதனிடையே 1963ஆம் ஆண்டில் கரவெட்டியைச் சேர்ந்த எமது உறவுப் பெண்ணான செல்வி எஸ்.ருக்குமணியை எனது வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்ட போதிலும் மழலைச் செல்வங்களைப் பெற்றெடுத்து மகிழுகின்ற பெரும்பேறு எமக்கு வாய்க்கவில்லை. ஆயினும் என்னிடம் வயலினும் பாட்டும் பயில வருகின்ற பிள்ளைகள் அனைவருமே எமது பிள்ளைகளாகவே கருதி அன்பு பாராட்டிப் பேதம் எதுவுமில்லாது கருத்தோடும் விருப்போடும் கற்பித்து வருகின்றேன்.

**கேள்வி: தங்களின் மாணவர் பரம்பரை பற்றி அறிய விரும்புகின்றோம்.**

பதில்: இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் இன்றைய இசைத்துறைத் தலைவரான செல்வி பாக்கியலட்சுமி நடராசா இக்கழகத்தில் வயலின் விரிவுரையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் அவர்கள் இன்று பெரும்பாலான இசை அரங்குகளில் வயலினிசையால் சிறப்பித்து வருகின்ற இளம் வயலில் வித்துவான் திரு.எஸ்.ஜெயராமன் அவர்கள் யாழ்.இந்துக் கல்லூரியின் இசையாசிரியர் திரு.கே.பத்மநாதன் உட்பட இன்னும் பலர் என்னிடம் வயலினிசை கற்று இன்று இசையுலகில் புகழ்பூத்த இசைச் கலைஞர்களாக விளங்குகின்றார்கள். எனது மாணவர் பரம்பரை சற்றே நீளமானது என்பது குறிப்பிடத்தக்கதே. அது மாத்திரமல்லாது எனது குடும்பத்தினருடன் யாழ்.நகருக்கு வந்து குடியமர்ந்து 35 ஆண்டுகளைக் கடந்து விட்டது. அந்த நாள் முதல் வசதி உள்ள மாணவர்களுக்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாக வேறுபாடு எதுவுமில்லாது மிகக் குறைந்த கட்டணத்துடனேயே வயலின், பாட்டு ஆகியவைகளைக் கற்பித்து வருகின்றேன்.

முதுமை வந்தெய்திய போதிலும் நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள நிலையிலும் இன்றும் - இன்னமும் மாணவர்கள் வயலின், பாட்டு என்பன கற்றுக்கொள்ள வருகின்றார்கள். எனது சிரமத்தைப் பாராது அவர்களுக்குக் கருத்துடனும் விருப்புடனும் கற்பித்து வருகின்றேன்.

**கேள்வி: வியந்து போற்றுதற்குரிய இசைப்பணியாற்றி வருகின்ற தங்களுக்குக் கிடைத்த விருதுகள் முதலானவைகள் பற்றி அறிய அவாவுகின்றோம்.**

பதில்: எனக்கு இதுவரையில் மூன்று விருதுகள் - கௌரவிப்புகள் கிடைத்துள்ளன:

இலங்கையில் மாண்புமிகு ஜனாதிபதியாக இருந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் தமது பதவியின் இறுதிக் காலத்தில் என்னைக் கௌரவித்து வழங்கிய கலாசூரி என்னும் உயர் விருதினைப் பெற்றுக் கொண்டேன்.



அன்பர்களாலும் அடியவர்களாலும் 07.06.1998ஆம் திகதி யாழ்.நீராவியடி அருள்மிகு ஜெயவீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் எடுக்கப் பெற்றதோர் பெருவிழாவில் எனக்கு மலர்மாலைகள் சூட்டிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டப் பெற்றேன்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் இயங்கும் பிரதேச கலாசாரப் பேரவையினர் 2005ஆம் ஆண்டு எடுத்ததோர் கலாசாரப் பெருவிழாவில் எனது இசைப் பணியைப் போற்றிக் கலைஞானச்சுடர் என்னுமுயர் விருதினை என்னை அழைத்து எனக்கு வழங்கிக் கௌரவித்தார்கள்.

**கேள்வி: தாங்கள் இசை பயிலும் வருங்காலச் சந்ததியினருக்குக் கூறும் செய்தி என்னவோ.**

தமிழகத்தினைப் போல இங்குள்ள அனைவரும் தரமான இசையை ரசிக்கும் வண்ணம்; இசை ஞானத்தை வளர்த்துக் கொள்ளுவது மிகவும் அவசியம். அனைவரும் பேதங்களெதுவுமின்றி இசை கற்க வேண்டும். அதற்குத் தெய்வீகம் நிறைந்த எமது கர்நாடக இசைக்கலைக்கு விலை பேசும் இன்றைய இழிநிலை மாற வேண்டும் என்பதுவே இளைய தலைமுறையினருக்கு எனது செய்தியாகும்.

**நேர்காணல்: வயலூர் முருகன்**

அகமிக மகிழ்ந்து நன்றி கூறுகின்றோம்

கொழும்பில் நடைபெற்ற

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

இல்லத் திருமண வைபவத்திலும்

சங்கானை- சர்வ்தேச இந்துமத குருபீட

யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற

திருமண வரவேற்பு உபசார வைபவத்திலும்

கலந்து சிறப்பித்த அனைத்து

நல் உள்ளங்களுக்கும்

மனப்பூர்வமான நன்றிகளைத்

தெரிவித்துக்கொள்வதில்

மனமகிழ்வுகொள்கின்றோம்

மணமக்கள்: சுதானந்த சர்மா ஸ்ரீ வரலக்ஷ்மி

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
கொழும்பு-0722422239

சிவப்பிரம்மஸ்ரீ
சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்
யாழ் மாவட்டத் தலைவர் சர்வதேச இந்துமத குருபீடம்
சங்கானை, 021 321 0008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷேவாக்-டெண்டுல்கர் ஜோடி நேற்று கல்கத்தாவில் பதிலடி!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது - தனது முதல் இன்னிங்ஸில் இந்திய அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 342 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

முன்னதான நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது தென்னாபிரிக்க அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 266 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பின்னர் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 296 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஆரம்ப ஜோடி, அணி 73 ஓட்டங்களைப் பெற்ற வேளை பிரிந்தது. கம்பீர் 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வந்த விஜய் (7) ஏமாற்றினார்.

மறுபுறத்தில் சிறப்பாக - அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த ஷேவாக்குடன் சச்சின் இணைந்தார்.

இந்த ஜோடி மிகவும் சிறப்பாக - பொறுப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது.

அதிரடியாக அடிய ஷேவாக் 87 பந்துகளில் சதமடித்தார். சிறிது நேரத்தில் சச்சினும் தனது சதத்தைப் (194 பந்துகள்) பூர்த்திசெய்தார். இது இவரது 47ஆவது டெஸ்ட் சதமாகும்.

அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த



ஷேவாக் 165 (174 பந்துகள், 23 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள்) ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து சச்சினும் (106) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த பந்திரிநாத் (1) வந்த வேகத்தில் நடையைக் கட்டினார்.

இறுதியில் நேற்று ஆட்ட நேர முடிவின் போது இந்திய அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 342 ஓட்டங்களைக் குவித்தது.

லக்ஷ்மன் (9), மிஷ்ரா (1) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்து வீச்சில் ஸ்ரைன், மோர்கல், ஹரிஸ், டுமினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.




# பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட்:

## நியூஸிலாந்து முதல் நாளில் 258/5

ஹாமில்டன், பெப். 16

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்டநேர முடிவின்போது, நியூஸிலாந்து அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 258 ஓட்டங் களைப் பெற்றுள்ளது.

நியூஸிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி, ஹாமில் டனில் நேற்று ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 17 ஓட்டங்களைப் பெற்றவேளை மைக் இன் ரோஸை (7) இழந்தது.

எனினும் பின்னர் வந்த வீரர்கள் ஓரளவு சிறப்பாக ஆடி அணியை சிறப்பான ஓட்ட எண்ணிக்கை நோக்கி நகர்த்தினர்.

வோல்ரிங் (13), இங்ராம் (42), ரெய்லர் (40), விற்றோரி (10), ஆகியோர் தமது பங்குக்கு ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றனர்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது நியூஸிலாந்து அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றது.

குப்தில் 80 ஓட்டங்களுடனும் மைக்கலம் 58 ஓட்டங்களுடனும் சிறப்பாக ஆடி, ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பங்களாதேஷ் அணி சார்பாக பந்து வீச்சில், ருபெல் குசைன் 3 விக்கெட்டுகளையும், சஹ்புல், சஹிப் அல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.

# அஜித் ரசிகர்கள் முற்றுகை; கார்ப்பந்தயத்தில் குழப்பம்!

அஜித்குமார் பங்கேற்ற கார்ப்பந்தயப் போட்டியில் அவரது ரசிகர்கள் அவரை முற்றுகையிட்டமையால் கார்ப்பந்தயத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

சென்னைக்கு அருகிலுள்ள இருங்காட்டுகோட்டையில் நேற்றுமுன்தினம் நடந்த எம்.ஆர்.எப்.பார்முலா 1,600 கார் பந்தயத்தில் நடிகர் அஜித்குமார் கலந்து கொண்டார்.

6 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மீண்டும் ரேஸூற்குத் திரும்பியமையால் போட்டியைக் காண ஏராளமான ரசிகர்கள் குவிந்தனர்.

முதல் பந்தயத்தில் நடிகர் அஜித்குமார் ஓட்டிய காரில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக கடைசி நிமிடத்தில் அவர் பந்தயத்திலிருந்து விலக நேரிட்டது.

இதனால் ஆத்திரமடைந்த சில ரசிகர்கள் இருக்கை ஆசனங்களுக்கருகில் கட்டப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளைக் கிழித்து எறிந்தனர்.

அந்தப் போட்டி முடியும் வரை காத்திருந்த ரசிகர்கள், அந்த போட்டி முடிந்ததும் ஓட்டப் பாதைக்கு அருகில் வந்த நடிகர் அஜித்குமாரைப் பார்க்கும் நோக்கில் ஆசனங்களை விட்டு - தாண்டிக் குதித்து உள்ளே புகுந்தனர்.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஒரே நேரத்தில் அத்துமீறி நுழைந்தமையால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. ரசிகர்களின் முற்றுகையிலிருந்து அவர் தலை தப்பினால் போதும் என்று சாரதிகள் இருக்கும் அறைக்குள் ஓடினார்.

எனினும், ரசிகர்கள் அவரை விடாமல் தேடும் வேட்டையில் ஈடுபட்டனர். இதனைச் சமாளிக்க முடியாமல் போட்டி அமைப்பாளர்கள் திணறினார்கள். பொலிஸாரும் மிகவும் குறைந்த அளவில் இருந்தமையால் சூழ்நிலை சகஜ நிலைக்குத் திரும்புவதற்கு நீண்ட நேரம் பிடித்தது.




இதனால், பந்தயங்கள் ஒரு மணி நேரத்துக்கு மேல் பாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நடிகர் அஜித்குமார், போட்டி சுமூகமாக நடைபெற ரசிகர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்த பின்னரே போட்டியை ஆரம்பிக்க முடிந்தது.

அதோடு அவர் தனது கடைசிப் பந்தயத்துக்கு முன்பும் ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்த பின்னரே கார் பந்தயத்தில் பங்கேற்றார்.

15 சுற்றுகளில் பங்கேற்ற அஜித், 7ஆவது இடத்தை பிடித்தார்.

# ‘சம்பியன் லீக் ருவென்ரி-20’ பாகிஸ்தானுக்கு வாய்ப்பு?

இரண்டாவது ‘சம்பியன் லீக் ருவென்ரி-20’ தொடரில் பாகிஸ்தான் அணியும் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

‘சம்பியன் லீக் ருவென்ரி-20’ தொடர் கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது. இந்தத் தொடரில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உள்ளூர் அணிகள் பங்கேற்றன.

அப்போது மும்பையில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தால் கடைசி நேரத்தில் பாகிஸ்தான் அணி பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது.

‘இந்நிலையில் சம்பியன் லீக் ருவென்ரி-20’ தொடரின் இரண்டாவது தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும் என அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், இந்தப் போட்டித் தொடரை இம்முறை இங்கிலாந்தில் அல்லது தென்னாபிரிக்காவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அவ்வாறு வெளிநாடு ஒன்றில் நடந்தால் இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணியும் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# எனது அறிமுகப் போட்டியில் அசத்தல் சதமடித்தமை மகிழ்ச்சி!

‘‘அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே அசத்தலாக சதமடித்தமை மகிழ்ச்சியளிக்கிறது.’’

- இவ்வாறு தென்னாபிரிக்க வீரர் அல்விரோ பீற்றர்சன் கூறினார்.

இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரராகக் களமிறங்கி - முதல் நாளில் - முதல் இன்னிங்ஸில் 100 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார் பீற்றர்சன்.



நேற்றுமுன்தினம் ஆட்டநேரம் முடிவடைந்த பின்னர் கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

‘‘முதல் டெஸ்ட் போட்டியில் சதமடிப்பது என்பது கிரிக்கெட் வீரர்கள் எல்லோரினதும் கனவாகும். அது என் விடயத்தில் இந்திய மண்ணில் நிறைவேறியிருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது’’ - என்றார்.

# இந்தியா-தெ.ஆபிரிக்கா டெஸ்டிலிருந்து.....

*கல்கத்தாவில் நடைபெற்றுவரும் தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம், ஈடன் கார்டன் மைதானத்தில் 7 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 41 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய கும்ப்ளேயை முந்தியுள்ளார் ஹர்பஜன்.

இந்த மைதானத்தில் 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனில் கும்ப்ளே, 40 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

*தென் ஆப்பிரிக்க அணிக்காக களமிறங்கி முதல் டெஸ்டிலேயே சதமடித்த 3ஆவது வீரர் அல்விரோ பீற்றர்சன் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக அன்ரு ஹட்சன், ஜேக்ஸ் ருடால்ப் ஆகியோர் அறிமுக டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்காக சதமடித்துள்ளனர்.

*251 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகள் என்ற நிலையில் இருந்த தென்னாபிரிக்கா, அதன் பின்னர் 10 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் மேலும் 6 விக்கெட்டுகளை இழந்தது. இந்தியாவுக்கு எதிராக 2ஆவது முறையாக இதுபோன்று சரிவுக்குள்ளானது தென்னாபிரிக்க அணி. 1996-97இல் அகமதபாத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 9 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்தது தென்னாபிரிக்கா. அந்தப் போட்டியில் 96 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த தென்னாபிரிக்கா, மேலும் 9 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

*இந்தியாவுக்கு எதிராகத் தொடர்ந்து 2 போட்டிகளில் சதமடித்துள்ளார் ஹசிம் ஆம்லா. முதல் டெஸ்ட் போட்டியில் அவர் 253 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

*2 டெஸ்ட் போட்டிகளில் ஆம்லா மொத்தம் 367 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இந்தியாவுக்கு எதிராக தென்னாபிரிக்க வீரர் ஒருவர் ஒரு டெஸ்ட் தொடரில் குவித்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முன்னர் 2007-08இல் நீல் மெக்கென்ஸி அதிகபட்சமாக 341 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

*ஆம்லா இந்தியாவுக்கு எதிராக 3 சதங்கள் அடித்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் அவர் எடுத்துள்ள 9ஆவது சதமாகும் இது.

*இந்தியாவுக்கு எதிராக கல்கத்தா மைதானத்தில் 2ஆவது விக்கெட்டுக்காக ஆம்லா-பீற்றர்சன் ஜோடி 209 ஓட்டங்களைச் சேர்த்தமை, 2ஆவது அதிகபட்ச ஓட்டங்களைச் சேர்த்த ஜோடி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

இதற்கு முன்பு 1996-97இல் டேரில் கல்லினன்-கேரி கிர்ஸ்டன் ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 212 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபானிடமிருந்து மீட்கப்பட்ட மார்ஜா நகரில் தேசியக் கொடியேற்றி குதூகலித்தது ஆப்கான்!

மார்ஜா, பெப்.16

தென் ஆப்கானிஸ்தான் மார்ஜா நகரைக் கைப்பற்றிய நேட்டோ - ஆப்கான் கூட்டுப் படைகள் அங்கு ஆப்கானிஸ்தான் தேசியக் கொடியை ஏற்றி வைத்து குதூகலித்தன.

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியிலுள்ள மார்ஜா நகரில் நுழைந்த நேட்டோ படைகள் மிகவும் மெதுவாக அந்த ஊருக்குள் பரவி, ஒவ்வொரு பகுதியையும் வசப்படுத்தி வருகின்றன.

நேட்டோ படைகளின் தாக்கும் திறனையும், ஆயுத பலத்தையும் தெரிந்து வைத்துள்ள தலிபான்கள் நேரடி துப்பாக்கிச் சண்டையில் ஈடுபடவில்லை. மாறாக, நேட்டோ படைகள் மார்ஜா நகரைப் பிடித்து விடாதபடி எங்கும் கண்ணிவெடிகளையும், நாட்டு வெடிகுண்டுகளையும் புதைத்து வைத்துள்ளனர்.

அத்துடன் தலிபான்கள் பல வீடுகளில் குடியிருப்பவர்களை வெளியேற்றிவிட்டு, ஒரு வீட்டில் நுழைந்தால் அந்தத் தெருவின் கடைசி வீடு வரை ஓடுவதற்கு வசதியாக சுவர்களைத் துளைத்து வைத்துள்ளனர். வாய்ப்புக் கிடைத்தால் நேட்டோ படைகளை வீடுகளிலிருந்தே தாக்குவதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எனினும், நேட்டோ படைகளோ வீட்டுக்குள் நுழைந்துதான் உள்ளே இருப்பவற்றைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலில்லை.



உக்கிரச் சண்டையில் நேட்டோ படைகள் ஈடுபட்டிருந்தபோது....

அவை நவீன கருவிகள் பலவற்றை வைத்திருக்கின்றன. நேட்டோ படையினர் வீடுகளிலும், சுவர்களிலும், பாதைகளிலும் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளையும், இதர குண்டுகளையும் கண்டுபிடிக்க உலோகக் கண்டுபிடிப்புக் கருவிகள், கண்ணிவெடிக் கண்டுபிடிப்புக் கருவிகள் ஆகியவற்றைத் தம்மோடு எடுத்துச் செல்கின்றனர்.

நேட்டோ படையினர் வீடுகளுக்குள் ஆட்கள் இருக்கிறார்களா என்பதை உடலிலிருந்து வெளிவரும் வெப்பத்தை வைத்தே காட்டிவிடும் வெப்ப உணர் கருவிகளையும் எடுத்துச் செல்கின்றனர். போதாதக் குறைக்கு, மோப்ப நாய்களையும் கூட்டிச் செல்கின்றனர். அவை தரைகளையும், சுவர்களையும் முகர்ந்து பார்த்தே ஆபத்தை அறிந்து எச்சரிக்கும் விதத்தில் குரைக்கின்றன.

நேட்டோப் படைகளுடன் வரும் ஆப்கானிஸ்தானிய இராணுவச் சிப்பாய்கள் வீடுவீடாக நுழைந்து சோதனை செய்கிறார்கள். அத்துடன், அங்குள்ளவர்களிடம் விசா ரித்து தலிபான்கள் எந்தப் பக்கம் போனார் கள், எங்கே தங்கியிருந்தார்கள் என்ற விவரங்களைச் சேகரித்து விடுகின்றனர்.

நேட்டோப் படைகளிடம் 15 ஆயிரம் சிப்பாய்கள் உள்ளார்கள். நவீன ஆயுதங்கள், படைக்கலன்கள் ஆகியவையும் இருக்கின்றன. எனினும், சுமார் ஆயிரம் பேரை மட்டுமே கொண்டுள்ள தலிபான்கள் விரித்திருக்கும் நாச வலையை அறுப்பதற்குப் பல நாள்களாகும் என்று தெரிகிறது.

உள்ளூர் மக்களும் தலிபான்களின் பிடியிலிருந்து தமது ஊர்கள் விடுபட்டு சுபீட்சம் அடையவேண்டும் என்ற நினைப்பில் நேட்டோப் படைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கின்றனர். ''சகோதரர்களே! உங்களை அரவணைத்து முன்னேற்ற எங்களுக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள்'' என்று ஜனாதிபதி ஹமீத் கர்சாய் சனிக்கிழமையே அழைப்பு விடுத்திருக்கிறார். அதை மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சிறுவர்களுக்கு சொக்லேட், பொம்மைகள் ஆகியவற்றைத் தந்து அவர்களை படையினர் நண்பர்களாக்குகின்றனர். பெரியவர்களைப் புகைப்படம் எடுக்கின்றனர். இராணுவம் வசப்படுத்திய ஊரைப் போலவே மார்ஜா இல்லை. அங்கு பயமோ, பதற்றமோ காணப்படவில்லை.

# ஆப்கான் ஏவுகணைத் தாக்குதலில் 12 பொதுமக்கள் பரிதாப மரணம்

## நேட்டோ தளபதி வருத்தம் தெரிவிப்பு

காபூல்,பெப். 16

தென் ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்ட் பகுதியில் நேட்டோப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் குறி தவறி 12 பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கு அப்படைத் தளபதி ஜெனரல் ஸ்டேன்லி மக்கிறிஸ்டல் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் நேட்டோப் படையினர் நடத்திய தாக்குதலில் தவறுதலாக 12 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தென் ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்ட் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டு ரொக்கட் தாக்குதல்கள் இலக்குத் தவறி, பொதுமக்களைத் தாக்கியுள்ளன. இந்தப் பரிதாபகரமான சம்பவம் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது என்றும் இச்சம்பவம் குறித்து தான் வருந்துகிறார் என்றும் நேட்டோ படைத் தளபதி ஜெனரல் ஸ்டேன்லி மக்கிறிஸ்டல் தெரிவித்துள்ளார்.

சிவிலியன் இழப்புகள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்ஸாய் உத்தரவு பிறப்பித்துள்ளார். சிவிலியன் இழப்புக்களைத் தவிர்க்கும் வகையில் இராணுவ முன்நகர்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் நேட்டோ படையினரிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

2001 ஆம் ஆண்டின் பின்னர் தலிபான் தீவிரவாதிகள் மீது நேட்டோப் படையினர் மேற்கொண்ட பாரிய தாக்குதலாகத் தற்போதைய தாக்குதல் கருதப்படுகின்றது.

# வட கிழக்கு ஆப்கானில் பனிப்புயல் நீடிப்பு இதுவரை 196 பேர் பலி; 130 பேர் காயம்

காபூல் ,பெப்.16

ஆப்கானிஸ்தானின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து பெய்துகொண்டிருக்கும் பனிமழையால் 196 பேர் வரை உயிரிழந்துள்ளனர். அத்துடன் 130 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கலாங்பாஸ் பகுதியில் இடம்பெற்ற பனிமழையால் அப்பகுதியில் பனிப்பாறைகள் நிறைந்து காணப்படுகின்றன.

இதேவேளை, வானம் முழுவதும் இருண்டு காணப்படுகிறது. அப்பகுதிகளில் பனிப்பாறைகள் நிறைந்து காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பனி உறைவில் சிக்கியவர்களை மீட்கும் பணியிலும் மீட்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அத்தோடு மோப்ப நாய்களையும் தாம் மீட்புப்பணியில் ஈடுபடுத்தியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அருவிகள் ஓடும் பள்ளத்தாக்குப் பகுதிகளுள்ள மலைப்பகுதிகளில் வீதிகளில் வாகனங்கள் பனியால் ஆழப் புதைந்து காணப்படுகின்றன என பனிப்பாறைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை. திங்கட்கிழமையளவில் இப்பனிப்பாறைகள் அகற்றப்பட்டுவிடும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற மிக மோசமான ஒரு இயற்கை அனர்த்தம் இதுவென பத்திரிகை நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிய அரசு சர்வதேச நாடுகளின் உதவியுடன் இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. தேவையான பொருட்கள், உலோகக் கருவிகள் மற்றும் ஏனைய உதவிகள் ஆகியவை சகிதம் இப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.


உ
சிவமயம்

சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

பார்வதி பரமேஸ்வரன் திருவருளை முன்னிட்டு ஸ்வஸ்தி ஸ்ரீ விரோதி வருஷம் மாசித் திங்கள் 5ஆம் நாள் (17.02.2010) புதன் கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் வளர் திருதியை திதியும் சித்த யோகமும் கூடிய காலை 9மணி முதல் 9.40மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில்



திருகோணமலை திருக்கோணேஸ்வரசுவாமி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ குமாரசாமி குருக்கள் கேதீஸ்வர கௌரிபாலக்குருக்கள் (கொக்குவில்) அவர்களின் புத்திரன்

சிரஞ்ஜீவி பிரம்மஸ்ரீ லிங்கேஸ்வரசர்மா

அவர்களுக்கு பஞ்ச குண்ட சகித

ஆச்சார்யாபிஷேகம் செய்ய, விஷேஷ தீட்சை, நிர்வாண தீட்சை (குருப்பட்டம் வழங்கல்) மாதுமையாள் உடனுறை கோணேஸ்வர பெருமானின் திருவருளுடன் பெரியோர்கள் ஆசியும் கைகூடியிருப்பதால் ஷ முகூர்த்தத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

ஷ முகூர்த்தம் இந்து சமய பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம் ஸ்ரீ சிவகாமி உடனுறை சிதம்பரேஸ்வரர் திருசந்நிதியில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

தொலை பேசி எண்:
0771531408
0772397479

சிவஸ்ரீ கு.கேதீஸ்வரகௌரிபாலகுருக்கள் தம்பதிகள்,
சிவஸ்ரீ க.சிவரூபக்குருக்கள் தம்பதிகள்,
சிவஸ்ரீ ச.குமாரசாமிசர்மா தம்பதிகள் (கொழும்பு).

(94911)


# உலகிலேயே சிறந்த நகரங்களில் கனடா வான்கூவருக்கு முதலிடம்

உலகிலேயே சிறந்த நகரங்களில் கனடாவின் வான்கூவர் நகரம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. உலகில் மோசமான நகரங்களில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு இரண்டாமிடம் கிடைத்துள்ளது.

பொருளாதார நுண்ணறிவுப் பிரிவு உலகில் உள்ள நகரங்களின் நிலைமை குறித்து ஆய்வு செய்தது. இதில் கட்டமைப்பு, சுகாதாரம், கலாசாரம், சுற்றுச்சூழல், கல்வி மற்றும் குற்ற நிகழ்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் 140 நாடுகளின் தலைநகரங்கள் உட்பட மெட்ரோபொலிட்டன் நகரங்களில் ஆய்வு நடத்தப்பட்டது.

இதில் 98 சதவீத மதிப்பெண் கனடாவின் வான்கூவர் நகருக்குக் கிடைத்தது. இந்நகரம் தான், உலகிலேயே சிறந்த நகரம் என அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

உலகின் மோசமான நகரங்களின் வரிசையில் முதலிடம் பிடித்திருப்பது சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரே(37.5 மதிப்பெண்). இரண்டாமிடம் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவுக்கு (38.7 மதிப்பெண்) கிடைத்துள்ளது. மூன்றாவது இடம் அல்ஜீரியா நாட்டின் தலைநகர் அல்ஜியர்ஸ்க்குக் கிடைத்துள்ளது.

உலக அரங்கில்

# ஏமனில் 'ஹெலி' விபத்து: சிப்பாய்கள் 10 பேர் மரணம்

சானா, பெப். 16

ஏமனில் இராணுவ ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கியதில் இராணுவ கேர்னல் உட்பட 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

தலைநகர் சானா பகுதியில் மலைப் பாங்கான இடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சம்பவம் நிகழ்ந்த பகுதியில் பயங்கரவாதிகள் ஆதிக்கம் அதிகம். அங்கு கடந்த 6 மாத காலமாகப் பயங்கரவாதி களை ஒடுக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

[illegible] மலைப் பகுதியில் ஹெலிக் கொப்டர் விழுந்து நொறுங்கியதை தாங்கள் கண்டனர் என உள்ளூர்வாசிகள் தெரிவித்தார்கள். விபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்புத்துறைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மர்மப்பொருள் வெடிப்புச் சம்பவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா சடலத்தைப் பார்வையிடுவதையும், பொலிஸாரிடம் நீதிவான் சம்பவம் குறித்துக் கேட்டறிவதையும் மர்மப்பொருள் வெடித்த இடம் மற்றும் சிதறல்களை நீதிவான் அவதானிப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.
(படங்கள் : உமா, நேசன், தமிழினியன், நந்தன்.)

## வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின்
# வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் கூடுதல் பிரயாணப் படி வழங்குக!

சண்டிலிப்பாய், பெப். 16

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வருமானப் பரிசோதகர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் போக்குவரத்திற்கான படியை ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்குவது போல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அகில இலங்கை உள்ளூராட்சிச் சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பாகுபாடான முறையில் பிரயாணப்படி வழங்கப்பட்டு வருவது குறித்து சம்மேளனத்தின் இணைப்பாளர் எஸ். சந்திரகுமார் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிவரும் வருமான மேற்பார்வையாளர், பரிசோதகர்கள் ஆகியோருக்குக் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகப் பிரயாணப் படியாக 120 ரூபாவில் இருந்து 140 ரூபாவரையே வழங்கப்பட்டு வருகிறது.

வடக்கு மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வருமானப்பரிசோதகர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் கடமையாற்றி வருபவர்களுக்கு வெளிக்களப் பிரயாணப் படியாக 1,250 ரூபாவில் இருந்து 2,500 ரூபா வரை வழங்கப்பட்டு வருகின்றது. மாகாணசபை ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே இக்கொடுப்பனவு அவர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

பாகுபாடான முறையில் வழங்கப்பட்டு வரும் இக்கொடுப்பனவு குறித்துப் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் கவலையும், அதிருப்தியும் அடைந்துள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்குப் பல தடவைகள் தெரிவித்திருந்தும் இன்று வரை எந்தவித முன்னேற்றமும் கிடைக்கவில்லை. எனவே வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இந்த நேரத்தில் ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றுபவர்களுக்கு வழங்கப்படும் பிரயாணப்படி போல் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் பிரயாணப் படியை அதிகரித்து வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஒ-115)

## மர்மப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் தரம் 5 இல் படிக்கும் - இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருந்த - இரு மாணவர்களுக்கே இந்தக் கதி நேர்ந்திருக்கின்றது.

அரியாலை ஏ.வி. வீதியைச் சேர்ந்த த. இராம்சிங் (வயது - 10), கொழும்புத்துறை, இலந்தைக்குளம் வீதியைச் சேர்ந்த ஆரோக்கியநாதன் லக்ஷ்மன் (வயது - 10) ஆகிய இருவருமே உயிரிழந்திருக்கின்றனர்.

இவர்கள் இருவரும் நேற்றுப் பிற்பகல் 2.20 மணியளவில் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம், கொழும்புத்துறைப் புங்கன்குளம் வீதியில், புளியடிச்சந்திக்கு அருகில் வீதியோரத்தில் உள்ள வெறும் வளவில் குப்பைக்குள் இருந்து மர்மப் பொருள் ஒன்றைக் கண்டெடுத்திருக்கின்றனர். நீண்ட காலம் கைவிடப்பட்ட நிலையில் கிடந்த ஒரு ஷெல்லாகவோ அல்லது வெடிகுண்டாகவோ அல்லது மிதிவெடியாகவோ அது இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

அதனை எடுத்து விளையாடிய இச்சிறுவர்கள் அதனை நடுவீதியில் நிலத்தில் குத்திப் பார்க்க முயற்சித்த போது அது திடீரென வெடித்தது என்றும் கூறப்பட்டது.

அதேவேளையில் பாடசாலை முடிந்து வீதியால் வந்து கொண்டிருந்த வேறு சில மாணவர்களும் இந்தக் குண்டுச் சிதறலால் காயமுற்றனர். அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு விரயப்பட்டு, அங்கு சேர்க்கப்பட்டனர். ரி.இராகுலன் (வயது - 09), ரி.தனோஜன் (வயது - 10), எம்.பெனிஸ்டன் (வயது - 16), ஆர். சிவாஜினி (வயது - 19) உட்பட ஆறு பேரே காயமுற்றனர்.

அந்த மர்மப்பொருள் வெடித்த இடத்தில் வீதியில் சிறிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. அதைச் சூழ்ந்த பிரதேசத்தில் இரத்த வெள்ளம் காணப்பட்டது.

யாழ். நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா சம்பவஇடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். (அ-224-14-23-86-78)

## மரதன் ஓட்டப்போட்டி

சுன்னாகம், பெப்.16

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை ஒட்டி இன்று செவ்வாய்க் கிழமை காலை 6மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கான 5கி.மீ தூரமுடைய மரதன் ஓட்டப்போட்டியும், மாணவிகளுக்கான அதே தூரமுடைய சைக்கிளோட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன. (1-38)

## ஸ்ரீ இராம கிருஷ்ணர் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், பெப்.16

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 175 ஆவது ஜெயந்தி தின நிகழ்வுகள் தாவடியில் உள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இதில் இன்று மாலை 5 மணிக்கு ஜெயந்திதின நிகழ்வும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை ஜெயந்திவிழா நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜெயந்திவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க.சிவனேசனும், சிறப்பு விருந்தினராக இணுவில் திருநெறிய தமிழ் மறைக்கழகத்தலைவர் ச.முகுந்தனும் கலந்துகொள்வர்.

அத்துடன் இந்த நிகழ்வில் டெங்கு விழிப்புணர்வு [illegible] நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஒ-16)

## பொன்சேகா கைது விவகாரத்தால்
# பௌத்தமத குருமார்கள் மத்தியில் எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள்

கொழும்பு, பெப். 16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கைது தொடர்பாக பௌத்த மதகுருமார் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன என இணையத்தளச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பௌத்த மதத்தின் முக்கிய பீடாதிபதிகள் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அதேவேளை, வேறு சிலர் பொன்சேகாவுக்கு எதிரான அரசின் நடவடிக்கையை நியாயப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

பொன்சேகாவுக்கு ஆசீர்வாதம் வேண்டித் தாங்கள் ஏற்பாடு செய்திருந்த வழிபாட்டு நிகழ்வுகளை நிறுத்துமாறு தாங்கள் துன்புறுத்தப்படுகின்றனர் என அரசுக்கு எதிரான பௌத்த குருமார் திங்கட்கிழமை குற்றம் சாட்டியுள்ளனர்.

பொன்சேகாவுக்கு ஆதரவாக மத நிகழ்வுகளை மேற்கொள்ள வேண்டாமென மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை இவ்வாறான வழிபாட்டு நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் அரச ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

அத்துருகிரியவில் இவ்வாறான சமய வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை வாகனங்களில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் பொன்சேகா ஆதரவாளர்களைத் தாக்கியுள்ளனர் என்றும் மதகுருமார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சில பௌத்த குருமார் அரச ஊடகங்களில் தோன்றி பொன்சேகாவுக்கு எதிரான கருத்தை வெளியிட்டுள்ளமையுடன் அவர் கைது செய்யப்பட்டமையை நியாயப்படுத்தியுமுள்ளனர்.

இது, சரத் பொன்சேகா விடயத்தில் பௌத்த மதகுருமார் மத்தியில் இரு வேறு கருத்துகள் காணப்படுகின்றமையைப் புலப்படுத்துகின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஒ-சி)

# இன்று முதல் 23 ஆம் திகதி வரை தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, பெப். 16

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை இன்றுமுதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அந்தந்தப் பிரதேச தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இதேவேளை, நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையை இருமடங்காக அதிகரிக்கத் தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

பொதுத் தேர்தலின்போது அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுவதனால் துரிதகதியில் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ஒ-சி)

## ஜனாதிபதித் தேர்தலுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவல்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசின் சார்பில் தற்போது அமைச்சர்களாகவும், எம்.பிக்களாகவும் உள்ள அனைவரும் போட்டியிடுவர். அவர்கள் அனைவரும் எமது வேட்பாளர் தெரிவுக்குழுவுக்கு விண்ணப்பங்களை ஒப்படைத்துள்ளனர்.

மூன்று மாகாணங்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு வேட்பாளர் தெரிவுக்குழு எம்மால் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தமாக ஒன்பது மாகாணங்களுக்கும் இத்தகைய மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக மேன்முறையீட்டுச் சபை ஒன்று உள்ளது. வேட்பாளர் தெரிவில் பெயர் நிராகரிக்கப்பட்டவர்கள் விரும்பினால், இந்தச் சபையிடம் மேன்முறையீடு செய்யலாம்.

**ஆயிரம் புதியவர்கள் விண்ணப்பம்**

அரசின் சார்பில் போட்டியிட ஆயிரம் புதியவர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் இம்மாதம் 21 ஆம் திகதி வேட்பு மனுக்களில் கையெழுத்திடுவர். இன்று (அதாவது நேற்று) மாவட்டத் தலைவர்கள் ஜனாதிபதியின் தலைமையின்கீழ் வேட்பு மனுக்களில் கையெழுத்திட்டனர்.

இத்தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாம் செய்து வருகிறோம். எமது வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை மீறி நடந்தால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. அதேவேளை, அவ்வாறானவர்கள் வெற்றி பெற்றாலும் அவர்களுக்கு அமைச்சுப் பதவி எதையும் வழங்குவதில்லை என்றும் கட்சி முடிவெடுத்துள்ளது.

இத்தேர்தலில் புதிய தேர்தல் விஞ்ஞாபனம் எதுவும் வெளியிடப்படமாட்டாது. ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனமே இத்தேர்தலுக்கும் பொருந்தும்.

இத்தேர்தலில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையை எமக்கு வழங்குமாறு நாம் இந்நாட்டு மக்களிடம் கேட்கின்றோம். அதேபோல் கட்சிகளிடமும் இக்கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களின் முடிவுகளைப் பார்க்கும்போது எமக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. - என்றார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நீதிபதிகள் மூவர் கொண்ட ஆயத்தில் பொன்சேகாவின் விசாரணைகளை நடத்த முஸ்தீபு

## அரச வட்டாரங்களிலிருந்து தகவல்

கொழும்பு, பெப். 16

தடுப்புக்காவலிலுள்ள பொன்சேகா தம்மை இராணுவ நீதிமன்றில் விசாரிக்க முடியாது என்றும் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற தாம் சாதாரண பொதுமகன் என்றும் வலியுறுத்திவரும் அதேவேளை, அவரை மூவர் அடங்கிய இராணுவ நீதிபதிகளின் முன்னால் விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொன்சேகா மீதான விசாரணைகளை மேற்கொண்டு ஆதாரங்களை சேகரிக்கும் பொறுப்பை படைகளின் பிரதானி தயா ரத்நாயக்கவிடம் ஒப்படைத்துள்ளார் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரியா.

ஆனால், இராணுவ விசாரணைகளுக்குத் தாம் முகம் கொடுக்கப்போவதில்லை என்றும் தன்னை சாதாரண பொதுமகன் என்ற வகையில், சிவில் நீதிமன்றிலேயே விசாரணை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்திவரும் பொன்சேகா, இராணுவ விசாரணைகள் தொடர்பில் இன்னமும் எந்த தகவலையும் வெளியிட மறுத்து வருகிறார்.

இதேவேளை, பொன்சேகா தொடர்பான ஆதாரங்களை சேகரித்த பின்னர், அவர் மீதான இராணுவ நீதிமன்ற விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னாள் படைகளின் பிரதானியும் விமானப்படை தளபதியுமான ரொஹான் குணதிலக்க தலைமையில் முன்னாள் இராணுவத் தளபதிகளான ரொஹான் தளுவத்த மற்றும் சாந்த கோட்டேகொட ஆகியோர் அடங்கிய மூவர் அடங்கிய குழு ஒன்றை நியமிப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு முடிவெடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நீதிமன்றில் விசாரிக்கப்படும் நபரை விசாரணை செய்வதற்கு அவருக்கு சமமான அல்லது கூடிய தகுதியுடைய அதிகாரிகள் கொண்ட குழுவினரையே நியமிக்கவேண்டும் என்ற சட்டத்திற்கேற்ப மேற்படி விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தடுப்புக்காவலிலுள்ள பொன்சேகா இராணுவ விசாரணைகளுக்கு எந்தப் பதிலும் அளிப்பதில்லை என்று விடாப்பிடியிலிருப்பதால், அவர் தொடர்ந்து இந்த நிலைப்பாட்டை கடைப்பிடித்தால், என்ன நடவடிக்கை எடுப்பது என்பதில் பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் சட்டக் குழப்பநிலை காணப்படுகிறது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## பிக்குகள் முன்னணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிபொருள்கள் இருக்கின்றன எனத் தகவல் கிடைத்துள்ளமையை அடுத்து அதனைச் சோதனையிடத் தாங்கள் வந்துள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், அதன் ஒரு பகுதியைச் சோதனையிட்டனர். எனினும், நாங்கள் சோதனையிடுவதற்கான அனுமதியுள்ளதா எனக் கோரினோம். பொலிஸார் தங்களால் அனுமதி இல்லாமலும் அந்த இடத்தைச் சோதனையிட முடியும் எனக் கூறித் தமது நடவடிக்கையை ஆரம்பித்தனர்'' - என்று பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் பௌத்த மதகுருமார்களின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து பொலிஸார் அங்கிருந்து சென்றனர் எனவும் தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

பொலிஸார் அங்கு பிரசன்னமாகியிருந்த பௌத்த மதகுருமாரிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்றனர் எனவும், குறிப்பிட்ட அலுவலகத்தில் என்ன நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என வினவினர் எனவும் தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவான வழிபாடுகளை நடத்துவதைக் குழப்பும் முயற்சிகள் இடம்பெறுவது பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் அனுப்பிய சிலமணி நேரத்தில் தேசிய பிக்குகள் முன்னணியின் அலுவலகத்தைப் பொலிஸார் சோதனையிட முயன்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட கடிதத்தில், சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக சமய நிகழ்வுகளை நடத்த வேண்டாமெனக் குறிப்பிட்ட குழுவொன்று மிரட்டியுள்ளமையைச் சுட்டிக் காட்டியிருந்த தேசிய பிக்குகள் முன்னணி, அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பௌத்த மதத்துக்கு முழுமையான பாதுகாப்பை வழங்குமாறு அக்கடிதத்தில் கோரியிருந்தது. (ஒ-சி)

## பொன்சேகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் பொன்சேகாவை விசாரிக்கும். விரைவில் இராணுவ நீதிமன்றம் முன் அவர் நிறுத்தப்படுவார் என அரசுத் தகவல் தெரிவித்தது.

எனினும், இது குறித்து கருத்துத் தெரிவிப்பதற்குத் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் குலுகல்ல மறுத்துள்ளார்.

இது பொதுமக்களுக்கான விசாரணையல்ல. இதனால் ஊடகங்களுக்கு இது குறித்துத் தாம் தெரியப்படுத்தப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.(ஒ-சி)

## பொன்சேகாவின் மருமகனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் வசிக்கும் இடம் குறித்து தகவல்கள் தெரியாத நிலையில், அவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்து ஒன்றைப் பிறப்பிக்குமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான், தனுன திலகரட்னவைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்தைப் பிறப்பித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


சுடர் ஒளி
THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வார மலர்
(பெப்14-பெப்20)



❊ மாகாணத்திலிருந்து கிராமத்துக்கு!
❊ மஹிந்த சிந்தனைவாதிகள் மஹாதன முத்தர்களா?
❊ வளைந்து போனதொரு போர்வாளின் கதை!
❊ பிரசவ வலி ஒரு புறம் கணவனின் இழப்பு மறுபுறம் [உயிர் வலிக்கும் கணங்களில்]
❊ தமிழ்க்கட்சிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்
❊ தி.மு.க பாய்ச்சல்
மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்
இப்போது கொழும்பு விலையிலேயே (ரூ 25) விற்பனையாகிறது
உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்


# மட்டுப்படுத்தப்பட்ட அமைச்சரவையே தேர்தலின் பின்னர் அமைக்கப்படுமாம்

## அதுவே ஜனாதிபதியின் திட்டம் என அரசுத் தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் இப்போது இருப்பதுபோல் அல்லாமல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட - உறுதியான - அமைச்சரவை ஒன்றை அமைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுக் கூறினார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இடம்பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலிலும் நாமே வெற்றிபெறுவோம். அந்த வெற்றியை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வெற்றியாக மாற்ற நாம் திட்டமிட்டுள்ளோம். அந்தப் பெரும்பான்மையை மக்கள் நிச்சயம் எமக்கு வழங்குவர்.

எதிர்க்கட்சிகள் படுதோல்வியடைவது நிச்சயம். ஜனாதிபதித் தேர்தலின்போது ஓரணியில் நின்ற எதிர்க்கட்சிகள் அனைத்தும் இப்போது பிரிந்து நிற்கின்றன. அவர்களிடம் சின்னம் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது.

அக்கட்சிகள் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கும் தீய எண்ணத்துடன் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலின்போது செயற்பட்டன. இப்போது அக்கட்சிகள் இடையே பிளவு ஏற்பட்டுவிட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் இப்போது இருப்பதுபோல் அன்றி மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட - உறுதியான - அமைச்சரவை ஒன்றை அமைக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் - என்றார். (ஒ-சி)



பொன்சேகா கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று சிறிகோத்தா முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது...

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி இவர் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான விண்ணப்பப்படிவத்தை விரைவில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பிடம் கையளிப்பார் எனவும் கூறப்படுகிறது. (சி)

## பொன்சேகாவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் 5 லட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (சுமார் ஐந்து கோடி முப்பது லட்சம் ரூபா) இருப்பதைக் கண்டுள்ளனர்.

இது தொடர்பாக தனுனாவின் தாயாரின் வாக்குமூலத்தைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பெற்றுள்ளனர்.

பாதுகாப்புப் பெட்டகத்தில் காணப்பட்டது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பணம் என்றும் பொன் சேகா கேட்டுக்கொண்டமைக்கு இணங்கத் தாம் அதனை அங்கு பாதுகாப்பாக வைத்திருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார் என அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


**விற்பனையாகிறது**
★ தரம் 1முதல் 5வரை - சுற்றாடல்
ஆக்கம்: ஏ.எஸ்.ஜெனபர்
★ தரம் 1முதல் 5வரை ENGLISH (MILLENNIUM)
ஆக்கம்: S.F.R.A. CADAR
யாழ்.மாவட்ட விற்பனையாளர்:
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம். தொ.பே 0212229881



**வெளிவந்துவிட்டது**
தரம் 5 புலமைப்பரிசில் - 2010
"குறிஞ்சி"
புத்தம் புதிய வெளியீடு
ஆக்கம்: நிசானாஹில்மி
யாழ்.மாவட்டத்தில்:
அன்னை புத்தகசாலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
நிசானா ஹில்மி, மடவளை, கண்டி.
(C/564922)



**தவறிவிட்டது**
பலாலி வீதியில் கோண்டாவிலுக்கும் கந்தர்மடத்திற்கும் இடையில் கைடக்க தொலைபேசி தவறிவிட்டது. மிக முக்கியமான தொலைபேசி இலக்கங்கள் அத்தொலைபேசியில் உள்ளதால் கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு- சுதர்ஷன்
(C/564924)


## கூட்டுத்தாபனத் தலைவர்களின் பதவிவிலகல் தற்காலிகமாக இடை நிறுத்தம்?

கொழும்பு, பெப். 16

அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனத் தலைவர்களின் ராஜினாமாக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீள் அறிவிப்பு விடுக்கப்படும் வரையில் தொடர்ந்தும் தலைமைப் பொறுப்பை வகிக்குமாறு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால் உரிய அமைச்சுகளின் ஊடாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சகல அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களையும் பதவி விலகுமாறு அண்மையில் அரசு கோரிக்கை விடுத்திருந்தது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரையில் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாது எனவும், அதன் பின்னர் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

## கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.


**வாடகைக்கு**
சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் 2½ பரப்பு (666 சதுர m) விஸ்தீரணம் கொண்ட காணியில், கட்டடப் பணியின் ஆரம்ப பணிகள் பூர்த்தியாகிய நிலையில் வங்கிகளுக்கோ, நிறுவனங்களுக்கோ அல்லது நிறுவனங்களின் பயன்பாட்டிற்கோ ஏற்ப மிகுதி வேலை உங்கள் விருப்புக்கு ஏற்றவகையில் நீண்ட கால, குறுங்கால அடிப்படையில் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு :- க. தம்பிராசா, காந்தகிரி, கந்தரோடை
T.P - 021 300 6032
(94888)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2010இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.